14.03.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*

களம் - 01. சூரியன் -28 பக்கம் :32 விலை: 15/=



பொல்லையும் கொடுத்து

அடியையும் வாங்கும்

இலங்கை அரசாங்கம்



# புகழ் வந்தால் தலைக்கனமும் வருமோ?

சர்ச்சையில் சிக்கிய மலிங்க

# தொழில் நிலையங்களில் கசக்கிப் பிழியப்படும் தனியார் ஊழியர்கள்!



நாட்டில் அரசுதுறையில் வேலை செய்வோரை விட தனியார் துறையில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையே அதிகம். இவ்வாறு வவுனியா மாவட்டத்தில் தனியார் துறையில் வேலை செய்கின்ற ஊழியர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக குறிப்பிடப்படுகின்றது.

குடும்பப் பொறுப்பு காரணமாகவும் நாட்டில் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு காரணமாகவும் தாமும் சொந்தக் காலில் நின்று உழைத்து முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் வயது வேறுபாடு இன்றி தனியார்த்துறையில் வேலைவாய்ப்புகளை பெறுவோர் தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளன.

சனத்தொகைக்கு ஏற்ப வேலைவாய்ப்புகள் இன்மையால் தனியார்த்துறை வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதில் கூட ஒருவித போட்டி காணப்படுகின்றது. இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சில தொழிலதிபர்களும் முதலாளிகளும் ஊழியர்களின் உரிமைகளை மதிப்பதாகத் தெரியவில்லை.

தனியார் நிறுவனங்கள், கம்பனிகள், வியாபார நிலையங்கள், கல்வி நிலையங்கள் என வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இங்கு வேலை செய்கின்ற ஊழியர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதில்லை என வவுனியா மாவட்டத்தில் சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் தனியார் துறையில் குறிப்பாக கடைகளில் வேலைசெய்பவர்களுக்கு மிகக் குறைந்த அளவிலான சம்பளமே வழங்கப்படுகின்றது. 5000 தொடக்கம் 20,000 வரையிலான தொகை வழங்கப்பட்டு வருகின்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு சம்பளம் வழங்கப்படுகின்ற அதேவேளை, ஆரம்பத்தில் பயிற்சி எனக்கூறி மிகச்சிறிய அளவிலான சம்பளமும் 06 மாதம் கழிந்தபின் சிறிய அளவில் சம்பள உயர்வும் வழங்கப்படுவதாக அங்கு வேலை புரிவோர் குறிப்பிடுகின்றனர்.

அரச துறையில் வேலை செய்பவர்களுக்கு சம்பளம் எவ்வாறு வழங்கப்படவேண்டும் என வரையறை இருப்பது போல் தமக்கும் இருக்கவேண்டும் என்பதே தனியார்த்துறை ஊழியர்களின் வேண்டுகோளாகும்.

இது தொடர்பாக தனியார்த் துறையில் வேலை செய்யும் செ.கவிதா (வயது 20) என்பவரைக் கேட்டபோது,

"நான் கடையில கடந்த ஒரு வருஷமா வேலை செய்யுறன். 8 மணிக்கு வந்து மாலை 6 மணிக்குத்தான் வீட்ட போறன். எனக்கு 8000 ரூபாய் சம்பளம் கிடைக்குது. பஸ்ஸில வந்து போக மாதம் 3000 ரூபாய் முடிஞ்சிடும். மிச்சத்தத்தான் வீட்ட குடுக்கிறன்" என்றார்.

தனியார் வியாபார நிலையங்களில் வேலை செய்கின்ற பெண்களுக்கு மலசலகூட வசதி, அறை வசதி என்பன இல்லாது பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மாதத்தில் சில நாட்கள் லீவு அவசியமாகத் தேவை எனக் கேட்கின்ற சந்தர்ப்பத்தில் கூட சிலர் லீவு வழங்குவதில்லை எனவும் பெண் ஊழியர்கள் கூறுகின்றனர். சில முதலாளிகள் பெண்களை இம்சைப்படுத்துவதாகவும், பெண்கள் எதிர்காலம் கருதி அவற்றை வெளிப்படுத்துவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை செல்கின்ற வயதில் உள்ள சிறுவர்கள் கூட வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். ஞாயிறு அரச விடுமுறை நாளாக இருக்கின்றபோது சில தனியார் கடைகள் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்காது ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடையைத் திறப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பல்பொருள் விற்பனை நிலையத்தை நடத்தும் எஸ்.நவரட்ணராஜா என்பவரைக் கேட்டபோது, "ஞாயிற்றுக்கிழமையில லீவு விட விருப்பம்தான். ஆனா பூட்சிற்றி, சுப்பர் மார்க்கெட் எல்லாம் ஞாயிறில திறக்குது. அதால எங்கட கஸ்டமர் அங்க போறாங்க. நாங்க மட்டும் பூட்டினா பணக்காரங்க மக்களை சுரண்டி இன்னும் பணக்காரனா வர நாங்க இப்படியே இருக்கவேண்டியதுதான்" என்றார்.

இதேவேளை வவுனியா மாவட்ட தனியார் ஊழியர் சங்கம் சரியான முறையில் இயங்காது அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதாகவும் ஊழியர்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரவில்லை எனவும் கூறப்படுகின்றது.

வவுனியா தனியார் ஊழியர் சங்கத் தலைவர் என்.பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார். ஊழியர் தொடர்பான எமது அமைப்பை பதிவு செய்வதற்காக வவுனியா தொழில் திணைக்களத்திடம் கடந்த ஆறுமாதங்களுக்கு முன்பே ஆவணங்களை வழங்கி விட்டோம். ஆனால், பதிவு ஆகி இன்னும் வரவில்லை. இதனாலே புதிய அங்கத்தவர்களை இணைத்து பெரியளவில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியாதுள்ளது. பதிவு வரும் வரை காத்திருக்க வேண்டும் என்கிறார்.

தனியார்த்துறை ஊழியர்களுக்கு சரியான முறையில் லீவு வழங்கப்படுவதில்லை என்பதற்கு அப்பால் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பனவும் சீராக வழங்கப்படுவதில்லை. முதலாளிகளுக்கு பயந்தும், வேலை கிடைக்காது போய்விடும் எனக் கருதியும் ஊழியர் இவற்றை வெளிப்படுத்த பயப்படுகின்றனர்.

வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் திருமதி எல்.ஆனந்த நடராஜா என்பவரைத் தொடர்பு கொண்டபோது, வவுனியா மாவட்ட தனியார் ஊழியர் சங்கத்தின் ஆவணம் பதிவுக்காக அனுப்பப்பட்டுள்ளது. யாப்பில் திருத்தங்கள் இருந்ததால்தான் பதிவு தாமதமம் ஆகின்றது. வவுனியா நகரில் உள்ள கடைகளில் வேலைசெய்கின்ற உத்தியோகத்தர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை வழங்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றோம்.

ஆனால், சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால், வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு கட்டாயமாக ஒன்றரை நாள் விடுமறை வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றோம். ஊழியர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதியளவிலான ஆதரவுகள் கிடைக்கவில்லை. ஆயினும் முறைப்பாடுகள் கிடைக்கின்றபோது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததுடன் வவுனியா மாவட்டத்தில் 06 தொழில் உத்தியோகத்தர்கள் இருக்கவேண்டிய நிலையில் தற்போது இருவர் மாத்திரமே உள்ளனர். இதனால் வேலைகளை முன்னெடுப்பது கடினமாக உள்ளதுடன் கடைகளில் ஊழியர் தொடர்பான ஆவணங்களும் சரியாகப் பேணப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

எனவே, குடும்ப வறுமை காரணமாகவும் நாட்டில் நாமும் நமது சொந்த உழைப்பில் வாழ வேண்டும் என்னும் நோக்கத்துடனும் தனியார் தொழில் வாய்ப்புக்களை பெறுகின்ற ஊழியர்களையும் மனிதர்களாக மதித்து அவர்களது உரிமைகளைப் பெற பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பதை காலமே தீர்மானிக்கும்.

கே.வாசு




டெஸ்போர்ட் நானுஓயா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மஹா சிவராத்திரி பூஜையை முன்னிட்டு சிறப்பு பூஜைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கோயில் பரிபாலன சபையினர் மற்றும் ஸ்ரீ சக்தி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் பிரதம அதிதியாக தோட்ட வைத்தியர், கிராம உத்தியோகத்தர் மற்றும் தோட்ட பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

உ. சந்ரு, நானுஓயா

# வைத்தியர் இன்றி மூடப்பட்டுக் கிடக்கும் எல்பட வைத்தியசாலை





மலையக பெருந்தோட்டங்களில் இயங்கும் வைத்தியசாலைகள் இன்று பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. தோட்ட வைத்தியசாலைகளுக்கான நிதி உதவிகளை ட்ரஸ்ட் நிறுவனம் முன்னெடுத்து வந்தாலும் தோட்டப்புறங்களில் இயங்குகின்ற வைத்தியசாலைகள் முறையாக இயங்குவதில்லை.

அந்த வகையில் நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவை எல்பட மேல்பிரிவுத் தோட்ட வைத்தியசாலையானது சுமார் நான்கு வருடகாலமாக வைத்தியர் ஒருவர் இன்றி மூடப்பட்ட நிலையில் இருப்பதாக எல்பட தோட்ட மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பொகவந்தலாவை கெர்க்கஸ் வோல்ட் தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் எல்பட மேல்பிரிவு, கீழ்பிரிவுத் தோட்டங்களில் சுமார் 700 இற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றபோதும் அவர்களுக்கான முறையான சுகாதார சேவைகள் இன்றி அத்தோட்ட மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த தோட்ட மக்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டாலோ அல்லது அனர்த்தங்களுக்கு உள்ளாகினாலோ பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலை அல்லது கிழங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கே செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

மாதாந்தம் குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளைப் போடுவதென்றாலும் கூட பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையையே நாடவேண்டியுள்ளதாக இம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்களின் பிரச்சினை குறித்து கெர்க்கஸ் வோல்ட் தோட்ட முகாமையாளரைத் தொடர்புகொள்ள முயற்சித்தபோது அது பயனளிக்கவில்லை.

எனவே, சுமார் நான்கு வருடகாலமாக மூடப்பட்டுக்கிடக்கும் வைத்தியசாலையை திறப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென எல்பட தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சா.சதீஸ்குமார்,
பொகவந்தலாவை நிருபர்


ஹட்டனில் BUSINESS OPPORTUNITIES
வேலையுடன் பயிற்சி Don't Miss

2013 இல் ஆரம்பிக்கப்படவுள்ள மலையக மண்ணில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் என்ற அடிப்படையில் பயிற்சிக்கப்பட்டு தொழில் கொடுக்கப்படும். சகல பிரதேசங்களிலிருந்தும் இணைத்துக் கெள்ளப்படவுள்ளன.

- கல்வித் தகைமை: G.C.E. O/L க்கு மேல்
- வயது 18-28 க்கு இடைப்பட்டவராக இருத்தல்.
- பயிற்சியின் பின் Diploma சான்றிதழ்கள்.
- பயிற்சிக் காலத்தில் 10,000 சம்பளம் கொடுக்கப்படும்.
- பின் உயர் சம்பளத்துடன் பதவி கொடுக்கப்படும்.

எனவே எமது கிளை முகாமையாளரிடம் தொடர்பினை ஏற்படுத்தி மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும்.

The Manager
071-8694188 / 071-8643676

# புரிந்து கொள்ள முயற்சியுங்கள்

வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 26

அடுத்தவரைப் புரிந்து கொள்ளாமலேயே விமர்சிப்பது பொதுவாக எல்லோருக்கும் கை வந்த கலை. அப்படி செய்திருக்க வேண்டும், இப்படி இருந்திருக்க வேண்டும், இப்படி சொல்லியிருக்கக் கூடாது, அப்படி செய்திருக்கக் கூடாது என்று வாய்க்கு வந்தபடி கருத்துகளை யார்



வேண்டுமானாலும் சொல்லலாம்.

ஆனால் அடுத்தவரைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. உண்மையாக ஒருவரைப் புரிந்து கொள்ள அவருடைய நிலைமையில் தன்னை இருத்திப் பார்க்க வேண்டும். நேர்மையாக அப்படி இருத்திப் பார்த்தால் மட்டுமே அந்தந்த நிலைமையின் சங்கடங்கள், சிக்கல்கள், சந்திக்க வேண்டியிருக்கும் பிரச்சினைகளின் தன்மை எல்லாம் விளங்கும்.


குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, ஒரு மனிதர் திடீர் என்று வித்தியாசமாக நடந்து கொண்டால் விமர்சனம் எழுகின்ற அளவுக்கு, ஏன் அப்படி நடந்து கொண்டார் என்ற காரணம் அறிய முற்படுகிற எண்ணம் பெரும்பாலும் எழுவதில்லை.

யாருமே காரணம் இல்லாமல் வித்தியாசமாக நடந்து கொள்வதில்லை என்ற அடிப்படை புரிதல் பெரும்பாலும் இருப்பதில்லை. ஏனோ அப்படி நடந்து கொள்கிறார் என்ற அலட்சியமோ, வேண்டுமென்றே அப்படி நடந்து கொள்கிறார் என்கிற அபிப்பிராயமோ பிரதானமாக மற்றவர் மனதில் எழுகிறதைத் தான் எல்லா இடங்களிலும் அதிகமாகப் பார்க்க முடிகிறது.

தங்களுடைய எதிர்பார்ப்பின்படியெல்லாம் ஒருவர் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிற மனிதர்கள் அவர் அப்படி நடந்து கொள்ளா விட்டால் அதற்கு உண்மையில் சரியான காரணங்கள் ஏதாவது இருக்கக் கூடுமா என்கிற ஒரு நியாயமான கேள்வியைக் கேட்டுக் கொள்ள பெரும்பாலும் தவறி விடுகிறார்கள். முதலில் சொன்னது போல அவருடைய நிலையில் தன்னை இருத்திப் பார்க்கும் சிரமத்தையும் யாரும் எடுத்துக் கொள்வது அபூர்வமாகவே இருக்கிறது. பெரும்பாலும் அந்த அலட்சியத்தாலேயே நியாயமற்ற விமர்சனங்கள் மடை திறந்த வெள்ளம் போல் கிளம்புகின்றன.

அதிகமாக விமர்சிப்பவர்கள் உருப்படியாக எதையும் செய்தவர்களாக இருப்பதில்லை. காலில்லாதவன் ஓட்டப்பந்தயத்தை விமர்சிப்பது போலத் தான் இவர்களுடைய விமர்சனங்கள் இருக்கின்றன. இவர்கள் இதுவரை செய்யாத, இனியும் என்றுமே செய்யப் போகாத ஒரு செயலை, தெரிந்த விதத்தில் யாராவது கஷ்டப்பட்டு செய்து வந்தால் அதில் ஆயிரம் குறைகள் சொல்வார்கள்.

இது போன்ற ஆசாமிகளை ஒவ்வொரு குடும்பத்திலும், அலுவலகத்திலும், சமூகத்திலும் நாம் தாராளமாகப் பார்க்கலாம். இவர்கள் எந்தப் பொறுப்பையும் ஏற்க முன் வர மாட்டார்கள். பொறுப்பில் இருப்பவர்களுக்கு உதவவும் முன் வர மாட்டார்கள். ஆனால், அது ஏன் ஆகவில்லை? இதை ஏன் செய்யவில்லை? என்ன தான் செய்து கொண்டு இருக்கிறீர்கள்? போன்ற கேள்விகள் சரமாரியாக இவர்கள் வாயிலிருந்து வரும்.



இது போன்ற பொறுப்பற்ற நபர்களை அலட்சியம் செய்வது தான் யாரும் இவர்களுக்கு அளிக்கக் கூடிய சரியான பதில்.

ஆனால், இந்த அளவு மோசமாக இல்லாமல் இருந்தாலும் கூட நம்மில் பலரும் அறியாமையால் இந்தத் தவறைச் செய்கிறோம். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் எத்தனையோ வீடுகளில் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு ஓய்வில்லாமல் வேலை செய்யும் குடும்பத் தலைவிகளின் வேலைப் பளுவை வீட்டில் உள்ளவர்களில் பெரும்பாலும் புரிந்துகொள்ளத் தவறி விடுகிறார்கள். அலுவலகத்திற்குப் போய் செய்வது தான் உண்மையான வேலை, வீட்டு வேலை எல்லாம் பெரிய விஷயம் அல்ல என்று பொதுவான அபிப்பிராயம் பலரிடமும் நிலவுகிறது.

எனக்கு அப்படி ஒரு குடும்பத்தைத் தெரியும். வீட்டில் அனைவரும் வேலை, படிப்பு என்று வெளியே போய்விடுவார்கள். அவர்கள் காலை வெளியே செல்லும் முன் சமையல் செய்து அவர்களுக்கு மதியத்திற்கு சாப்பாடு பார்சல் செய்து அனுப்ப வேண்டும். சமையல் மட்டுமல்லாமல் துவைப்பது, வீட்டை சுத்தம் செய்வது, போன்ற வேலைகளும் அந்தக் குடும்பத் தலைவி தான் செய்ய வேண்டும். வீட்டில் உள்ளவர்கள் வீட்டில் ஒரு துரும்பை ஓரிடத்தில் இருந்து வேறு இடத்திற்கு எடுத்து வைப்பவர்கள் அல்ல. வேலை செய்தும், படித்தும் களைத்துப் போனவர்களாக தங்களை நினைத்துக் கொண்டவர்கள் எப்போதுமே அந்தத் தாய்க்கு ஓய்வே கிடையாது என்பதை என்றும் எண்ணிப் பார்த்ததில்லை.

வயதான காலத்தில் அந்தக் குடும்பத் தலைவி வேலைப் பளு அதிகமாகி ஏதாவது கத்தினால் அவர்கள் நிலையைப் புரிந்து கொண்டு ஒத்தாசை செய்வதற்குப் பதிலாக ஏன் சும்மா கத்திக் கொண்டே இருக்கிறாய். வீட்டுக்குள்ளே வருவதற்கே எனக்கு பிடிக்கவில்லை என்று பிள்ளைகள் சொன்னதை பல முறை கேட்டிருக்கிறேன்.

ஒரு நாள் அந்தத் தாய் திடீரென்று இறந்து போனார். அதன் பிறகு அந்தக் குடும்பத்தினர் அந்த வேலைகளுக்கு வேலையாள் ஏற்பாடு செய்தனர். கை நிறைய சம்பளம் தந்தும் அந்தத் தாயின் வேலையில் பாதி வேலை கூட அந்த வேலைக்காரியிடம் அவர்களால் வாங்க முடியவில்லை. ஏதாவது திட்டினால் அவளும் வராமல் போய் விடப் போகிறாள் என்று பயந்து பாதி வேலைகளை இப்போது அவர்கள் தாங்களே செய்து வருகிறார்கள்.

இப்போது அனைவருக்குமே அந்தத் தாயின் அருமை புரிகிறது. அந்தத் தாய் இறக்கக் காரணமான உடல் உபாதை அவருக்கு ஏற்பட்ட பின் தான் அடிக்கடி கோபப்பட்டு கத்தியிருக்கிறார் என்பது பிறகு தான் அவர்களுக்குப் புரிந்தது. இதுவே அவர் இருக்கும் போது புரிந்திருந்தால், அந்தத் தாயிற்கு சில விதங்களிலாவது ஒத்தாசையாக இருந்திருந்தால், அந்தத் தாயிடம் வாய்க்கு வந்த படி பேசி காயப்படுத்தாமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

ஒருவர் இருக்கும் போது அவர்களைப் புரிந்து கொள்ளும் சிரமத்தை நாம் யாரும் எடுத்துக் கொள்வதில்லை. அதுபோல யாரை விமர்சனம் செய்கிறோமோ அவர்கள் நிலை நமக்கும் வந்தால் ஒழிய அவர்களையும் நாம் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறோம். இப்படிக் காலம் தாழ்ந்து புரிந்து கொள்வதை விட முன்பே புரிந்துகொள்ள முடிவதில் தான் உண்மையான பக்குவம் இருக்கிறது.

அந்தப் பக்குவம் வராதவரை சொந்த சௌகரியங்களை மட்டுமே எண்ணிப்பார்க்கும் சுயநலமிகளாகவே இருந்துவிடும் தவறை நாம் செய்கிறோம் என்பதை நாம் நினைவில் வைத்திருப்போமாக!

## முன்னேறத் துடிக்கிறீர்களா?

சிந்தனைதான் உன்னைத் தூண்டி வேலை செய்ய வைக்கிற உந்து சக்தி. எனவே மனதை மிக உயர்ந்த சிந்தனைகளால் நிரப்பிவிடு. ஆயிரம் தடவைகள் வீழ்ந்தாலும் இலட்சியத்தைப் பிடித்துக்கொள். ஆயிரம் தடவைகள் தோற்றுப் போனாலும் மீண்டும் முயற்சி பண்ணிப்பார். வலிவுடன் இரு. எல்லா மூட நம்பிக்கைகளையும் கைவிட்டு அப்பால் செல். விடுதலை பெறு. எந்த வேலையும் அற்பமானதல்ல. தனது மனதுக்குப் பிடித்த காரியத்தை ஒரு முட்டாள் கூட செய்து முடிக்க முடியும். ஆனால் எந்த வேலையையும் தனக்குப் பிடித்தமானதாக ஆக்கிக் கொள்பவனே புத்திசாலி. உன் தவறுக்கு அடுத்தவனைக் குற்றம் சொல்லாதே. உன் கால்களிலேயே நில். முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள். நீ இன்றிருக்கும் நிலைக்கு நீயே பொறுப்பு. நீ எப்படி ஆக வேண்டும் என்று விரும்புகிறாயோ, அப்படியே ஆவதற்கான ஆற்றல் உன்னிடம் இருக்கிறது. உதவி கிடைக்கவில்லை என்று கதறாதே. உதவி வெளியிலிருந்து வராது. உனக்குள்ளிருந்தே வரும். நல்ல கருத்துக்களையே நினைத்து நல்லதையே செய். நம்பிக்கையோடு இரு. வளவளவென்று பேசாதே. மிக அமைதியான நிலையிலிருக்கும்போதுதான் மனிதனின் முழு சக்தியும் வெளிப்படுகிறது.

சுவாமி விவேகானந்தர்.

# மலசலகூடம் அமைக்கப்படுமா?

அக்கரப்பத்தனை மன்றாசி நகரத்தில் காணப்பட்ட பொது மலசலகூடம் நுவரெலியா பிரதேசசபையின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இந்நகரத்தில் பொதுமக்களின் பாவனைக்காக அமைக்கப்பட்ட மலசலகூடங்கள் மக்களின் பாவனைக்கு இலாயக்கற்ற நிலையில் எவ்வித வசதிகளும் இன்றிக் காணப்பட்டது.

இதனைத்திருத்தி தரும்படி பொதுமக்களும், நகர வர்த்தகர்களும் நுவரெலியா பிரதேசசபை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தனர். இதன் அடிப்படையில் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்பணிகள் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக இடம்பெற்றுள்ளது.

அதாவது மதுபானசாலைக்கு அண்மித்த பிரதேசத்தில் இருந்த மலசலகூடம் எவ்வித அறிவித்தல்களும் இன்றி உடைத்து அப்புறப்படுத்தப்பட்டது. திடீரென மலசலகூடம் இருந்த இடத்தில் கழிவுப்பொருட்கள் சேகரிக்கும் நிலையங்கள் கட்டப்போவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவல்களை அறிந்த வர்த்தகர்கள் உடனடியாக சபைத் தலைவரிடம் கேட்டபோது இப்பகுதியில் மதுபானசாலை இருப்பதால் பெண்கள் செல்வதில் அச்ச நிலை காணப்படுகிறது. இதன் காரணமாகவே இவ்விடத்தில் கடைகள் நிர்மாணிக்கப்படுவதுடன் இன்னுமொரு பகுதியில் காணப்படும் மலசலகூடத்தினை நவீன முறையில் புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு தரப்படும் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால் உடைக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள மலசலகூடத்தினை அதிகமானோர் பயன்படுத்துவதால் இவ்விடத்திலேயே மலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என மக்கள் தெரிவிப்பதோடு நுவரெலியா மாவட்ட அரசியல் தலைவர்களிடமும் கடிதம் மூலம் அறிவித்துள்ளதுடன், மலசலகூடம் அமைப்பதற்கான நிர்மாணப்பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எது எவ்வாறாக இருப்பினும் பொது மக்களின் தேவையை நன்கு அறிந்து செயற்படவேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பல்லவா..?

அக்கரப்பத்தனை நிருபர்

# கொட்டகலை மேபீல்ட் தோட்ட யுவதி கண்டியில் மாயம்

கொட்டகலை மேபீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த 19 வயது யுவதி ஒருவர் கடந்த 9 ஆம் திகதி முதல் கண்டி வைத்தியசாலை வளாகத்திலிருந்து காணாமல் போயுள்ள நிலையில் இந்த யுவதி குறித்து இதுவரை எவ்விதமான தகவலும் கிடைக்கப் பெறாது இந்த யுவதியின் பெற்றோர் மிகுந்த அச்ச நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர் கடந்த 6 ஆம் திகதி முதல் கண்டி வைத்தியசாலையில் 22 ஆம் வாட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட தனது சகோதரிக்கு உதவி செய்து வந்துள்ளார். இந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த பெண்ணை வீட்டுக்குச் செல்வதற்கு வைத்தியசாலையால் அனுமதி வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து குறிப்பிட்ட யுவதி தனது சகோதரியை வைத்தியசாலையின் பார்வையாளர் அறையில் தங்க வைத்து விட்டு சகோதரியின் சிகிச்சை ஆவணங்களை போட்டோ பிரதி எடுப்பதற்காக கண்டி நகருக்குச் சென்றுள்ளார்.

அவ்வாறு சென்றவர் 9 ஆம் திகதி முழுவதும் வருகை தரவில்லை. தனது சகோதரி வைத்தியசாலைக்கு வருகைதராத காரணத்தினால் குறிப்பிட்ட பெண் பார்வையாளர் அறையிலேயே தங்கியுள்ளார். பின்பு 10 ஆம் திகதி காலை தொலைபேசி மூலம் தனது கணவருக்கு அறிவித்துள்ளார்.

இதன் பின்பு குறிப்பிட்ட பெண்ணின் கணவர் கண்டிக்குச் சென்று தனது மனைவியை அழைத்து வந்த போதும் மனைவியின் சகோதரி குறித்து எவ்விதமான தகவலும் கிடைக்கவில்லை. இதனைத் தொடர்ந்து தனது மனைவியின் சகோதரி காணாமல் போய்விட்டதாக பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாடு குறித்து பத்தனை பொலிஸார் கண்டி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இவ்வாறு காணாமல் போனவர் ஆறுமுகம் பத்மாவதி என்ற 19 வயது யுவதியாவார்.

சோ. ஸ்ரீதரன்


**தேவை**

ஹட்டன், நுவரெலியா வீதியில் அமைந்துள்ள ரெஸ்ரூரன்ட் ஒன்றிற்கு Waiter, Room Boy தேவை.

வயது எல்லை 18-25.

தொடர்பு கொள்ளவும்:
052-4901216, 052-2258433


# பயோ DatA BY உதயசூரியன்

*பெபெயர் :- எஸ்.சதாசிவம்

* பதவி :- மத்தியமாகாண சபை உறுப்பினர்.

*கட்சி :- இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி.

*மறக்கமுடியாதது :- பாராளுமன்றத்தை அலங்கரித்த நாட்களை

*நண்பர்கள் :- தனி ஆளாக கட்சியை கொண்டு செல்பவர்கள் (ஓ... மின்னும் தலைவரா?)

*எதிரிகள் :- வளர்த்து விட்ட கட்சியை தூக்கியெறியும் துரோகிகள்

*ஒரே கோபம் :- என்னைத் தனியாக விட்டுவிட்டு அவர்(?) இ.தொ.கா வில் சேர்ந்தது

*பிடித்த விடயம் :- தேர்தல் கால கூட்டணியில் ஓடிச்சென்று ஒட்டிக்கொள்வது.



*பிடிக்காத விடயம் :- ஒட்டிக் கொண்ட கூட்டணியில் அதிக நாளைக்கு குப்பை கொட்டுவது. (நிறைய பேர் அப்படித்தான்...)

*அடிக்கடி புலம்புவது :- நான் பெற்றுக் கொடுத்த 30 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்கை முத்தானவர் முடக்கி விட்டது. (எத்தனை தடவை புலம்பியிருப்பீர்கள்)

*சம்பள பேச்சு வார்த்தை :- ஓட்டை கப்பலுக்கு ஒன்பது பேர் மாலுமி

*நியாயமான சம்பளம் கிடைக்கா விட்டால் :- வழமை போல நீதிமன்றம் செல்வேன் என அறிக்கை விடுவது

*கட்சி கலைப்பு தொடர்பாக :- ஒரு கை தட்டினால் ஓசை வருமா? அதான் தும்பிக்கையுடன் இணையலாம்னு நினைக்கிறேன்.

*ஒரே இலட்சியம் :- எப்படியாவது பாராளுமன்றம் சென்று அந்த 30 ஆயிரம் ரூபாவை தொழிலாளருக்கு பெற்றுக்கொடுப்பது... (சபாஷ்.... சரியான திட்டம்)

(யாவும் கற்பனை)

எம்.தாசன்

# அதிகாரிகள் கவனிப்பார்களா?


காலை 7.00 மணியளவில் நுவரெலியாலிருந்து பூண்டுலோயா நோக்கி வரும் பூண்டுலோயா டிப்போவுக்கு சொந்தமான பாடசாலை பஸ் வண்டி அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு பூண்டுலோயா நோக்கி பயணிக்கின்றது. இதில் அதிகமாக பாடசாலை மாணவர்களும், காலையில் நகர்ப்புறங்களில் வேலை செய்பவர்களுமே பயணிக்கின்றனர். இவ்வாறு வரும் பஸ் வண்டி டன்சினன் மத்திய பிரிவிலே முழுவதுமாக பயணிகளை ஏற்றிக்கொண்டு வரும் போது டன்சினன் கீழ் பிரிவு,சீன் தோட்ட பாடசாலை பிள்ளைகளுக்கு நிறுத்தாமல் சென்றுவிடுவதும் நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை செல்வதற்கான அந்நாளை இழக்க வேண்டி இருப்பதோடு தொழில் வாய்ப்பிற்காக செய்வோரும் தமது தொழிலை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனவே இதனை கருத்திற் கொண்டு கொத்மலை அரச போக்குவரத்துச் சபைக்கான அதிகாரிகள் இதற்கு மாற்று வழியாக அதிகளவு பயணிகளை ஏற்றக்கூடிய பெரியபஸ் வண்டி ஒன்றை சேவையில் ஈடுபடுத்தினால் சிறப்பாக இருக்கும் என இப்பஸ்வண்டியில் பயணிப்போரும் பொதுமக்களும் எதிர்பார்க்கின்றனர்.


ஆர்.தியாகு




## கண்ணாமூச்சி




## சூப்பர் ரூப்பர்




## யாரது



* இவர் தமிழ்த் திரையுலகில், நடிகர், வசன, எழுத்தாளர், திரைக்கதை அமைப்பாளர், இயக்குநர், சிறப்பு வேடமேற்கும் நடிகர், தயாரிப்பாளர் எனப் பன்முகம் கொண்ட ஒரு கலைஞர்.
* இவரை பாரதிராஜா கதாநாயகனாக அறிமுகப்படுத்தி வைத்தார்.
* இவர் ராதிகா, ஊர்வசி, பானுப்பிரியா, மீனா, குஷ்பூ போன்றவர்களுடன் இணைந்து நடித்துள்ளார்.
* இவருடைய மகனும் ஒரு நடிகர் ஆவார்.
* இவர் இயக்கிய இந்தி திரைப்படங்களில் நடிகர் அனில் கபூர், கோவிந்தா, ராஜேஷ் கன்னா ஆகியோர் நடித்துள்ளனர்.
* ஒரு திரைப்படத்திற்கு இவரே இசை அமைத்து ஒரு பாடலையும் பாடியிருந்தார்.

**இவர் யார்?**

## அதிரடி

**இந்த வாரம் நடிகர் தனுஷ் இரசிகர்களுக்கு திரையுலக புதிர்க் கேள்விகள்**

நீங்கள் தனுஷ் இரசிகரா? அப்படியானால் இந்த கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.




01. தனுஷ் நடித்த முதல் திரைப்படம் எது?
02. இவருக்கு சிறந்த நடிகர் என்ற பாராட்டை பெற்றுத் தந்த திரைப்படம் எது?
03. இவரின் அப்பாவும் ஓர் இயக்குநர் ஆவார். அவருடைய பெயர் என்ன?
04. இவர் நடித்த ஆடுகளம் திரைப்படத்தின் இசையமைப்பாளர் யார்?
05. இவர் நடித்த திருடா திருடி திரைப்படத்தின் நடிகை யார் ?

**சொல்லுங்கள் பார்க்கலாம்...?**

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02 ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# வார்த்தைப் புதிர் - 50



### இடமிருந்து வலம்

01. அண்மையில் பரபரப்பாக பேசப்பட்ட சர்ச்சைக்குரிய இணையத்தளம்.
07. குதிரை (குழம்பியுள்ளது)
08. முக்கியமான ஒரு உறவு
09. சிவப்பு நிறம் இதைக் குறிக்கும்.
12. உள்ளம்.
14. சர்வதேச மொழி.
18. தொட்டால் ஒட்டிக்கொள்ளும்.
19. குழந்தைகள் இதில் தூங்க ஆசைப்படுவார்கள்.

### வலமிருந்து இடம்

03. நரியின் குணம்.
06. அள்ள உதவும்.
13. கோபுரம் வேறுசொல்.
17. அடைக்கலம் வேறு சொல்.

### மேலிருந்து கீழ்

01. நீதானே என் பொன்வசந்தம் நாயகி.
02. விஜய் நடித்த படம்.
03. பத்து வேடங்கள். (குழம்பியுள்ளது)
04. மனநிலை குழம்பியவன்.
06. சந்திரனின் மறு பெயர்.
09. அந்நியன் விக்ரமின் கதாப்பாத்திரங்களின் ஒன்று.
10. கோபம் என்பதன் ஒத்த சொல்.
11. பெண்.
12. மென்மைக்கு இதைத்தான் குறிப்பிடுவர்.
15. சீறும் பாம்பும் இதற்கு அடங்கும்.

### கீழிருந்து மேல்

05. இன்பம்.
16. இது வந்தால் பத்தும் பறந்துவிடும்.



# பச்சிளம் குழந்தையை விடுத்து
## சம்பாதிக்க வெளிவாடு செல்லும் தாய்

இன்றைய காலகட்டத்தில் பணம் மிகவும் அவசியமான ஒன்றுதான் ஆனால் அதை விட பாசம் தான் பெரிது. பணம் சம்பாதிக்க அலைந்ததில் சொந்தங்களை இழந்தவர்கள் ஏராளம் அதிலும் வெளிநாட்டில் பணம் சம்பாதிக்க சென்ற பல பெண்கள் இழந்தது இன்னும் அதிகம். இதுபோன்ற செய்திகளை நாளாந்தம் பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

இருந்தும் வெளிநாட்டு மோகம் இன்னும் நம் நாட்டு பெண்களை விட்டுவிடவில்லை என்பதற்கு இன்னொரு சான்று இதோ.

தனது ஒன்றரை வயது பச்சிளங்குழந்தையை தனியாக தவிக்கவிட்டு, அரபு நாடொன்றுக்கு பணிப்பெண்ணாக செல்ல முற்படும் தன் மனைவியை தடுக்குமாறு குழந்தையின் தந்தை மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்பு பிரிவு உட்பட பலரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிப் பிரதேசத்தைச் சேர்ந்த தந்தையொருவரே தனது குழந்தையுடன் சென்று இது தொடர்பான முறைப்பாடுகளைச் செய்துள்ளார்.

சவுதி அரேபியாவிற்கு பணிப்பெண்ணாக செல்வதற்காக தனது மனைவி தமது ஒன்றரை வயது குழந்தையை அவரது சகோதரியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பொன்றின் பிரகாரம் நான்கு மாத சிறைத்தண்டனையிலிருந்து பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி தான் விடுதலையாகி வீடு திரும்பிய போது தமது மனைவி கொழும்பில் பணிப்பெண் வேலைக்கான பயிற்சி பெற்ற பின்னர் சவுதி அரேபியா பயணமாகவிருப்பதை தன்னால் அறிய முடிந்ததாக அவர் தெரிவித்திருக்கிறார்.

சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி மறுநாள் தொலைபேசி ஊடாக தமது மனைவியுடன் தொடர்புகொண்டபோது பயிற்சி முடிந்து மட்டக்களப்புக்கு வந்த பின்னரே சவுதி அரேபியாவிற்கு செல்வதாக தனது மனைவி பதிலளித்த போதிலும் அதற்கு தான் இணங்கவில்லையென்றும், அதன் பின்னர் தம் மனைவியுடன் தம்மால் தொடர்புகொள்ள முடியாமலிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மனைவியின் சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த தனது குழந்தை தற்போது தனது பராமரிப்பில் உள்ளதாக தெரிவித்த அவர், தாயை பிரிந்துள்ள வேதனையிலிருக்கும் குழந்தை தாயைக் கேட்டு அழுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தனது மனைவி தொடர்பான விவரங்களை பதிவு செய்து கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அவர் நாட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கப்படும் என தெரிவித்துள்ளதாக கணவர் கூறுகின்றார்.

மேலும் இந்த பிரச்சினை தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தியபோது குறிப்பிட்ட முறைப்பாட்டின் பேரில் குறித்த பெண் இலங்கையை விட்டு வெளியேறுவதை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் பதிலளித்தார்.

இலங்கையில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாட்டுக்கு பணிப்பெண்களாகச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் பிழையான தகவல்களை வழங்கி முகவர்களின் ஒத்துழைப்புடன் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொண்டிருக்கும் தாய்மார்களில் பலர் வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்வதாக சமூக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கோவில் கட்ட 1 லட்சம் நன்கொடையளித்த பிச்சைக்கார மூதாட்டி

மராட்டிய மாநிலத்தில் 85 வயது பிச்சைக்கார மூதாட்டி ஒருவர், கோவில் கட்டுவதற்கு ரூ.1 லட்சம் பணத்தை நன்கொடையாகக் கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார்.


பிம்பள்கான் என்ற கிராமத்தில் பொதுமக்கள் ராமர் கோவில் கட்ட முடிவு செய்தனர். இதற்காக நிதி திரட்டுவதற்காக ஊர் மக்கள் ஆலோசனை நடத்தினர். அப்போது அங்கு வந்த லட்சுமி என்ற பிச்சைக்கார மூதாட்டி தானும் கோவில் கட்ட நன்கொடை தருவதாகக் கூறினார். அவரை ஏளனமாகப் பார்த்த பொதுமக்கள், 100 ரூபாயோ, 200 ரூபாயோ கொடுத்து விட்டு போ என்று கூறினர். ஆனால் அவர் ரூ.1 லட்சம் நன்கொடை கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார். கணவர் இறந்ததில் இருந்து கடந்த 15 ஆண்டுகளாக பிச்சையெடுத்து வந்த அவர், பிச்சையாகக் கிடைக்கும் பணத்தை வங்கியில் சேமித்து வந்துள்ளார். அந்த பணத்தை கோவிலுக்கு வழங்கினார். நன்கொடை வழங்கிய லட்சுமிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கோவிலில் அவரது பெயருடன் பெரிய பலகை வைக்கவும், கடைசி வரை அவரை கவனித்துக்கொள்ளவும் பொதுமக்கள் முடிவு செய்துள்ளனர்.





# பொல்லையும் கொடுத்து அடியையும் வாங்கும் இலங்கை அரசாங்கம்





இலங்கை விடயத்தில் பெரியண்ணனாக செயல்பட விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

“நல்லிணக்கமும் பொறுப்புக் கூறும் கடப்பாடும்” என்ற தலைப்பிலான அமெரிக்கப் பிரேரணையில் நகல் வரைவு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 47 உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது அமர்வில் நகல் பிரேரணை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளினால் ஆராயப்பட்டுள்ளது. நகல் பிரேரணையை ஆராயும் நாடுகளோடு இலங்கை பற்றி கருத்து வெளியிட்டது. அமெரிக்காவின் நகல் பிரேரணையை முற்றாக நிராகரித்து உரையாற்றிய இலங்கை அரசாங்கத்தின் நிரந்தரப் பிரதிநிதி, அமர்வு முடியும் வரை காத்திருக்கவில்லை. அரசாங்கத்தின் கருத்தை வெளியிட்ட பின்னர் ஐம்பது நிமிடங்கள் கழித்து அமர்விலிருந்து வெளியேறிவிட்டார் என்றும் இலங்கை தொடர்பான அப்பிரேரணை பற்றி ஏனைய உறுப்பு நாடுகள் கருத்துக்களை அமர்வில் தொடர்ந்தும் வெளியிட்டன என்றும் ஜெனீவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை தொடர்பான குழுநிலை அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்ற தகவல் தெரிவிக்கின்றது. இலங்கை அரசாங்கம் இறுதி யுத்தத்தில் இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டு குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இந்தியாவில் தமிழ்நாட்டில் உரத்த குரல் எழுப்பப்பட்டுவரும் நேரத்திலும் இந்தியா தான் எந்தப் பக்கம் என்பதைத் தெரிவிக்காது மௌனம் காத்து வருகின்றது.

இந்தியாவின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பதை அறிய முடியாத நிலையில் கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளில் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதமானவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்திவிட்டது என்று கொழும்பு அரசாங்க அமைச்சர் ஒருவரே பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் நாட்டை சூடான் நாட்டு நிலைவரத்துக்கு இட்டுச் செல்வதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி குற்றஞ்சாட்டி இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபை சூடானை வடக்கு சூடான், தெற்கு சூடான் என்று இரு சுதந்திர நாடுகளாக பிரகடனப்படுத்தியதை ஐக்கிய தேசியக் கட்சி உதாரணம் காட்டியிருக்கிறது. ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012 மார்ச் தொடக்கம் அமெரிக்கா இலங்கை தொடர்பாக மேற்கொண்டுவரும் இராஜதந்திர நகர்வுகள் அந்த இலக்கை நோக்கியதாகவே அமைந்துள்ளன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியாவுக்கு இது தெரியாமல் இருக்கமுடியாது என்பதும் அவர்கள் கருத்தாகவும் இருக்கிறது.

இப்பின்னணியில் தான், இலங்கை விடயத்தில் பெரியண்ணனாக செயல்பட விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பகிரங்கமாக தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பாக ஜெனீவா அமர்வில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் குறித்து கொழும்பு அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்துடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று புதுடில்லி அரசாங்கம் ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இது பெரியண்ணன் என்ற அந்தஸ்தை இந்தியா அமெரிக்காவுக்கு வழங்கிவிட்டதாக அர்த்தம் கொள்ளலாமா என்ற கேள்வி ராஜதந்திர வட்டாரங்களில் எழுந்துள்ளது. இதேவேளை இலங்கை தமிழ்ப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயமாக தமிழ்த் தலைவர்களுடன் கொழும்பு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு காண வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுள்ளார்.

இதனிடையில் அமெரிக்கப் பிரேரணையின் காரத்தைக் குறைக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. அமெரிக்கப் பிரேரணையின் காரம் குறைக்கப்படுமா? இணக்கப்பாடு ஒன்றுக்கு இல்கை உடன்படுமா? எதிர்வரும் தினங்களில் விறுவிறுப்பாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படும் இராஜதந்திர நகர்வுகளில் தான் தங்கியிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

ஜெனீவா அமர்வில் அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணை இலங்கையின் நலன்கள் மற்றும் இறைமையை மீறும் ஒன்று என்று இலங்கை அரச தரப்பினர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். ஆனால், அமெரிக்காவின் பிரேரணைய இலங்கையின் இறைமையை பாதுகாப்பதாகவும் நலன்களைப் பேணுவதாகவும் அமைந்திருப்பதாக மேற்குலக வட்டாரங்கள் கூறுகின்றன. அமெரிக்காவின் பிரேரணை இலங்கைக்கு சார்பானதாகவே கருதப்பட வேண்டும் என்றே அவ்வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் சமர் முடிவுற்ற பின்னர் ஐ.நா. நிபுணர் குழு அது தொடர்பாக நியமிக்கப்பட்ட மீளாய்வுக்குழு ஆகியன வெளியிட்ட அறிக்கைகளில் இறுதிக்கட்ட போரில் அரச படையினர் பொதுமக்களை கொலை செய்தது, மனித உரிமை மீறல்களை மேற்கொண்டது ஆகியன குறித்து பொறுப்புக் கூறும் விசாரணையை நடத்தி தீர்வு காணவேண்டும் என்று தெரிவித்திருந்தன. சர்வதேச விசாரணைக்குழு ஒன்று போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை நடத்தவேண்டும். மனித உரிமைகள் அமைப்புக்கள் வலியுறுத்தி வந்தவேளையில் “நாமே விசாரணை நடத்தி தீர்வு காணுவோம்” என்று இலங்கை அரசு கூறியதுடன் அதற்காக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை நியமித்தது.

அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்படி கோரியே அமெரிக்கா 2012 மார்ச்சில் நடைபெற்ற ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து இந்தியாவின் ஆதரவுடன் நிறைவேற்றியது. அத் தீர்மானத்தின்படி இலங்கை அரசாங்கம் தான் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றத் தவறியதன் காரணமாகவேதான் 2013 ஜெனீவா அமர்வில் அமெரிக்கா இன்னொரு தீர்மானத்தைக் கொண்டு வரு கின்றது. கொழும்பு அரசாங்கம் தனது ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தும்வரை அமெரிக்கா, இலங்கை தொடர்பான இராஜதந்திர நகர்வுகளை ஜெனீவா அமர்வுகளில் தொடரத்தான் போகின்றது என்பதுதான் யதார்த்தம். இலங்கை அரசாங்கத்துக்கு பொல்லைக் கொடுத்து அடி வாங்கும் கதையாகத்தான் இது இருக்கப் போகிறது.

அநாமிகன்

# பேச, சிரிக்க, நடக்கத் தெரியாது: அரிதான நோயால் அவதிப்படும் குழந்தை





பிறந்த குழந்தை அழும், பின்னர் சில மாதங்களில் முகம் பார்த்து சிரிக்கும், மெதுவாக நடக்கும், மொழி அறிந்து பேசும். ஆனால் 11 மாதக் குழந்தை ஒன்று அரிதான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது.

மரபணு மாற்றக் குறைபாடு நோய் MeCP2 ( methyl CpG binding protein 2 ) எனப்படும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளான் பிளேக் மெக்மில்லன் என்ற குழந்தை.

நம் உடலுக்குத் தேவையான புரதச்சத்து நரம்புகள் மூலம் கடத்தப்படுகிறது. இந்த மரபணு குறைபாட்டு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு தேவையான சத்துக்கள் கடத்தப்படுவதில்தான் சிக்கலே. இது ரெட் சின்ட்ரோம் எனப்படும் நோயுடன் மிகமிக நெருங்கிய தொடர்புடையது.

கடந்த 2005 ஆம் ஆண்டுதான் இப்படி ஒரு நோய் இருப்பதையே கண்டு பிடித்தனர். ஆண் குழந்தைகளை மட்டுமே இந்த நோய் பெரிதும் தாக்குகிறது. மூளையின் செயல்பாடு சரியாக இருக்காது. 5 வயதாகும் வரை ஓரளவு செயல்படும் மூளை பின்னர் மக்கர் செய்ய ஆரம்பித்து விடும். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களை 24 மணிநேரமும் கண்காணிக்க வேண்டும். எவ்வளவு கவனமாகப் பார்த்துக் கொண்டாலும் அவர்களின் ஆயுட்காலம் 25 வயதுதான் என்கின்றனர் மருத்துவர்கள்.

# வாய்விட்டு சிரித்த நபருக்கு நேர்ந்த கொடுமை



வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பார்கள். ஆனால் அப்படி சிரித்ததால் ஒருவர் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். இந்த சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.

நியூயோர்க் நகரில் உள்ள ராக்வில்லா சென்டர் என்ற இடத்தில் வசித்து வருபவர் ரொபர்ட் ஷியாவெல்லி (42).

அவர் வலிப்பு நோயாலும் நரம்பு பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் நியூயோர்க் பொலிஸார் அவர் மீது இரண்டு குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்தனர். அதில் அவர் செய்த குற்றமாகக் கூறப்பட்டிருந்தது அவர் சத்தமாக சிரித்தது தான்.

கடந்த மாதம் தொடர்ந்து 12 மற்றும் 13 ஆம் திகதி மாலை 6 மணியளவில் அவர் சத்தமாக சிரித்தது, வீதியைத் தாண்டி தன்னைத் தொந்தரவு செய்ததாக அவரது பக்கத்து வீட்டுக்காரர் புகார் செய்திருந்தார்.

அது உண்மை என்பதை அறிந்த அதிகாரி, ரொபர்ட் மீது இரு குற்றப்பத்திரிகை அளித்துள்ளார்.

ஒவ்வொரு குற்றமும் 15 நாள் சிறைத் தண்டனையையும் 250 டொலர் அபராதத்தையும் பெற்றுத் தந்துள்ளது.

தன்னுடைய நோய் குறித்து பக்கத்து வீட்டுக்காரர் ஏளனம் செய்வதால் தான் சத்தமாக பதிலுக்கு சிரிப்பதாக ரொபர்ட் கூறியுள்ளார்.

ஆனால் இந்த சிரிப்பு சத்தம் கோபத்தையும், வெறுப்பையும், தொந்தரவு செய்யக் கூடியதாகவும், மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத் தக்கூடிய விதத்திலும் இருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

உலகம் பேசுகிறது

# உலகின் மிகச் சிறிய ஆசிரியர்

உலகின் மி சிறிய ஆசிரியர் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார் இந்தியாவின் ஹரியான மாநிலத்தைச் சேர்ந்த அச என்பவர்.

இவர் இங்குள்ள பெண்கள் கல்லூரி ஒன்றில் கணினித்துறையில் கல்வி கற்பித்து வருகிறார்.

அசாத்திற்கு தற்போது 22 வயது. ஆனாலும் கூட 13 இறாத்தல் நிறையுடைவராகவும் 7 வயதினருக்குரிய ஆடையை அணிபவராகவும் உள்ளார்.

இவர் 5 வயதாக இருக்கும் போது ஹோர்மோன் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் இவரது வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. குடும்பத்தின் வறுெ நிலை காரணமாக இவருக்கான மருத்துவ வசதிகளும் மறுக்கப்பட்டுள்ளது. சர்க்கஸ் குழுவொன்றினால் சிறுவயதிலே கடத்தப்பட்ட இவர் பின்னர் படித்து உயர்ந்த நிலைக்கு வந்துள்ளார். கணினித்துறை கற்பித்தல் ஊடாக இவர் தற்போது மாதம் ஒன்றுக்கு 10,000 இந்தியன் ரூபாய்களை வருவாயாகப் பெறுகிறார். கல்லூரி மாணவர்கள் இவரை "லிட்டில் ஸ்டார்" என செல்லமாக



அழைத்து வருகின்றனர். "நான் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. நான் எப்போதும் எதை விரும்பினேனோ தற்போது அதை அடைந்துள்ளேன்" என அவர் தெரிவித்துள்ளார் அசாத். அசாத் தற்போது மகிழ்ச்சியாக இருப்பதாக அவரது தாயார் பார்வதி தெரிவித்துள்ளார்.

# தோட்டத்தில் பரீஸை உருவாக்கிய மனிதர்



பரீஸ் ஒரு காதல் நகரம் என்று உலகம் முழுவதும் தெரியும், இந்நகரின் அழகை அப்படியே தனது தோட்டத்தின் பின்புறம் அமைத்திருக்கிறார். ஒரு சிற்பக் கலைஞர். மீள்சுழற்சி செய்யப்பட்ட பொருட்களுடன் சுமார் 15 வருட கால முயற்சியின் பலனாக உருவானது தான் இந்த குட்டி பரீஸ் நகரம்.



சர்ச்சையில் சிக்கிய மலிங்க

# புகழ் வந்தால் தலைக்கனமும் வருமோ?

கடந்த வாரம் இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் உட்பட சகலரினதும் கவனத்தை ஈர்த்த விடயம் இலங்கை கிரிக்கெட் அணியினரின் சம்பள விவகாரம் உட்பட வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ஊடகங்கள் முன் நடந்துகொண்ட விடயம்.

தான் புகழடைய ஊடகங்களின் காலைப்பிடிக்கும் சிலர் புகழடைந்து உச்சத்திற்கு வந்தபின் ஊடகங்களை அடக்கி புறக்கணிக்க நினைப்பது தற்போது வாடிக்கையாகிவிட்டது. அவ்வாறான ஒரு சம்பவமே கடந்தவாரம் இடம்பெற்ற மலிங்கவின் அநாகரிக செயற்பாடு.

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்குமிடையிலான ஒப்பந்தம் பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், புதிய வருடத்திற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதில் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கும் கிரிக்கெட் சபைக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. கிரிக்கெட் சபையின் வருமானத்தில் 78 வீத கொடுப்பனவு தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று கிரிக்கெட் சபைக்கு எதிராக வீரர்கள் 22 பேர் கொடி தூக்கியிருந்தனர். கிரிக்கெட் சபை இக்கோரிக்கையை மறுத்திருந்தது. சாதாரணமாகவே இலங்கை கிரிக்கெட் வீரர்கள் இலட்சக்கணக்கில் சம்பளம் உட்பட விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் வருமானத்தை பெற்று வருகின்றனர். இலங்கை கிரிக்கெட் சிரேஷ்ட வீரர் ஒருவருக்கு மாதம் 40 இலட்சம் வீதம் வருட வருமானம் 500 இலட்சமும், கனிஷ்ட வீரர்கள் மாதம் 20 இலட்சம் வீதம் வருடம் சுமார் 250 இலட்சமும் சம்பாதிக்கின்றனர். இதற்கு மேலாக இன்னும் சம்பள அதிகரிப்புக் கோருவது அநீதியானது என விமர்சனம் தெரிவிக்கப்படுகின்றது.

நான் எனது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியபோது 250 ரூபாவே சம்பளமாக வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வழங்குகின்ற வேதனத் தொகை அதிகமாக இருந்தாலும், இலங்கை அணி வீரர்கள் நாட்டின் நிலைவரங்களை அறிந்து செயற்படவேண்டும். வேதன அதிகரிப்பைக் கோரி போராடும் வீரர்களை விலக்கிவிட்டு இளம் வீரர்களை இணைத்துக் கொள்வதில் தவறில்லை. இலங்கை வீரர்கள் நம்பமுடியாத வகையில் மிகப்பெரிய தொகையை வேதனமாகப் பெற்றுக்கொண்டு மேலும் அதிக தொகையை கோருவது நியாயமற்றது என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை (1996) பெற்றுக் கொடுத்தவருமான அர்ஜுன ரணதுங்க எம்.பி. கடுமையாகச் சாடியுள்ளார்.

இலங்கை வீரர்கள் கோடிக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டே மேலும் சம்பள அதிகரிப்பு கோருகின்றனர் என்பதற்கு இன்னுமொரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். இலங்கையின் முன்னணி வீரரான திலகரட்ன டில்ஷான் தனது முதலாவது மனைவியை விவாகரத்து செய்தபோது தனது 9 வயது மகனுக்கு ஜீவனாம்சம் தருவதாகக் கூறியபோதும், தற்போது மூன்று ஆண்டுகளாக மாதாந்தம் வழங்கி வந்த 20 ஆயிரம் ரூபாவும் காப்புறுதிப் பணத்தையும் வழங்கவில்லையென முன்னாள் மனைவி நிலங்கா வழக்கு தொடர்ந்துள்ளார். இதில் டில்ஷானின் வருமானத்தை அம்பலப்படுத்தியுள்ளார்.

இலங்கை அணி கிரிக்கெட் வீரரான டில்ஷான் மாதம் ஒன்றுக்கு 12 மில்லியன் ரூபா வருமானம் பெறுகிறார். வருட வருமானமாக 150 மில்லியன் ரூபா கிடைக்கின்றது. இலங்கை கிரிகெட் சபை வருடம் ஒன்றிற்கு டெஸ்ட் போட்டிகளுக்காக 625 ஆயிரம் ரூபாவும் ஒருநாள் போட்டிகளுக்காக 375000 ரூபாவும், இருபது-20 போட்டிகளுக்காக 275 ஆயிரம் ரூபாவும், 2008, 2012 ஐ.பி.எல் போட்டிகளுக்காக 300 மில்லியன் ரூபாவும் கிடைத்தது.

மேலும் 2011 இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக 50 மில்லியன் ரூபாவும், 2012 இல் நடைபெற்ற 20-20 உலகக்கிண்ண போட்டிகளுக்காக 18 மில்லியன் ரூபாவும் கிடைத்தது. இலங்கை மாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பிரிமியர் லீக் (SLPL) போட்டிகளுக்காக 6.2 மில்லியன் ரூபாவும் கிடைத்தது என டில்ஷானின் வருடத்திற்கான முழு வருமானத்தையும் அவருடைய முதல் மனைவி நிலங்கா வெளியிட்டுள்ளார். இவ்வாறு கோடிக்கணக்கான சம்பளத்தை பெற்றுக்கொண்டு இலங்கை அணி வீரர்கள் சம்பள அதிகரிப்பு கோரி நிற்பது வேடிக்கையான விடயமே.

ஆக, இவ்வாறு கோடிக்கணக்கான சம்பளம் பெறும் வீரர்கள் சம்பள அதிகரிப்பு கோரி புதிய வருடத்திற்கான கிரிக்கெட் சபையுடனான ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்த நிலையில் அவர்களை கலந்துரையாடல் மேற்கொள்ள வரும்படி கிரிக்கெட், தெரிவுக்குழுவின் புதிய தலைவர் சனத் ஜயசூரிய அனைத்து வீரர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

சனத் ஜயசூரியவுடனான கலந்துரையாடலுக்கு இலங்கை அணியின் முக்கிய வீரர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களிடம் கருத்து கேட்பதற்கு ஊடகங்கள் அதிக முனைப்புக் காட்டின. இலங்கை கிரிக்கெட்டின் வாழ்வா? சாவா? நிலையை அறிய ஊடகங்கள் ஆர்வம் காட்டியதில் தவறில்லை. அது ஊடக சுதந்திரமும் கூட. அந்த வகையில் கலந்துரையாட வந்த வீரர்களிடம் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்டபோது வீரர்களும் நாகரிகமான முறையில் கருத்து தெரிவித்து சென்றனர்.

அப்போது வருகை தந்த வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவிடம் ஊடகவியலாளர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டீர்களா? என கேட்டபோது நான் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட வரவில்லை. நான் விருந்து சாப்பிடவே வந்தேன் என முகத்திலடித்தது போல அநாகரிகமாக பதிலளித்தார். கிரிக்கெட் சபைக்கு வெளியே வந்த லசித் மலிங்கவிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகேட்க முனைந்தபோது "எய் மாவ தெக்கலா நெத்த? வெட பலாகன யனவா மனுசயோ..." (ஏன் என்னைப் பார்த்தது இல்லையா? உங்களுடைய வேலையைப் பார்த்துக்கொள்ளுங்கள்) என கடுமையாகப் பேசிவிட்டு சென்றார்.

இவருடைய கருத்துகளால் ஊடகத்துறையினர் உட்பட கிரிக்கெட் விமர்சகர்கள் இவரை கடுமையாக விமர்சித்து வருவதுடன், கிரிக்கெட் சபை விசாரணை மேற்கொள்ளவும் முடிவெடுத்துள்ளது.

உயர்த்திவிட்ட ஏணியை எட்டி உதைப்பதுபோல புகழ்பெற வளர்த்துவிட்ட ஊடகங்களிடம் கடுமையாக நடந்துகொள்வது தலைக்கணம் தவிர வேறெதுவும் இல்லை. இவ்வாறானவர்கள் ஊடகங்களின் பார்வையில் இருந்து தானாகவே ஓரங்கட்டப்படுவார்கள் என்பது நிதர்சனமான உண்மை.



எம்.தாசன்

தினக்குரல்
Voice of Students
100% NATURAL
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
வித்யாதரம்
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை
25 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ) විභාගය 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

**பௌதீகவியல் II**
**Physics II**

3 மணித்தியாலங்கள்
**3 hours**

**குறிப்பு - எல்லா வினாக்களுக்குமான விடையினையும் உமக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளடித்தாளில் குறித்து எதிர்வரும் 17.03.2013 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி " கல்விக்குரல்", யாழ் தினக்குரல் இல, 336, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.**


## பகுதி B - கட்டுரை வினா

(1) a. அணுக்கருக்களுக்கு வெளியிலுள்ள எல்லா விசைகளுக்கும் காரணமாக இருப்பது ஈர்ப்புப்புலம், மின்புலம்,காந்தப்புலம் என்பவற்றில் ஒன்று அல்லது அவற்றின் சேர்மானங்களாக இருக்கலாம்.

i. ஒவ்வொரு புலத்தாலும் ஏற்படும் விசைகள் தொழிற்படும் பௌதீக இயல்பைக் கூறுக.

ii. ஒவ்வொரு புலத்தாலும் ஏற்படும் விசைகளின் திசைகளை புலங்களின் திசை சார்பாக கூறுக.

b. கார் ஒன்று மட்டான தரையின் வழியே பிரயாணம் செய்கிறது காரில் மூன்று விசைகள் தொழிற்படுவதாக கருதப்படுகிறது அவை படத்தில் குறிக்கப்பட்டுள்ளன.




i. விசைகள் A,C விளையுள் விசைகளாக கருதப்படுவது ஏன் என விளக்குக.

ii. விசை Aயினது பருமன் 8200N விசை A யானது நிலைக்குத்துடன் $28^{\circ}$ கோணம் அமைக்கும் திசையிலுள்ளது. விசை B யானது கிடைத்திசையில் உள்ளது. அதன் பருமன் 1500N பின்வருவனவற்றைக் கணிக்க.

1. காரின் திணிவு
2. காரில் தொழிற்படும் விளையுள் விசை
3. காரின் ஆர்முடுகல்

iii. உராய்வு இல்லையெனின் காரின் இயக்கமானது சாத்தியமில்லை. உராய்வு என்பதனையும் காரில் தொழிற்படும் உராய்வு விசையின் திசை என்பதனையும் விளக்குக. உமது விடையில் உராய்வின் பிரயோகத்தை பயன்படுத்தும் உதாரணமொன்றையும் குறிப்பிடுக?

C. உராய்வு இல்லாமல் பொருள் ஒன்று ஓய்வில் இருந்து இயங்குகின்றதற்கு உதாரணமொன்று தருக.

(2) a. வளியில் இருந்து தளக் கண்ணாடிக்குற்றிக்குள் பிரவேசிக்கும் ஒளிக்குரிய கதிர்ப்படத்தை வரைக. கதிர்படத்தில் படுகோணம் i, முறிகோணம் r ஆகியவற்றை குறிக்க.

b. வளி சார்பாக கண்ணாடிக்குரிய முறிவுச்சுட்டிக்குரிய கோவையை

i. படுகோணம் i, முறிகோணம் r ஆகியவற்றில் எழுதுக.


ii. வளியில் ஒளியின் வேகம் $C_a$ கண்ணாடியில் ஒளியின் வேகம் $C_g$ ஆகியவற்றில் எழுதுக.

C. கண்ணாடி வளிமேற்பரப்பில் ஒளி விழுகின்றபோது சில நேரங்களில் பகுதித்தெறிப்பும் பகுதி முறிவும் அடைகின்றன. சில நேரங்களில் முழுவுட் தெறிப்பு அடைகின்றன. முழுவுட் தெறிப்பு அடைவதற்கான நிபந்தனைகளை எழுதுக.

d. i. முறிவுச் சுட்டி 1.41 உடைய பிளாஸ்ரிக் திரவியத்தின் அவதிக் கோணத்தை கணிக்க.

ii. வீதி சமிக்ஞைகளுக்கு பயன்படுத்தப்படும் வர்ணம் (colour) உயர்ந்த முறிவுச்சுட்டி உடையது. அத்துடன் சிறிய கோளவடிவமான முத்துக்களையும் கொண்டிருக்கும். இம்முத்துக்களின் முறிவுச்சுட்டி 1.41 படமானது இம்முத்து ஒன்றில் தொடலி வழியே ஒடுங்கிய ஒளிக்கற்றை ஒன்று படுவதை காட்டுகின்றது. இவ் ஒளிக்கற்றையின் ஒரு பகுதி முறிவடைந்து முத்துக்குள் செல்கிறது. படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்து பின்வரும் சந்தர்ப்பத்திற்குரிய கதிர் படத்தை ஒரே படத்தில் வரைக.

1. புள்ளி Aயில் ஒளிக்கதிரானது முறிவடைகின்றது.
2. புள்ளி Bயில் ஒளிக்கதிரானது பகுதியாக தெறிப்படைகின்றது.
3. ஒளிக்கதிரானது அடுத்த மேற்பரப்பை அடையும்போது முறிவடைகின்றது.




படம் X

e. ஏன் முத்துக்கள் பகுதி D யில் வர்ணத்தில் பயன்படுத்தப்படுகின்றன. விளக்குக.

f. படம் X இல் காட்டியுள்ளது போல் இன்னொரு ஒடுங்கிய ஒளிக்கற்றை சிறிய கோள வடிவமான முத்தை புள்ளி Dஇல் அடிக்குமாயின் கோணங்களுக்குரிய கணிப்புகள் இன்றி இவ் ஒளிக்கற்றையின் அடுத்தடுத்து நிகழும் முறிவு.தெறிப்பு முறிவுக்குரிய பாதையை வேறொரு கதிர் படத்தில் வரைக.

g. அழுத்தமான மேற்பரப்பில் ஒளியானது தெறிப்படையும் போது (படம் Xஇல்) புள்ளி Bயில் ஒளியானது முனைவாக்கம் அடைகின்றது. முனைவாக்கம் என்றால் யாது?

(3) தனிமையாக்கப்பட்ட கோளக்கடத்தியொன்று நேர் மின்னேற்றப்பட்டுள்ளது.



a. கோளக்கடத்தியை உமது விடைத்தாளில் வரைந்து இதில்

i. கோளக்கடத்தியினால் ஏற்படும் மின்விசைக் கோடுகளை வரைக. (இதனை Eயினால் குறிக்க)

ii. கோளக்கடத்தியினால் ஏற்படும் சமஅழுத்த மேற்பரப்புக்களை வரைக. (இதனை Vயினால் குறிக்க)

தொடர்ச்சி 12 ஆம் பக்கத்தில்...

b.கோளக்கடத்தியின் மேற்பரப்பிலுள்ள புள்ளிகளில். மேற்பரப்புக்கு வெளியேயுள்ள புள்ளிகளில். மின்னேற்றப்பட்ட கோளக்கடத்தியானது அதன் மையத்தில் பொதிந்துள்ள புள்ளி ஏற்றம் போல தொழிற்படுகிறது. மையத்திலிருந்தான தூரத்துடன் கோளக்கடத்தியால் ஏற்படும் மின்னழுத்தம் அளக்கப்பட்டது அதற்குரிய பெறுமானங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| தூரம் X (cmஇல்) | அழுத்தம் (Vஇல்) |
|---|---|
| 19 | $1.50 \times 10^5$ |
| 25 | $1.14 \times 10^5$ |
| 32 | $0.89 \times 10^5$ |
| 39 | $0.73 \times 10^5$ |

i. வரைபு வரையாமல் தரவுகளை பயன்படுத்தி அழுத்தம் V ஆனது தூரம் Xஇற்கு நேர்மாறு விகித சமன் எனக் காட்டுக.


ii. கோளத்தின் மேற்பரப்பில் மின்னழுத்தம் $1.9 \times 10^5$ V எனின் கோளத்தின் ஆரையைக் கணிக்க.

c.b.(ii)குரிய விடையைப் பயன்படுத்தி

i. கோளக்கடத்தியிலுள்ள ஏற்றத்தைக் கணிக்க.

ii. கோளத்தின் கொள்ளளவைக் கணிக்க.

d.இதே மாதிரியான நேர் ஏற்றப்பட்டகோளக்கடத்தியின் உட்பகுதியில் புரோத்திரன் முதல் ஒன்று வைக்கப்பட்டு இப்புரோத்திரன் வெற்றிடக் குழாயின் வழியே பூமிக்கு ஆர்முடுக்கப்படுகின்றது.புரோத்திரனானது ஓய்விலிருந்து $1.9 \times 10^5$V அழுத்த வேறுபாட்டிற்கூடாக ஆர்முடுகப்படுகிறது.( புரோத்திரனின் திணிவு $1.67 \times 10^{-27}$Kg)




i. புரோத்திரனின் அழுத்த சக்தி மாற்றத்தைக் கணிக்க?

ii. புரோத்திரன் பூமிக்கு இணைக்கப்பட்ட தட்டை அடிக்கும் கதியை கணிக்க?

a. புரோத்திரனானது வெற்றிடக் குழாயினூடாக வெளியேறும் பிரதேசம் 0.18T காந்தப்பாய அடர்த்தியுடையது புரோத்திரனானது இவ் காந்தப்புலப் பிரதேசத்தில் அசையும் திசைக்கு செங்குத்தாக உள்ளது.

i. காந்தப்புலத்தில் புரோத்திரனின் பாதையின் ஆரையைக் கணிக்க


ii.புரோத்திரனின் பாதையின் ஆரையிலிருந்து புரோத்தனின் இயக்கசக்தியைக் கணிக்கலாம். புரோத்தனின் இயக்கசக்தி குறையுமாயின் அதன் பாதையின் ஆரைபற்றி குறிப்பிடுக.

(4) Aஅல்லது Bயிற்கு விடை தருக.

(A)மின்வலு நிலையத்திலுள்ள மின்பிறப்பாக்கியானது கொதிநீராவியை (Stream turbine) பயன்படுத்தி இயக்கப்படுகின்றது. எஞ்சினானது (turbine) கொதிகலத்திலிருந்து ஊறிஞ்சும் வெப்ப சக்தியை வேலை செய்ய பயன்படுத்துகின்து. அப்படி இருந்த போதிலும் வெப்ப சக்தியானது எஞ்சினிலிருந்து (turbine) குளிராக்கும் தொகுதியால் அகற்றப்படுகிறது.(படத்தில் காட்டியுள்ளது போல்)

எஞ்சினின் (turbine) செயற்படுவிசைதிறன் e என வரையறுக்கப்படுகின்றது.

$$e = \frac{\text{பயப்பு பயன்படுவேலை}}{\text{பெய்ப்பில் உள்ள வெப்பசக்தி}}$$




வெப்ப எஞ்சினில் (Heat engine) வினைத்திறனுக்குரிய உதாரணம் இவ் எஞ்சினாகும் (turbine) கொதி கலத்தினதும் குளிராக்கும் தொகுதியினதும் வெப்பநிலைகள் குறித்த வெப்பநிலைகளிலும் பார்க்க அதிகரிக்க கூடாது.இலட்சிய எஞ்சின்) (turbine) இன்வினைதிறன்

$e_{max} T_2 - T_1/T_2$ இங்கு $T_2$- கொதிகலத்தின் வெப்பநிலை கெல்வினில்

$T_1$- குளிராக்கும் தொகுதியின் வெப்பநிலை கெல்வினில்

குறித்த ஒரு மின்வலு நிலையத்தின் மேலதிக தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

பயப்பு மின்வலு – 200MW

மின்பிறப்பாக்கியின் வினைதிறன் -100%

எஞ்சினின் (turbine) செயற்படுவினைதிறன் -31%

இலட்சிய எஞ்சினின் (turbine) செயற்படு வினைதிறன் -52%


குளிராக்கும் தொகுதியின் பயன்படு வெப்பநிலை -330K

குளிராக்கும் தொகுதியில் பயன்படுத்தப்படும் நீரானது 283K வெப்பநிலையில் பிரவேசித்து 291K வெப்பநிலையில் வெளியேறுகிறது.

குளிராக்கும் நீரின் தன் வெப்பக்கொள்ளளவு $4200 JKg^{-1}K^{-1}$

a.கொதிகலத்தின் வெப்பநிலை $100^0$c குளிராக்கும் தொகுதியின் வெப்பநிலை $27^0$c எனின் எஞ்சினின் இலட்சிய வினைதிறனை கணிக்க.

b.இலட்சிய வினைதிறன் $e_{max}$இற்கும் கொதிகலத்தின் வெப்பநிலைக்குமான வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




i. $e_{max}$=0இற்குரிய கொதிகலத்தின் வெப்பநிலை $T_2$ வரைபில் இருந்து கணிக்க.

ii.பகுதி b(i) இல் இருந்து குளிராக்கும் தொகுதியின் வெப்பநிலை $T_1$ கணிக்க

iii.எஞ்சினின் இலட்சிய வினைதிறனானது குளிராக்கும் தொகுதியினது வெப்பநிலை குறைவடைய அதிகரிக்கும். இது நடைமுறையில் வினை திறனை அதிகரிப்பதற்கு பொருத்தமானதன்று ஏன்?

c. i.மின்வலு நிலையத்திலுள்ள கொதிகலத்தின் பயன்படு வெப்பநிலையை கணிக்க.

ii. எஞ்சினுக்கு வழங்கப்படும் பெய்ப்பு வெப்பசக்தி வீதத்தை கணிக்க.

iii.எஞ்சினிலிருந்து வெப்பசக்தி அகற்றப்படும் வீதத்தை கணிக்க.

iv.குளிராக்கும் தொகுதியினூடான நீரின் பாய்ச்சல் வீதத்தைக் கணிக்க.

d.எஞ்சினின் இலட்சிய வினைத்திறனிலும் பார்க்க செயற்படுவினைதிறன் குறைவாக இருப்பதற்கான காரணம் தருக.

e.லண்டனின் பெற்றோலியப் பொருட்களை (Fossils) எரிப்பதனால் பெறப்படும்

தொடர்ச்சி 21 ஆம் பக்கத்தில்...

Educatation Voice of Thinakkural
தினக்குரல் - கல்விக் குரல்
...T I

# අධ්‍යයන පොදු සහතික පත්‍ර ( උසස් පෙළ) විභාගය 2013 අගෝස්තු
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
# General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

**தமிழ் - I**
**Tamil - I**

**3 மணித்தியாலங்கள்**
**3 hours**

## தமிழ் I

ஐ பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ள வற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i)

**நல்லூரை யிகந்து புல்லுரை தாஅய்ப்**
**பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி**
**அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்**
**பெரிதா லம்மநின் பூச லுயர் கோட்டு**
**மகவுடை மந்தி போல**
**அகனுறத் தமீஇக் கேட்குநர்ப் பெறினே**

அ. இச் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.

ஆ. இதில் கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக.

இ. இச் செய்யுள் மூலம் விளங்கும் சங்ககால அகத்திணை இலக்கிய மரபுகளை எடுத்துக் காட்டுக.

(ii)

**பெருமகன் தன்னொடும் பெயர்வோர்க் கெல்லாம்**
**விலங்கும் நரகரும் பேய்களும் ஆக்கும்**
**கலங்கஞர் தீவினை கடிமின் கடிந்தால்**
**தேவரும் மக்களும் பிரமரும் ஆகுதிர்**
**ஆதலின், நல்வினை அயரா தோம்புமின்**
**புலவன் முழுதும் பொய்யின் றுணர்ந்தோன்**
**உலகுயக் கோடற்கு ஒருவன் தோன்றும்**
**அந்நாள் அவனறம் கேட்டோர் அல்லது**
**இன்னாப் பிறவி இழுக்கு நரில்லை**
**மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்**
**போற்றுமின் அறமெனச் சாற்றிக் காட்டி**
**நாக் கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்**

அ. இச்செய்யுட் பகுதி இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.

ஆ. இதில் கூறப்பட்டுள்ள பௌத்த மத அறக்கருத்துக்களை எடுத்துக் காட்டுக.

இ. புத்தர் பெருமானின் பெருமைகளைக் குறிப்பிடுக.

ஈ. **" நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்"** எனும் தொடரின் பொருட்சிறப்பினை விளக்குக.

12+12 = 24 புள்ளிகள்

2. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

**ஆளப் பிறந்த விவசாயி - இங்கு**
**அடங்கிக் கிடந்தா னொரு நாளில்**
**கூழைப் பிசைந்தான் குடிசையிலே – அவன்**
**குறுகிக் கிடந்தான் கொள்கையிலே**

**நிலத்தை யுழுவான் நிலத்தினிலே – தன்**
**நினைவு இழந்து சாகுமட்டும்**
**கலப்பை யிழுக்கும் மாட்டுடனே – அவன்**
**காலங் கழித்தான் கண் கலங்கி**

**உண்பது முடுப்பதும் வயல்தனிலே – அவன்**
**உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே**
**விண் தான் தனது கூரையென - ஐயோ**
**வியர்வை தன்னில் குளித்திடுவான்**

**உழுபவருக்கு நிலமெல்லாம் - இங்கு**
**உருத்தா யாக்கிடச் சட்டங்கள்**
**நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்**
**நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்.**

**பண்ணை முறையில் பலநூறு – வயல்**
**பரப்பை உழுது உழைக்கட்டும்**
**திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்**
**தின்ன நினைத்தால் செருப்படிதான்**

**காட்டை வெட்டி களமாக்கி – அதைக்**
**கதிர்கள் கொட்டும் தலமாக்கும்**
**நாட்டின் இறைவன் விவசாயி – ஏன்**
**நன்றி மறந்தாய் முதலாளி**

தொடர்ச்சி 14 ஆம் பக்கத்தில்...

**அன்னை நாட்டைக் காப்பவனே அதைப்**
**பசியில் நின்று மீட்பவனே**
**அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்**
**ஆண்டவன் நீதான் நீ வாழ்க**

i. விவசாயிகள் படும் துன்ப துயரங்கள் இக்கவிதையில் வெளிப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

ii. இக்கவிதையில் கவிஞரது பொதுவுடைமை வாதக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா? அவை பற்றி விளக்கம் தருக.

iii. நாட்டின் இறைவனாக விவசாயியைக் கவிஞர் முன்னிறுத்திச் சொல்வதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக.

iv. **"திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத் தின்ன நினைத்தால் செருப்படிதான்"** – என்னும் கவிஞரது கூற்றினூடாக வெளிப்படுத்தப்படும் உணர்வுகளை பற்றிக் கருத்துரை வழங்குக.

**அல்லது**

(ஆ) கட்டிடத்துக்குள்ளே ஏறி விறாந்தையில் இருந்த மணிய அடிச்சன். ஒருத்தி வந்து கேட்டா. நான் மகள்ர பேரச் சொல்லி அவளப்பாக்க வந்திருக்கன் என்று சொன்னன். அந்தப் பெண் உள்ளே போனாள். கொஞ்ச நேரத்தால என்ரமகள் வந்தா. அவ இன்னொருத்தியோட வந்தா. அவளோட படிக்கிறவளாயிருக்கும். ஆனா அவளை விடவும் என்ரமகள் அழகி. கையால குத்தின பச்சரிசித் தவிட்டு நிறம். ஆனா உதடெல்லாம் எப்பவுமே அவளுக்குச் சிவந்திருக்கும். நீளமா ஒடிசலா இருப்பா. நடக்கைக்குள்ள இடுப்பு முறிஞ்சு போயிருமோ என்று நினைக்க வேணும். ஆனா பெரு வெளிக்குளத்துக்குள்ள பொழுது படக்குள்ள கூம்பி நிக்கிற தாமரைப் பூவைப் போல அவள் தாவணிக்கு மேலாக நெஞ்சு நிமிர்ந்திருக்கும். என்ர பிள்ளையைப் பார்த்தவன் சீதனம் இல்லாமலேயே அவளைக் கொண்டு போய்விடுவான் என நான் எண்ணுவன்.

ஆவள் என்னைக் கண்டதும் அவள்ர முகம் நல்லால்ல. ஊரிலே இருந்து அம்மா வந்திருக்காளே என்று அவசிரிக்கவும் இல்ல. முகத்தை உம்மெண்டு வச்சிக் கொண்டு வந்தா அவளைக் கண்டு நான் சிரிச்சன். "நீ ஏன் வந்தனி?" என்று எரிஞ்சு விழுந்தா அவ. இதுக்கு நான் என்னத்தச் சொல்றது? என் தலைப்பு முடிச்ச அவிழுத்து நூறு ரூபாவையும் கொடுத்தன். நாலா மடிச்ச முடிஞ்சி வைத்திருந்த பத்துப் பத்து ரூபாய்த் தாள்கள். அத வாங்கின உடன் மகள் திரும்பிக் கொண்டு நடந்தா.

நான் அவ்விடத்திலேயே தெகைப்பூண்ட மிரிச்சவள் போல நிக்கன் மகள் போகக் குள்ள தன்னோட வந்தவளிட்டச் சொல்றா "எங்கம்மா இந்த வேலைக் காரிட்டைக் காசுக் குடுத்து அனுப்பியிருக்கா" எனக்குப் பூமி பிளந்து என்னை விழுங்கினாப் போல இருக்கு அதுக்குப் பிறகு நான் ஊருக்கு வரல்ல. நேற்றுத்தான் வந்தன். என்னை பைத்தியம் என்று ஊருக்க சொல்றாங்க மகனே! நீ சொல்லுடா எனக்குப் பைத்தியமாடா?

i. தாய், மகள் எனும் இருபாத்திரங்கள் மாறுபட்ட குணப்பண்புகள் இப்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தன்மையை எடுத்து விளக்குக.

ii. என்னைப் பைத்தியம் என்று ஊருக்கு சொல்றாங்க மகனே' எனும் தயாயின் கூற்று வாசகர் மனதில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிக் கருத்துரை வழங்குக.

iii. இப்பகுதியில் கையாளப்பட்டுள்ள உவமைகளைத் தருக.

iv. ஆசிரியரது மொழிநடை குறித்து கருத்துரை வழங்குக.

(4X4 =16 **புள்ளிகள்**)

## பகுதி II

3. **"சொல்வன்மை"** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) சொல்வன்மை ஏன் ஒருவனுக்கு இன்றியமையாததாக அமைய வேண்டும்?

(ஆ) சொல் பற்றிய வள்ளுவரின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக.

(இ) சொல்லினது திறன் அறிந்தே பேச வேண்டும் என்பது விளங்குமாற்றை எடுத்துக் காட்டுக.

(ஈ) சொல்வன்மை உடையவரது சிறப்பையும் அது இல்லாதவரது இழிவையும் வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகின்றார்?

**( 20 புள்ளிகள் )**

4. கைகேயி சூழ்வினைப் படலத்தில் கைகேயி தன் கோலம் சிதைத்தது முதல் தசர தனிடம் இரு வரங்களையும் அவள் கேட்பது வரையான பகுதியில்

(அ) கைகேயியின் கோலச் சிதைவு

(ஆ) தசரதன் கைகேயி மீது கொண்டுள்ள அளவற்ற அன்பு

(இ) உவமையணியினைக் கையாள்வதில் கம்பனிடத்தில் காணப்படும் ஆற்றல்

(ஈ) கம்பரின் குறிப்புப் பொருள் என்பனவற்றைத் தெளிவுபடுத்துக

( 20 புள்ளிகள் )

5. **"பெரியாழ்வாரின்" வெண்ணெயளைந்த ...."** எனத் தொடங்கும் **"நீராட்டம்"** எனும் பாடற் பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை தெளிவு படுத்துக.

(அ) கண்ணனை எவ்வாறேனும் நீராட்டிவிட வேண்டும் என்பதற்காக யசோதை கையாளும் தந்திரங்கள்.

(ஆ) கண்ணனது குழந்தைத் தனமும் மேம்பட்ட தெய்வீக ஆற்றலும்

(இ) **"பூணித் தொழுவினிற் புக்குப் புழுதியளைந்த பொன்மேனி காணப் பெரிதுமுகப்பன் ஆகிலும் கண்டார்ப் பழிப்பர்"** எனும் அடிகளில் வெளிப்படுத்தப்படும் யசோதையின் தாய்மை உணர்வு

(ஈ) பல்லவர் காலத்திற்குரித்தான தனித்துவமான பக்தி இலக்கியப் பண்புகள் வெளிப்பட்டு நிற்றல்.

( 20 புள்ளிகள் )

6. **"யுகசந்தி"** எனும் சிறுகதையினை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

(அ) கௌரிப்பாட்டி

(ஆ) கீதா

எனும் பாத்திரப்படைப்புக்கள் கதையிடல் பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

(இ) இக்கதையின் வாயிலாக உணர்த்தப்படும் பிரதான செய்தி யாது?

(ஈ) ஆசிரியரது மொழிநடை குறித்து விளக்குக.

( 20 புள்ளிகள் )

7. பேராசிரியர் மு.வரதராசனாரின் **"மனவலிமை வேண்டும்"** எனும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவன பற்றி விளக்குக.

(அ) உலகினைத் திருத்துவது என்பது எளியது அல்ல என்பதற்கு ஆசிரியர் முன்வைக்கும் காரணங்கள்

(ஆ) எண்ணம் மனதினை அடிப்படையாகக் கொண்டதே என்பதற்கு ஆசிரியர் குறிப்பிடும் காரணங்கள்

(இ) மனம் பண்படுவதற்கான ஆசிரியரின் பரிந்துரைகள்

(ஈ) ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடை

( 20 புள்ளிகள் )

8. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினைத் தெளிவுபடுத்துக.

(அ) **"கருங்கால் வேம்பின்...."** எனும் குறுந்தொகைச் செய்யுளின் தலை வியின் மனஏக்கம் புலப்படுத்தப்பட்டுள்ள விதம்

(ஆ) பூக்காரியின் பூ விற்பனை பற்றிய சித்தரிப்பு **பூக்காரி** கவிதையில் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் தன்மை.

(இ) **உமர்சையாம்** பாடலில் காணப்படும் மொழிபெயர்ப்பு வேறுபாடுகள்

(ஈ) தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு எதிரான அடக்கு முறைகள் நீண்டபயணம் நாவலில் புலப்படுமாறு

(உ) **மழையழைப்பித்த** படலத்தில் கவிஞரால் கையாளப்பட்டுள்ள உவமை அணிச் சிறப்பு

**( 20 புள்ளிகள் )**

[முற்றும்]



அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

# சிநேகிதியே

## பெயார்ட் ஸ்கேர்ட்

(Faired Skirt)

**தேவையான புடவையின் அளவும் மடிக்கும் முறையும்**

60' அகலமான புடவை 2 Y தேவைப்படும்.

I. உயரப்பகுதியை 2 பகுதிகளாகவும் மடித்துக் கொள்ளவேண்டும்.
(படம் 1 இல் காட்டியவாறு)


II. அகலப் பகுதியை முக்கோணமாக மடித்துக்கொள்ள வேண்டும்.
(படம் 2 இல் காட்டியவாறு)

III. மடித்துக் கொண்ட புடவையை மேசையிலிட்டு முக்கோண பகுதியிலிருந்து கீழ் நோக்கி இடுப்பின் சுற்றளவை குறித்துக் கொள்ள வேண்டும்.
(24/3=8)
(படம் 3 இல் காட்டியவாறு)

**கணித முறை**


| | |
|---|---|
| இடுப்பின் சுற்றளவு | = 24 |
| உயரம் | = 25 |
| இடுப்பின் சுற்றளவு | = 24/3 |
| உயரம் | = 25+8 |
| | = 33 |

IV. படம் 3 இல் காட்டியவாறு இடுப்பின் சுற்றளவை 8 அங்குலம் குறித்து அதை வளைவாக வரைந்து கொள்ளவேண்டும்.
முக்கோணத்திலிருந்து கீழ்நோக்கி உயரத்தைக் குறித்து டேப்பின் உதவியோடு Faired வடிவில் வரைக.



தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :- திருமதி ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை

# பேர்ள் பேஷியல் செய்யும் முறை



ஒரு பெண் என்பவள் தன்னை எப்போதும் அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருப்பது மிகமிக அவசியம் என்பதை நாம் அடிக்கடி கூறிவருகின்ற ஒன்றாகும். ஆனால் இந்த ஆரோக்கியம் என்ற விடயத்தில் நாம் எமது சுத்தத்தை பேணுவதன் மூலமும் சத்தான காய்கறிகள், பழங்களை உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமும் இயற்கையாகவே செய்துகொள்ளலாம்.



தனு ரசாக்

ஆனால் இந்த அழகு என்ற விடயத்தில் நாம் அதற்கான தயாரிப்புகளை வாங்கி அவற்றை முறையாக உபயோகித்தாலே அந்த அழகு இன்னும் மேன்மையாக விளங்கும் என்கின்றார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

திருமண வைபவங்களுக்கு செல்லும் ஒரு பெண் எவ்வாறு தன்னை இவ் அழகுக்கலையின் மூலம் விரைவாக அழகாக்கி கொள்ளலாம் என்பது பற்றி தெரிந்திருத்தல் அவசியம். ஆம். இதற்காகவே தற்போது ப்ளீச்சிங்குடன் பேர்ள் பேஷியல் எனும் பேஷியல் முறை வந்துள்ளது. இவை இயற்கையான முறையிலும் செய்யக்கூடிய ஒரு பேஷியல் முறையாகும்.

இந்த முறையில் பேஷியல் செய்வதனால் முகத்திற்கு எந்தவிதமான பக்கவிளைவுகளும் ஏற்படாது.

இந்த பேஷியலில் முத்துகளால் செய்யப்பட்ட கலவைகள் உபயோகிக்கப்ப டுகின்றது. இந்த முத்தானது சருமத்திற்கு மிகச் சிறந்த பலனைக் கொடுக்கக்கூடியது. முதலில் இந்த பேஷியலின்போது பேர்ள் (முத்து) க்ளென்சர் உபயோகப்ப டுத்தப்படுகின்றது.

இந்த க்ளென்சர் கொண்டு நன்கு முகத்தை மசாஜ் செய்து கொள்ளவேண்டும். இந்த பேர்ள் க்ளென்சரை உபயோகிக்கும்போது முகத்தில் கரும் புள்ளிகள், முகத்தில் இறந்த கலங்கள் உள்ளவர்களின் சருமத்தில் இருந்து முற்றாக அழுக்குகளை அகற்ற இது சிறந்ததொன்றாகும்.

இதன்பிறகு ப்ரீ ப்ளீச் எனப்படும் ப்ளீச் சிங் கிறீமை பூசவேண்டும். இந்த ப்ளீச்சிங்குகளை நீங்கள் வீடுகளில் முயற்சி செய்யவேண்டாம். இதற்கு அவசியம் அழகு நிபுணர்களிடம் செய்வது மிகமிக பாதுகாப்பானதாகும்.

அதன்பின் ஹேர்பள் ப்ளீச்சிங் கிறீமை முகம் முழுவதும் கண்களைத் தவிர பூசி சிறிது நேரம் கழித்து சிறிது மசாஜ் செய்தபடியே இவற்றை அகற்றவேண்டும்.

அதன் பின் இறந்த செல்களை அகற்றுவதற்காக உபயோகிக்கப்படும் பேர்ள் ஸ்கரப்பை ஒரு 2 நிமிடங்கள் வரை அழுத்தாமல் மிதமாக மசாஜ் செய்துவிட்டு பின் முற்றாக அவற்றை அகற்றிவிட வேண்டும். அதற்கு அடுத்தபடியாக பேர்ள் கிறீமை உபயோகிக்க வேண்டும். இந்த பேர்ள் கிறீமை பூசி மசாஜ் செய்வதன் மூலம் முகத்திற்கு சீரான இரத்தவோட்டம் கிடைக்கும்.

அதன் பிறகு பேர்ள் ஜெல்லை பேர்ள் கிறீமின் மீது உபயோகிக்க வேண்டும். இந்த ஜெல்லானது முகத்திற்கு ஊட்டச்சத்தைக் கொடுக்கும். பின்னர் இதை அகற்றிவிட்டு பேர்ள் மாஸ்க், மிராக்கல் பவுடர் என்ற ஒரு கலவையானது இந்த பேஷியலின் போது இறுதியாக உபயோகிக்கப்படும்.

இந்த பேர்ள் பேஷியல் செய்யும்போது முகத்திற்கு மட்டும் செய்யாமல் கழுத்திற்கும் சேர்த்து செய்யவேண்டும். சில மணி நேரங்களுக்கப்புறம் அந்த பேஷ் மாஸ்க்கை அகற்ற சிறந்த வித்தியாசத்தை உங்கள் முகத்தில் நீங்கள் உடனடியாகக் காணமுடியும்.

எஸ்.பிரியதர்ஷினி

## பயனுள்ள வீட்டுக் குறிப்புகள்

- தேங்காயின் இளநீரை வீணாக்காமல் ரசத்தில் சேர்த்தால் ரசம் மிகவும் ருசியாக இருக்கும்.
- எந்த கறை ஆடையில் பட்டாலும் சிறிது வினிகர் போட்டு துவைத்தால் கறை இருந்த இடம் தெரியாது.
- அப்ப சட்டி பணியார சட்டிகளில் எப்பொழுதும் எண்ணெய் தடவியே வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அப்பம் பணியாரம் செய்யும்போது எளிதாக செய்யலாம்.
- கொதிக்கவைத்து ஆறிய நீரில் சீரகப் பொடியை போட்டு 12 மணி நேரம் ஆகி குடித்தால் இரத்த கொதிப்பு சீராகும்.
- மண்பாத்திரம் புதிதாக வாங்கினால் அதில் சிறிது எண்ணெய் தடவி அடுப்பில் சற்று நேரம் சூடேற்றி பின் கழுவினால் மண்வாசனையும் வராது விரிசலும் விடாது.
- பொரித்த அப்பளம் மீதமாகிவிட்டால் அதை பொலிதீன் பையில் நன்றாக சுற்றி ஃபிரிஜ்ஜில் வைத்துவிட்டால் ஒரு வாரம் ஆனாலும் மொறு மொறுப்பு மாறாமல் இருக்கும்.
- வாஷ் பேசினில் இரண்டு அல்லது மூன்று ரச கற்பூரம் போட்டு வைத்தால் எந்தவித துர்நாற்றமும் வராது.
- அடைக்கு அரைக்கும் போது அரிசி பருப்புடன் இரண்டு வேக வைத்த உருளைக் கிழங்குகளைப் போட்டு அரைத்தால் ருசியாக இருக்கும்.

# பாடல்



படம் :- திருத்தணி
பாடலாசிரியர் :-பேரரசு
இசையமைப்பு :- பேரரசு
பாடியவர் :-உன்னி மேனன், சின்மயி

ஆண்: அடி வானவில்லே வண்ணம்
கொஞ்சம் கலந்து கொண்டாடி...
உன்ன ஓவியமா வரைஞ்சி தாறேன்
நில்லு முன்னாடி...
பெண்: மேகமது... பாவமது...
மேகமது பாவமது தூரிகையால்
தொட்டால் தாங்காதே...
ஆண்: அடி வானவில்லே வண்ணம்
கொஞ்சம் கலந்து கொண்டாடி
உன்ன ஓவியமா வரைஞ்சிதாறேன்
நில்லு முன்னாடி
ஆண்: உன்னைக் கொஞ்சம் என்னைக்
கொஞ்சம் சேர்த்து வைப்போமா
பெண் : சேர்த்து வைத்து காதல்
என்னும் பெயரை வைப்போமா
ஆண் : கண்ணுக்குள்ளே கண்ணை
வைத்து நேசம் நெய்வோமா...
பெண் : நேசத்திலே பாசம் வைத்து
வாழ்வை செய்வோமா.....
ஆண்: உள்ளே வாங்கும் மூச்சுக் காற்றில்
உந்தன் சுவாசமடி
பெண் :வளர்ந்த பின்னும்
குழந்தையானேன் நீயே தாயின்மடி
ஆண்:அன்பே உந்தன் கையில்..
எந்தன் ஆயுள் ரேகை
பெண்: நீ வாழும் வரை வாழ்வேன்
அதுவே எந்தன் ஆயுள்
ஆண்: நீ ஔவை தந்த நெல்லிக்கனியா...
ஆ...ஆ...
(அடி அடி வானவில்லே...)
பெண்: மண்ணைத் தாண்டி
விண்ணைத் தாண்டி
பறந்து செல்வோமா..
ஆண் : நீயும் நானும் வாழ்ந்து பார்க்க
உலகம் செய்வோமா...
பெண்: சிங்கம் ஒன்று என்னை
வென்று இதயம் ஈட்டியதே
ஆண்: உன் உருவம் வந்து கண்ணில்
நின்று சிலையாய் நிற்கிறதே
பெண்: சொல்லில் கூட உந்தன் பெயரே
தமிழாய் தெரிகிறதே
ஆண்: நீ பேசும் பேச்சில் செம்மொழிதான்
என்னை ஆள்கிறதே
பெண்: புத்தம் புதுதேசம்
கண்டு கொண்டேன் நானும்
ஆண்: நம்மை மட்டும் தாங்கும்
காதல் தீவே தேகம்
பெண்: அட நம்மை சுற்றி
அன்பின் கடலா...
ஆ... ஆ...
(அடி வானவில்லே...)
பெண்: தேகமது... பாவமது...)
ஆண்: அடி வானவில்லே வண்ணம்
கொஞ்சம் கலந்து கொண்டாடி...
பெண்: என்ன ஓவியமா வரைஞ்சிதா
யேன் வந்தேன் முன்னாடி...

## பெண்களின் பிரச்சினையை சொல்லும் படம்!

மகளிர் தினம், அன்னையர் தினம் என்று பெண்களை போற்றி வந்த போதும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், நாளுக்கு நாள் மலிந்து வருகிறது. இந்தக் கருத்தின் அடிப்படையில் இரு கில்லாடிகள் என்றொரு படத்தை டென்மார்க் ஹான் என்பவர் இயக்கி வருகிறார். இப்படத்தில் பெண்களின் துயரங்களைப் பற்றி மட்டுமே சொல்லாமல் அதிலிருந்து விடுபடுவது எப்படி என்பதைப் பற்றியும் காட்டப் போவதாக கூறுகிறார்.

## விஜய சேதுபதியின் ஸ்டைல்!

பீட்சா, நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் படங்களின் வெற்றி, விஜய சேதுபதியை, வியாபார ரீதியில் உயர்த்தி விட்டது. இருப்பினும், பெரிய பட்ஜெட் படங்களில் நடிக்க விரும்பாத அவர், இப்போதும் சிறிய பட்ஜெட் படக்கதைகளாகவே, செலக்ட் செய்து நடிக்கிறார். அத்தோடு, இப்போதும் தன் சம்பளத்தை, தான் நிர்ணயிக்காமல் படாதிபதிகள் தரும் தொகையையே பெற்றுக் கொள்கிறார்.

# யூ டியூப்பில் பட்டையை கிளப்பும் ஆஜித்

வசந்த் இயக்கும் மூன்று பேர் மூன்று காதல் படப்பிடிப்பு முடிந்து வெளிவரத் தயாராகி விட்டது. அர்ஜுன், விமல் இவர்களுடன் தாமிரபரணி பானு நடிக்க சுர்வீன், லாசினி என்ற இரு புதுமுகங்கள் அறிமுகமாகிறார்கள்.

யுவன் இசை அமைத்துள்ள இப்படத்தில் மொத்தம் 5 பாடல்கள் இடம்பெறுகின்றன. இப்போது படத்துக்காக 6 ஆவது பாடல் ஒன்றை உருவாக்கி இருக்கிறார் யுவன். படத்தின் புரமோஷனுக்கான இந்த பாடலை விஜய் டிவியின் லிட்டில் சூப்பர் சிங்கர் போட்டியில் வெற்றி பெற்ற ஆஜித் பாடியுள்ளார். ''ஸ்டாப் தி பாட்டு...'' என்று தொடங்கும் இந்தப் பாடல் தற்போது யூ டியுப்பில் வெளியிட்டுள்ளனர். படத்தின் காட்சிகளுடன் ஆஜித் பாடுவதும் வீடியோ ஆல்பத்தில் இடம்பெறும். ஏப்ரல் 14 தமிழ் புத்தாண்டு தினத்தன்று படத்தை வெளியிட திட்டமிட்டிருக்கிறார்கள்.



## லிங்குசாமி-சூர்யா - சமந்தா

சிங்கம் 2-வுக்குப் பிறகு சூர்யா லிங்குசாமியின் இயக்கத்தில் நடிக்கிறார் என்பது உறுதியாகியிருக்கிறது. சூர்யாவின் கால்ஷீட்டை பெறுவதில் லிங்குசாமிக்கும், கௌதமுக்கும் கடும் போட்டி நிலவியது. இறுதி வெற்றி லிங்குசாமிக்கு. அவரின் திருப்பதி பிரதர்ஸ் இந்தப் படத்தை தயாரிக்கும் எனத் தெரிகிறது.

இன்னும் பெயரிடப்படாத படத்தில் ஹீரோயினாக நடிக்க சமந்தாவை ஒப்பந்தம் செய்துள்ளனர். இதனை சமந்தாவும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

நீதானே என் பொன்வசந்தம் படத்துக்குப் பிறகு சமந்தா நடிக்கப் போகும் படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



# சமையல் கலையில் அசத்தும் சமந்தா!

சில நடிகைகளைப் போன்று, சுடுதண்ணீர் கூட போட தெரியாதவர் அல்ல சமந்தா. கிச்சனுக்குள் புகுந்து விட்டால் சைவம், அசைவம் என்று பலதரப்பட்ட அயிட்டங்களை செய்து குடும்பத்தினரை அசத்தி விடுவார். அப்படி, தன் கைப்பட சமைக்கும் சில ஸ்பெஷல் அயிட்டங்களை அவ்வப்போது படப்பிடிப்புத் தளங்களுக்கும் கொண்டு வந்து இயக்குநர், ஹீரோக்களுக்கும் பரிமாறி, அவர்கள் மனதில் இடம் பிடித்து வருகிறார்.

சினிமா




## சந்தானத்துக்கு ஜோடியாகும் பொலிவுட் நடிகை!



“கண்ணா லட்டு தின்ன ஆசையா” படத்தை தயாரித்து, நடித்து வெற்றியடைந்த சந்தானம், தற்போது மீண்டும் ஒரு படத்தை தயாரித்து நடிக்க உள்ளார். அந்த படத்தில் சந்தானத்துக்கு ஜோடியாக பிரபல பொலிவுட் நடிகை கீதா பஸ்ரா நடிக்கிறார்.

தெலுங்கில் ராஜமௌலி இயக்கிய “மரியாதை ராமண்ணா” படம் தமிழில் ரீமேக் ஆகிறது. இந்த படத்தைதான் சந்தானம் பி.வி.பி. நிறுவனத்துடன் இணைந்து தயாரித்து நடிக்கவும் செய்கிறார். இப்படம் இந்தியில் “சன் ஒப் சர்தார்” என்ற பெயரில் ரீமேக் ஆகி பெரும் வெற்றி பெற்றது. தமிழில் ஸ்ரீநாத் இயக்குகிறார். பவர் ஸ்டாரும் ஒரு கேரக்டரில் நடிக்கிறார்.

## யாயாவை எதிர்பார்க்கும் சிவா!

“சிவ பூஜையில் கரடி” மற்றும் “தில்லு முல்லு” ஆகிய ரீ-மேக் படங்களில் நடித்து வரும் சிவா, தன் இன்னொரு படமான யாயாவை ரொம்பவே எதிர்பார்க்கிறார். காரணம், இப்படத்தில் அவருடன், சந்தானம், பவர் ஸ்டார் சீனிவாசன் ஆகியோரும் இணைந்து செம கொமெடி செய்துள்ளனர்.

## டாப்சியின் எதிர்பார்ப்பு



“தமிழ், தெலுங்கில் தலா இரண்டு படங்களில் நடித்து வந்தால் போதும் பொலிவுட் சினிமாவே என் டார்கெட்...” என்கிறார் டாப்சி. தற்போது, சஷ்மே பத்தூர் என்ற இந்திப் படத்தில் நடித்திருப்பவர், அப்படத்தை ரொம்பவே எதிர்பார்க்கிறார். அதனால், அந்தப் படத்தை விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சிகளில், பங்கு பெற்று வரும் டாப்சி ‘இந்தப் படம் வெற்றி பெற்றால், அதன் பின் முழுநேர இந்தி நடிகை ஆகிவிடுவேன்...’ என்கிறார்.

## பூஜாகுமாருக்கு பாராட்டு!

விஸ்வரூபம் படத்தில் நடித்துள்ள பூஜாகுமார், நடிகை மட்டுமின்றி, செய்தி வாசிப்பாளர், டான்சர், மொடல், குறும்படத் தயாரிப்பாளர் என்று, பலமுகம் கொண்டவர். ஆங்கிலத்தில் இவர் தயாரித்த “1001 ஆடியன்ஸ்” மற்றும் “ஹீட் மை லைப்” போன்ற குறும்படங்கள், ஹொலிவுட் இயக்குநர்களின் பாராட்டு பெற்றவையாம். அதனால் என்ன தான் நடிப்பில் பிசியாக இருந்த போதும், அவ்வப்போது ஒரு குறும்படத்தை தயாரித்து வெளியிடுவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளார் பூஜாகுமார்.

## கணவர் தயாரிப்பில் ஸ்ரீதேவி




பொலிவுட்டில் கடந்த 1987ஆம் ஆண்டில் வெளியாகி வசூலை குவித்த படம் மிஸ்டர் இந்தியா. அனில் கபூர்- ஸ்ரீதேவி நடித்த இந்தப் படத்தை ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர் தயாரித்திருந்தார். தற்போது இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தை தயாரிக்க முடிவு செய்துள்ளார் போனி கபூர்.

இந்தப் படத்தில் ஸ்ரீதேவி நடிப்பாரா என்பது பற்றி போனி கபூர் கூறியதாவது, கண்டிப்பாக நடிப்பார். ஆனால் அது எப்படிப்பட்ட வேடம் என்பதை இப்போது கூற முடியாது.

போனி கபூர், தற்போது “நோ என்ட்ரி மெயின் என்ட்ரி” என்ற படத்தை தயாரிக்கிறார். இந்தப் படம் முடிந்ததும் மிஸ்டர் இந்தியாவின் இரண்டாம் பாகம் தயாராகும் என்றார்.

## பாடல்



திரைப்படம் : ஆண்களை நம்பாதே
பாடகர்: K.J.யேசுதாஸ்
இசை : இளையராஜா

காதல் காயங்களே நீங்கள்
ஆறுங்களே
சோக நெஞ்சங்களே ஜோடி
மாறுங்களே
பெண்கள் உள்ளங்கள் நிலைமாறி
கிளைமாறுமே
ஆண்கள் உள்ளம் கண்ணீரோடு
அலைபாயுமே
காதல் பொய்யானது...
வாழ்க்கை மெய்யானது...
ஆனது ஆகட்டும் கோப்பை
ஏந்துங்களேன்.
(காதல் காயங்களே நீங்கள் )

வானம் அது ஒன்று தான்
வானில் நிலவொன்று தான்
காதல் கலைந்தாலும் மனதில்
என் நினைவொன்றுதான் (வானம்..)
தாளம் இல்லாமலே பாடல்
நான் சொல்கிறேன்
தெய்வம் இல்லாமலே பூஜை
நான் செய்கிறேன்
உண்மைக் காதல் என்றும்
கட்சிமாறி போகாதடா
காதலின் வேதனை என்றும்
தீராதடா...

(காதல் காயங்களே நீங்கள்)
பெண்மை பொல்லாதது
நேர்மை இல்லாதது
உண்மை தெரியாத மனிதா
உன் மனம் ஏங்குது (பெண்மை...)
உண்மைக் காதல் என்று
இங்கு ஒன்றும் இல்லை
நீயும் காதல் கொள்ள வேறு
பெண்ணா இல்லை

நீயும் வாழும் போது வாழ வேண்டும்
வழியா இல்லை
இன்னும் நீ ஊத்தடா பாட்டில் சுதியே
இல்லை...
இன்னும் நீ ஊத்தடா பாட்டில் சுதியே
இல்லை...
(காதல் காயங்களே நீங்கள் )

# எலியின் கர்வம்



அடர்ந்த காட்டுப்பகுதியில் குதிரை புல் மேய்ந்து கொண்டிருந்தது. அங்குள்ள பொந்து ஒன்றில் வசித்த எலியைக் கண்டதும், இரண்டும் பேசிப் பழகின. சிறந்த நண்பர்கள் ஆனார்கள். இருந்தாலும் எலி தற்பெருமை அடித்துக் கொள்ளும். நான் மிகவும் வலிமையானவன். மண்ணையே துளைத்து வளை அமைத்து விடுவேன். பாம்பைக்கூட விரட்டியடித்து விடுவேன் என்று வீண் பெருமை பேசும்.

ஒருநாள் எலியும், குதிரையும் கொஞ்சம் தூரத்தில் சென்று மேய்ந்து வர முடிவு செய்தன. இரண்டும் பேசிக் கொண்டு நடந்தன. அப்போது, நான் தான் உன்னை வழி நடத்திச் செல்வேன். நான் சண்டையில் அவனை வீழ்த்தியிருக்கிறேன், இவனை வீழ்த்தியிருக் கிறேன் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டே முன் சென்றது எலி.

திடீரென்று எலி நின்றது. ஏன் நின்றுவிட்டாய்? தொடர்ந்து செல் என்றது குதிரை.

உனக்கு கண் சரியாக தெரியாதா? எதிரே பார் ஆறு ஓடுகிறது, எப்படி கடப்பது? என்று கேட்டது எலி. அது ஆறா? சிறிய கால்வாய் தானே, எளிதாக கடந்து விடலாம் என்றது குதிரை. குதிரையே இது கால்வாயா? எனக்கு ஆறு போல் தான் தெரிகிறது. இறங்கினால் நிச்சயம் தண்ணீர் அடித்துச் சென்றுவிடும். நாம் இரண்டு பேரும் மூழ்கிவிடுவோம் என்றது எலி.

குதிரை எலியின் பேச்சை கண்டுகொள்ளாமல் கால்வாயில் இறங்கியது, ஏய் எலியே! என் முழங்கால் அளவு கூட வெள்ளம் இல்லை. இதையா நீ ஆறு என்கிறாய், உடனே இறங்கிவா? என்றது குதிரை.

நண்பா உனக்கு வேண்டுமானால், இது குறைந்த தண்ணீராக இருக்கலாம். ஆனால், என் உருவத்திற்கு இது நதிபோல வெள்ளப் பெருக்கு தான். தயவுசெய்து என்னை உன் முதுகில் ஏற்றி அக்கரையில் விடு. நான் என்னைப் பற்றி கர்வத்துடன் பேசியதை மறந்து விடு என்று மன்னிப்புக்கேட்டு அடங்கியது எலி. அப்படி வா, வழிக்கு. இனியும் வீண் பெருமை பேசி வாழாதே என்று எலியை, தன் முதுகில் ஏற்றி அக்கரையில் விட்டது குதிரை. இரண்டும் கர்வமின்றி நண்பர்களாக வாழ்ந்தன.

# நுளம்பு




நுளம்பு இரத்தம் உறிஞ்சுவதை பார்த்திருக்கிறீர்கள்தானே? நுளம்பின் இரத்தம் உறிஞ்சும் உறுப்பு புரோபேசிஸ் எனப்படுகிறது.

இது வெறும் குழாய் அல்ல. வெட்டும் கத்தி முனையும், உறிஞ்சும் பம்புகளும் அடங்கிய குழாயே புரோபேசிஸ்.

இது மனிதனின் மேல்த் தோலை ஓட்டை போட்டுக் கொண்டு சென்று அடுத்தாற் போலுள்ள மெல்லிய கொழுப்பு அடுக்கையும் தாண்டி இரத்தம் நிரம்பிய குழாய்க்குள் நுழைகிறது. பின்னர் உறிஞ்சும் பம்புகள், நுளம்பின் வாய்க்குள் மனித இரத்தத்தை உறிஞ்சி பாய்ச்சுகிறது.

# கல்லினான் வைரம்!

உலகிலேயே மிக விலை உயர்ந்த வைரங்களில் ஒன்று "கல்லினான் வைரம்." இதை தென் ஆப்பிரிக்க வைரச் சுரங்கத்தில் கண்டுபிடித்தனர். இத்தனை விலை உயர்ந்த வைரத்தை இலண்டனுக்கு அனுப்பியது எப்படித் தெரியுமா? இரும்புப் பெட்டிக்குள் வைத்து, போர் வீரர்கள் பின் தொடர தனிக் கப்பலிலோ, விமானத்திலோ அனுப்பவில்லை. அட்டைப் பெட்டிக்குள் வைத்து பேப்பர் போட்டுக் கட்டி சாதாரண போஸ்ட் பார்ஸலில் லண்டனுக்கு இந்த விலை மதிப்புள்ள வைரம் அனுப்பப்பட்டது என்றால் அதிசயமல்லவா? இப்படி பாதுகாப்பில்லாத்தனமே அதற்குப் பெரும் பாதுகாப்பாக அமைந்தது.



# துரதிர்ஷ்டம் பிடித்த மரகதக் கல்

விலை மதிப்பற்ற ஒரு மரகதக் கல்லின் சரித்திரத்தைக் கேளுங்கள். 1728 இலிருந்து 1762 வரை அரசாண்ட ஸார் பீட்டர் (3ஆவது) என்பவருக்கு இந்தப் பச்சைக் கல்லை, ஸாரினா எலிஸபெத் கொடுத்தாள். பீட்டர் பிற்காலத்தில், பட்டத்திலிருந்து விரட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். பீட்டரின் மகன் முதலாம் பால், இந்த மரகதக் கல்லை ஒருநாள் அணிந்து கொண்டான். அன்றே அவன் குத்திக் கொல்லப்பட்டான். இரண்டாம் அலெக்ஸாண்டர், எண்பது வருடங்களுக்குப் பிறகு அந்த மரகதப் பச்சைக் கல்லைக் கண்டுபிடித்து தனதாக்கிக் கொண்டான். இவரின் முடிவு? ஒரு பெரிய குண்டு வெடித்து, உடல் சின்னாபின்னமாகத் தூக்கி எறியப்பட்டது தான். இரண்டாம் அலெக்ஸாண்டரின் பேரன் இரண்டாம் நிக்கோலஸ் ரோமனோவர்களின் கடைசி மன்னன், இதை அணிந்து கொண்டான். அவன் போல்ஷீவிக்குகளால் தூக்கிலிடப்பட்டு இறந்தான். இந்த சாபக்கேடுள்ள துரதிர்ஷ்டம் பிடித்த மரகதக் கல் இப்போது, யாரிடம் இருக்கிறது என்றே தெரியவில்லை.



# கண்ணாடி மாளிகை!


★ நீர்யானை உருவத்தில் உருண்டு திரண்டு இருந்தாலும் மனிதனைவிட வேகமாக ஓடும். அதனை சீண்டிவிட்டு தப்பிக்க முடியாது.

★ சிங்கப்பூரில் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் கடலுக்குள் கண்ணாடி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது.

# வெள்ளைக் கண்டம்!

அந்தாட்டிகா கண்டம் 1820 இல் தான் கண்டுபிடிக்கப்பட்டது. எப்போதும் பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளதால் அதனை வெள்ளைக்கண்டம் என்று அழைப்பது உண்டு. இந்தக் கண்டத்தின் கடற்கரை ஓரத்தில் குளிர் மைனஸ் 20 டிகிரியாகவும், உட் பிரதேசத்தில் மைனஸ் 88 டிகிரியாகவும் இருக்கும்.

# விநோத மீன்



ஸ்டிங்ரே என்ற விநோத வகை மீன் கடலில் இருக்கிறது. இதன் உருவமே வித்தியாசமாக இருக்கும். அகலமாக தட்டையாக இருக்கும் இதற்கு நீண்ட கூரிய வாள் போன்ற வால் உள்ளது. இந்த வால் விஷமுடையது.

வாலின் இரு பக்கங்களும் கத்தி போல கூர்மையாக இருக்கும். எதிரிகளை வாலால் சுழற்றி அடித்துக் காயம் ஏற்படச் செய்து இது தப்பித்து விடும். இந்த மீன் தாக்கி மனிதர்கள் கூட உயிரிழந்திருக்கிறார்கள்.

# பொது அறிவுப் பெட்டகம்

★ கோழி இனத்தின் தாயகம் இந்தியா. கி.மு. 2 ஆயிரம் ஆண்டுகளிலேயே இங்கு சேவல் சண்டை நடந்த தற்கான ஆதாரங்கள் உள்ளன.

★ 800 வகை தேள் இனங்கள் உள்ளன. 18 செ.மீ. நீளம் வளரக்கூடிய கருந்தேள் இனம் மிக கொடிய விஷம் கொண்டது.


★ பறவை இனங்களில் பெரியது நெருப்புக்கோழி. ஆப்பிரிக்க நெருப்புக் கோழிகள் 9 அடி உயரம் வரை இருக்கும்.

★ மீன்களில் செயில் பிஷ் எனும் மீன் மிகமிக வேகமாக நீந்தக்கூடியது. இது மணிக்கு 110 கிலோ மீற்றர் வேகத் தில் நீந்தும் ஆற்றல் உடையது.

## சிந்தனைத் துளி

★ உங்கள் விரோதிகளே உங்களைப் புத்திசாலியாக மாற்றுகிறார்கள்

# இந்த வார குட்டீஸ்



பெயர்:-அப்வ்லாஃ
பெற்றோர்:- அஸ்ரப், ஜரினா.
இடம் :- கிண்ணியா.



பெயர்:- லினுஸ்கா
பெற்றோர்:- தயாபரன், பிரியதர்ஷினி.
இடம் :- [illegible]

Educatation Voice of Thinakkural தினக்குரல் - கல்விக் குரல்

33 T I

# අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය 2013 අගෝස්තු
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
# General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

## கணக்கீடு I
## Accounting I

ஆசிரியர்: D. SAM

පැය දෙක
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

✦ 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்கு முன்னுள்ள கூட்டில் "✓" என அடையாளமிடுக. உ-ம் : ✓

1. கணக்கீட்டுத் தகவல்களின் உண்மைத் தன்மையை நிலைப்படுத்த உதவும் காரணி
   - (1) கணக்கீட்டுத் தகவல்களைத் தயாரிக்கவும், வழங்கவும் பயன்படுத்தப்படும் நியமங்களும் அத்தகவல்களின் கணக்காய்வும்.
   - (2) தொழில்சார் கணக்காளரின் தகுதியும், தீர்மான நியதிகளுக்கேற்ப அவரது நடைமுறைகளும்.
   - (3) கணக்கீட்டுத் தகவல்களைத் தயாரித்து வழங்குவதும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையும் நியமங்களை அமுல்நடத்துவதும்.
   - (4) மேற்கூறிய அனைத்தும்
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

2. கணக்கீட்டுப் பொதி யொன்றினை கொள்வனவு செய்வதற்கு முன்னதாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் கீழ்வருவனவற்றுள் எதனைத் தவிர மற்றையவற்றினை உள்ளடக்கும்.
   - (1) பொதி வழங்குனரினால் விற்பனைக்குப் பின்னரான சேவை
   - (2) புதிய பொதிக்கு ஊழியர்களினை பயிற்றுவித்தல்
   - (3) தகவற் தொழில்நுட்ப முகாமையாளரின் தொழில்சார் தமைமைகள்
   - (4) பொதியிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் பயன்கள் செலவு செய்யவேண்டிய கிரயத்திலும் அதிகமானதா என மதிப்பிடுதல்.
   - (5) பொதியின் பணப் பெறுமதி.

3. சாமி ஒரு தனி வியாபார உரிமையாளர் 2011 ஏப்பிரல் 30 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டன. மொத்த சொத்துக்கள் ரூபா 2 500 000 மொத்த பொறுப்புக்கள் ரூபா 500 000 2011 மே மாதம் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.
   1. கடன் விற்பனை ரூபா 625 000 இவ் விற்பனை பொருட்களின் கிரயம் ரூபா 375 000
   2. உரிமையாளர் எடுப்பனவாக ரூபா 150 000 பெறுமதியான பொருட்களைப் பெற்றுக் கொண்டார். இவைகளின் விற்பனை விலை ரூபா 200 000.
   3. மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் (கடன் விற்பனை) ரூபா 30 000 கிரயமான பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.
   4. ஒரு வருமதியாளர் நிறுவனத்திற்கு ரூபா 100 000 செலுத்த வேண்டியிருந்தும் ரூபா 90 000 மட்டும் செலுத்தினார். மிகுதி அறவிட முடியாத கடனாகக் கொள்ளப்பட்டது.

   2011 மே 31 இல் மூலதன இறுதி மீதி
   - (1) ரூபா 2 078 000
   - (2) ரூபா 2 070 000
   - (3) ரூபா 1 570 000
   - (4) ரூபா 1 578 000
   - (5) ரூபா 1 578 500

4. ஒரு சொத்துக் கணக்கில் உயர்வு ஏற்படும் போது நிகழ முடியாத செயல்
   - (1) மெய்க்கணக்கொன்றில் செலவு வைத்தல்
   - (2) ஆட்கணக்கொன்றில் செலவு வைத்தல்
   - (3) கற்பனைச் சொத்துக் கணக்கில் செலவு வைத்தல்
   - (4) மூலதனச் செலவுக் கணக்கில் செலவு வைத்தல்
   - (5) மேற்கூறிய எவையுமல்ல

5. பசில் ரேடேஸ் சிறு செலவுக் கட்டு நிதியாக ரூபா 5 000 ஐ கொண்டுள்ளார்கள். மே மாத காலத்திலிருந்து பின்வரும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன.
   - தேநீர் தயாரிப்புக்கு பொருட்கள் கொள்முதல் செய்ய ரூபா 460 முற்பணம் வழங்கப்பட்டது. சிட்டையின் தொகை ரூபா 356
   - தபாற் செலவு ரூபா 75
   - பிரயாணச் செலவு ரூபா 1 567
   - எழுது கருவிகள் ரூபா 548
   - கணினி உபகரணம் ரூபா 1 200

   சிறு செலவுக் கட்டு நிதிக்கு எவ்வளவு தொகை மீளளிக்கப்பட வேண்டும்.
   - (1) ரூபா 1 254
   - (2) ரூபா 1 210
   - (3) ரூபா 3 790
   - (4) ரூபா 3 746
   - (5) ரூபா 5 680

6. வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று தயாரிப்பது பின்கூறப்படுவனவற்றுள் எவைகளை அடையாளம் காண உதவும்.
   - A – வங்கிக் கணக்கில் ஒரு வாடிக்கையாளரால் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ஆனால் காசேட்டில் பதிவு செய்யப்படாத வைப்புக்கள்.
   - B – காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட ஆனால் பெறுனரால் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்.
   - C – கொடுப்பனவுப் பேரேட்டுக் கணக்கிலுள்ள ஒரு வழங்குனருக்கு செய்த கொடுப்பனவு விடுபாடு.
   - D – காசேட்டில் ஒரு வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட பெறுகை விடுபாடு.

   - (1) A, B மற்றும் C
   - (2) A, C மற்றும் D
   - (3) A மற்றும் C
   - (4) A, B மற்றும் D
   - (5) C, B மற்றும் D

7. வரையறுத்த இப்பால் கம்பனியின் கணக்குப் பதிவாளர் 2011 மார்ச் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்கேடுகளில், பரீட்சை மீதி தயாரித்த பின், பின்கூறப்படும் வழுக்களை கண்டுபிடித்துள்ளார்.
   - ரூபா 15 000 பெறுமதியுடைய கொள்முதற் கிரயப்பட்டியல் ஒன்று

தொடர்ச்சி 20 ஆம் பக்கத்தில்...

கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

- ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்த சம்பளம், சம்பளக் கணக்கில் ரூபா 12 000 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சரியான தொகை ரூபா 120 000ஆகும். காசேட்டில் சரியான தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ரூபா 1 500 வழங்குனர்களிடமிருந்து பெற்ற கழிவு பெறப்பட்ட கழிவுக் கணக்கில் வரவுப் பதிவுத்தொகையாக (debit amount) பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழுக்கள் செம்மையாக்கப்பட முன் தொங்கற் கணக்கில் மீதி யாது?

- (1) ஒரு வரவு மீதியாக ரூபா 120 000
- (2) ஒரு வரவு மீதியாக ரூபா 105 000
- (3) ஒரு செலவு மீதியாக ரூபா 120 000
- (4) ஒரு செலவு மீதியாக ரூபா 106 500
- (5) ஒரு செலவு மீதியாக ரூபா 105 500

8. கீழ்வரும் தகவல்கள் வியாபார மொன்றின் கணக்குப் பதிவேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன.

| | ரூ. |
|---|---|
| ஆரம்ப காசு மீதி | 60 000 |
| ஆரம்ப கடன்பட்டோர் மீதி | 75 000 |
| மொத்த காசு விற்பனை | 650 000 |
| கடன் விற்பனை | 350 000 |
| இக்காலத்தில் வங்கியிலிடப்பட்ட தொகை | 400 000 |
| காசாக செலுத்தப்பட்ட செலவுகள் | 120 000 |
| காசுக் கொள்வனவுகள் | 500 000 |
| இறுதிக் கடன்பட்டோர் மீதி | 45 000 |
| உரிமையாளரின் பண எடுப்பனவு | 15 000 |

காசாளர் காசு மீதியுடன் தலைமறைவாகியுள்ளார் களவாடப்பட்ட காசின் பெறுமதி

- (1) ரூபா 70 000
- (2) ரூபா 90 000
- (3) ரூபா 55 000
- (4) ரூபா 25 000
- (5) ரூபா 67 000

9.ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் மோட்டார் வாகனத்திற்கான முகவராகவுள்ள சலீம் கம்பனியானது அதன் நிலையான சொத்தின் பதிவேட்டைப் பூர்த்தி செய்துள்ளது. ஆதனம், பொறி, உபகரணம் சம்பந்தமாக ரூபா 10 000 க்கு குறைந்த கிரயமுடையவை செலவுக் கணக்கில் மூலதனச் சொத்தாக கருதாமல் கணக்கீடு செய்வது என கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டது. இம்முறையானதை உதாரண மாகக் கொள்ளக் கூடிய எண்ணக்கரு

- (1) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
- (2) விவேக எண்ணக்கரு
- (3) பொருண்மை எண்ணக்கரு
- (4) மாறாத் தன்மை எண்ணக்கரு
- (5) அட்டுறு எண்ணக்கரு

10. "X", "Y", "Z" என்னும் மூன்று பொருட்களை அப்தர் நிறுவனம் விற்பனை செய்கின்றது. 2011 மார்ச் 31 இல் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | உற்பத்தி "X" | உற்பத்தி "Y" | உற்பத்தி "Z" |
|---|---|---|---|
| 2011 மார்ச் 31 இல் இருப்பு | 1 500 அலகுகள் | 750 அலகுகள் | 500 அலகுகள் |
| விற்பனை விலை | 20 | 32 | 60 |
| விற்பனை செய்யும் கிரயம் (மதிப்பீடு) | 5 | 9 | 14 |
| கிரயம் | 12 | 25 | 35 |

2011 மார்ச் 31ல் இருப்பின் பெறுமதி என்ன? (தனித்தனியான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதாகக் கொள்க)

- (1) ரூபா 54 250
- (2) ரூபா 52 750
- (3) ரூபா 62 750
- (4) ரூபா 58 250
- (5) ரூபா 56 000

11. புதிய கணினியொன்றினை கொள்வனவு செய்த பின்னர் அனில் தனது பழைய கணனியினை ரூ. 10 000 இலாபத்திற்கு விற்றார். திரள் தேய்மானம் ரூபா 45 000 ஆகவுடைய 4 ஆண்டுகள் பழமை வாய்ந்த அந்த கணினியினை ரூபா 25 000 க்கு விற்றது ஒரு நல்ல விலையென அவர் கருதுகின்றார். கணனியின் ஆரம்ப கிரயம் என்ன?

- (1) ரூபா 55 000
- (2) ரூபா 60 000
- (3) ரூபா 70 000
- (4) ரூபா 80 000
- (5) ரூபா 98 000

12.பெறுமதி சேர்வரி (VAT) தொடர்பாக சுனில் நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010/2011 நிதியாண்டில் பொருட்கள் காவுவதற்காக றுவான் மோட்டார் விற்பனையாளர்களிடமிருந்து ஒரு மோட்டார் லொறியை 12% பெறுமதி சேர்வரியும் ரூபா 2 000 000 பெறுமதிக்கும் கடனிற்கும் கொள்வனவு செய்தது. சுனில் நிறுவனத்தின் ஏடுகளில் இக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக செய்ய வேண்டிய கணக்கீட்டுப் பதிவுகள்.

| | | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| (1) | மோட்டார் வாகனக் க/கு | 2 240 000 | |
| | றுவான் மோட்டார் விற்பனை க/கு | | 2 000 000 |
| | பெறுமதி சேர்வரி க/கு | | 240 000 |
| (2) | மோட்டார் வாகனக் க/கு | 2 240 000 | |
| | றுவான் மோட்டார் விற்பனை க/கு | | 2 240 000 |
| (3) | மோட்டார் வாகனக் க/கு | 2 000 000 | |
| | பெறுமதி சேர்வரி கட்டுப்பாட்டு க/கு | 240 000 | |
| | றுவான் மோட்டார் விற்பனை க/கு | | |
| (4) | மோட்டார் வாகனக் க/கு | | 2 000 000 |
| | பெறுமதி சேர்வரி கட்டுப்பாட்டு க/கு | 240 000 | |
| | றுவான் மோட்டார் விற்பனை க/கு | | 2 000 000 |
| | பெறுமதி சேர்வரி க/கு | | 240 000 |
| (5) | மோட்டார் வாகனக் க/கு | 2 000 000 | |
| | பெறுமதி சேர்வரி கட்டுப்பாட்டு க/கு | | 2 000 000 |

13. கீழே தரப்பட்டுள்ளனவற்றுள் பொறுப்பொன்றினை ஏற்பிசைவு செய்வதற்கு அவசியமான குணவியல்புகள் எவை?

(i) பொருளியல் வளங்களின் எதிர்கால வெளிப்பாய்வுகள் சாத்தியமானதாக இருத்தல்.
(ii) சட்ட ரீதியாக கட்டுப்படுத்தும் கடனொன்று இருத்தல்
(iii) கடந்த கால ஊடுசெயல் அல்லது நிகழ்வொன்றின் விளைவாக ஏற்படுத்தல்.
(iv) உரிமத்திற்கு தற்கால கடப்பாடொன்று இருத்தல்

- (1) (i), (ii) மற்றும் (iii) மாத்திரம்
- (2) (i), (iii) மற்றும் (iv) மாத்திரம்
- (3) (ii), (iii) மற்றும் (iv) மாத்திரம்
- (4) (i), (ii), (iii) மற்றும் (iv) எல்லாமே
- (5) (i), மற்றும் (ii) மட்டுமே

( அடுத்த வாரம் தொடரும் )

மின்சக்தியில் கணிசமான அளவு வீடுகளில் வெப்பசக்தி பாவனைக்கு பயன்படுத்தப்படுகின்றது. இதனை விருத்தி செய்வதற்கு இரு வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

i. மின்வலு நிலையங்களில் பெற்றோலிய பொருட்களை எரிப்பதற்கு பதிலாக வீடுகளில் பெற்றோலிய பொருட்களை எரித்தல்

ii. மின்வலு நிலையத்தில் எஞ்சினிலிருந்து வெளிவரும் வெப்ப சக்தியை வீடுகளுக்கு தேவையான வெப்பசக்தியாக பயன்படுத்தல் இவ்விரு வழிகளையும் ஆராய்க. (நன்மை தீமைகளை கூறுக.)அத்துடன் வீட்டுக்குத் தேவையான வெப்பசக்தியை பெற பெற்றோலிய பொருட்களை எரிப்பதை குறைப்பதற்கான வழிமுறை ஒன்றை தருக.

(A) a. சில மூலகங்கள் உறுதியானவை ஈயம் Pb போன்ற மூலகங்கள் சமதானிகளைக் கொண்டுள்ளது. சுமதானிகளை கொண்டுள்ள மூலகங்கள் கதிர் தொழிற்பாட்டை நிகழ்த்துகின்றன.

i. சமதானி என்பதால் யாது விளங்குகிறீர்?

ii. $^{214}_{82}Pb$ அணுக்கருவில் உள்ள கருத் துணிக்கைகளின் எண்ணிக்கையும் புரோத்திரன்களின் எண்ணிக்கையையும் தருக.

b. $^{214}_{82}Pb$ என்னும் அணுக்கருவானது βகதிர்களை காலாக்குவதன் மூலம் $^{214}_{83}Bi$ எனும் அணுக்கருவாக மாறுகின்றது. $^{214}_{82}Pb$இன் அரைவாழ்வுக்காலம் 27 நிமிடங்கள் Bi அணுக்கருவானது சில வேளைகளில் λ கதிர்களை காலாக்குகின்றது. சில வேளைகளில் βகதிர்களை காலலாக்கி முறையே. போலோனியம் Po ஆகவும் ரெலூறியம் $T_e$ ஆகவும் மாற்றமடைகின்றது. இவ்விரு காலாக்கலுக்குரிய Bi இன் கரு சமன்பாட்டை எழுதுக.

c. பகுதி bயில் நிகழும் இரண்டு காலலாக்கலிலும் γ (காமா) கதிர்கள் உருவாகின்றன. ஏன் இவ்விரு காலலிலும் வெளிவரும் காமாக்கதிர்கள் வெவ்வேறு சக்திகளை கொண்டிருக்கின்றன எனக் கூறுக.

d. i. $^{214}_{82}Pb$ அணுக்கரு மட்டும் உள்ள போதிலிருந்து $^{214}_{82}Pb$ இன் உயிர்ப்பு நேரத்துடன் மாற்றமடைவதற்குரிய வரைபை அண்ணளவாக வரைக.

ii. அதே வரைபில் $^{214}_{83}Bi$ அணுக்கருவானது $^{214}_{82}Pb$அணுக்கருவிலிருந்து உருவாவதற்குரிய உயிர்ப்பு நேரத்துடன் மாற்றமடையும் வரைபை வரைக.

e. t=0 இல் கதிர் தொழிற்பாட்டு மாதிரி $^{214}_{82}Pb$இன் 2.6μg திணிவுள்ளது.

i. இம்மாதிரி கொண்டிருக்கும் அணுக் கருக்களின் எண்ணிக்கையை கணிக்க.


ii. இக்கதிர் தொழிற்பாட்டில் மாதிரியின் தேய்வு மாறிலியைக் கணிக்க.

iii. t=0 இல் இக்கதிர்தொழிற்பாட்டு மாதிரியின் உயிர்ப்பைக் கணிக்க.

iii. இக்கதிர்தொழிற்பாட்டு மாதிரியின் உயிர்ப்பானது $8.3X10^9Bq$ ஆக குறைவதற்கு எடுக்கும் நேரத்தை கணிக்க.

(5) a. இழையொன்றில் இழுவிசைத் தகைப்பு பிரயோகிக்கப்படுகின்ற போது இழையில் இழுவிசை விகாரம் ஏற்படுகின்றது. இழுவிசைத் தகைப்பு. இழுவிசை விகாரம் என்பவற்றினால் நீர் விளங்குவது யாது?

b. மெல்லிய நீளமான உலோக இழையொன்று நிலைத்த புள்ளியொன்றில் இருந்து நிலைக்குத்தாக தொங்கவிடப்பட்டு இழையின்கீழ் முனையில் திணிவுகள் தொங்கவிடப்படுகின்றன. இழையின் கீழ் முனையில் தொங்கவிடப்பட்ட திணிவுகள் பூச்சியத்திலிருந்து குறித்த பெறுமானம் வரை அதிகரித்து பின் மீண்டும் திணிவுகள் குறைக்கப்பட்டு பூச்சியத்திற்கு கொண்டுவரப்படுகிறது. இதன் விளைவாக இழையில் உருவாகும் இழுவிசை விகாரமானது பிரயோகிக்கப்படும் இழுவிசைத் தகைப்புடனான மாறலை வரைபில் காட்டப்பட்டுள்ளது.




1. இச் செயன்முறையில் வரைபிலுள்ள A,B,C,D ஆகிய புள்ளிகளில் இழையின் நடத்தைகளை விபரிக்க.

2. இழை ஆக்கப்பட்ட பதார்த்தமானது இளகு தன்மை (Ductile) அல்லது உடையும் தன்மை (Brittle) உடையனவா என காரணத்துடன் கூறுக.

3. வரைபில் AD பகுதி எதனை குறிக்கிறது.


4. வரைபிலிருந்து இழை ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் யங்கின் குணகத்தை பெற முடியுமெனின் எவ்வாறு எனக் கூறுக.

5. இழையில் சுமை ஏற்றப்படும்போது இழையின் அலகு கனவளவில் சேமிக்கப்பட்ட சக்தி வரைபிலிருந்து எவ்வாறு கணிப்பீர் எனக் கூறுக.

c. பகுதி (b)இல் விபரிக்கப்பட்ட இழையின் ஈர்க்கப்படாத நீளம் 3.0m உம் குறுக்குவெட்டுப்பரப்பு $2.8X10^{-7}m^2$ வரைபில் இழையானது புள்ளிகள் A,Bயிற்கு இடையிலுள்ளநிலையில் இழையில் 75N சுமை தொங்கவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இழையில் ஏற்படும் நீட்சியை கணிக்க. இழை ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் யங்கின் குணகம் $2.1X10^{11}pa$

(6) A அல்லது Bயிற்கு விடைதருக.

A. a. மின்னியக்கவிசையையும் மின்னழுத்த வேறுபாட்டையும் சக்தியின் அடிப்படையில் வேறுபடுத்துக.



படம் 1

b. படத்தில் காட்டியவாறு E மின்னியக்க விசையும் rஉட்தடையையும் உடைய மின்கலமொன்று R தடைக்கு படத்தில் காட்டியுள்ளது போல் இணைக்கப்பட்டுள்ளது. முடிவிலித்தடையுள்ள வோல்ற்மானி தடைR இற்கு சமாந்தரமாக இணைக்கப்பட்டுள்ளது.

i. ஆளியொன்றைப் பயன்படுத்தி வோல்ற்மானியால் மின்கலத்தின் மின்னியக்க விசை அல்லதுமின்கலத்தின் முனைகளுக்கு குறுக்கேயான மின்அழுத்த வேறுபாட்டை அளக்கலாம். இதற்குரிய ஆளியுடன் கூடிய சுற்றை வரைக.


ii. ஆளியானது மூடியுள்ள நிலையிலா அல்லது திறந்துள்ள நிலையிலா


a. மின்கலத்தின் மின்னியக்க விசையை

b. மின்கலத்தின் முனைகளுக்கு குறுக்கேயான அழுத்த வேறுபாட்டை அளக்கும்

iii. சுற்றினூடான மின்னோட்டம் I இற்கான தொடர்பை E,V,r ஆகியவற்றில் பெறுக.

C. மாணவனொருவன் வெப்பநிலை அளப்பதற்கான கருவியாக சுற்று ஒன்றை அமைத்தான் (படத்தில் காட்டியுள்ளது போல்) மின்கலமானது9V மின்னியக்க விசையையும் புறக்கணிக்கத்தக்க உட்தடையையும் உடையது. வோல்ற்மானியானது முடிவிலித் தடையுடையது தேமில்ரரின் (Thermistor) வெப்பநிலைக்கும் தடைக்குமான வரைபு மேலே காட்டப்பட்டுள்ளது. ( வெப்பதடையி)



படம் - 2

i. சுற்றில் மாறாத்தடை 5 KΩ இணைக்கப்படுவது ஏன் அவசியம் விளக்குக.

தொடர்ச்சி 22 ஆம் பக்கத்தில்...


ii. இக்கருவியானது (Probe) $0^0C$இலிருந்து $30^0C$வரையான வெப்பநிலை வீச்சினை அளக்கப்பயன்படுத்தப்படுகிறது.

1. $30^0C$ இல் உள்ள தேம்ஸ்ரரின் தடையை வரையை பயன்படுத்தி கணிக்க.

2. இதிலிருந்த $30^0C$ இற்குரிய வோல்ற்மானியின் வாசிப்பை கணிக்க


iii. தேம்ஸ்ரரின் வெப்பநிலை $25^0C$ ஆக உள்ள போது வோல்ற்மானியின் வாசிப்பு 5.3V வோல்ற்மானியானது 0 -10v வீச்சுடையது படம் 2இல் உள்ள சுற்றிற்கு இந்த வோல்ற்மானி வெப்பநிலை அளத்தலுக்கு பயன்படுத்தப்படுவதனால் ஏற்படும் பிரதிகூலம் ஒன்று தருக.

d. பகுதி C இல் சுற்றை பரீட்சிப்பதற்கு மாணவன் சுற்றை கீழே உள்ளவாறு மாற்றியமைத்தான்.




CROவின் திரையில் ஒரு சதுரத்தின் பக்க நீளம் 1.0cm, CROஆனது பின்வரும் நிலையில் செப்பம் செய்யப்பட்டுள்ளது. (Timebase) நேரம் $5.0msc m^{-1}$ y தட்டு (அழுத்தம்) = $5.0Vcm^{-1}$ இருவாயியானது இலட்சியமானது எனக்கருதி பகுதி C(iii) இற்குரிய CRO வின் திரையில் தோற்றமளிக்கும் வளையியை வரைக. (தேமிஸ்ரர் 250C வெப்பநிலையிலுள்ளபோது)

B. விரிகையாக்கியாக திரான்சிற்றர் பிரயோகிக்கப்பட்டுள்ள ஒரு சுற்று கீழே தரப்பட்டுள்ளது.




a. i. இச்சுற்றில் காட்டப்பட்டுள்ள திரான்சிற்றரின் குறியீட்டுக்கு அமைய அது எந்த வகையான ஒரு திரான்சிற்றர் எனக் குறிப்பிடுக.

ii. இச்சுற்றில் திரான்சிற்றர் எந்த உருவமைப்பில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

b. i. காலி மின்னோட்டம், அடி மின்னோட்டம், சேகரிப்பான மின்னோட்டங்களுக்கு இடையேயான தொடர்பை எழுதுக.

a. i. $C_1, C_2, C_3$ ஆகிய கொள்ளவிகளால் ஆற்றப்படும் தொழில் யாது?

b. காலி மின்னோட்டம் 2mA அடியின் அழுத்தம் காலியின் அழுத்தத்திலும் 0.6Vஅதிகமாகும் அடிமின்னோட்டம் புறக்கணிக்கப்படுகின்றது.

i. 10KΩ தடையிலுள்ள மின்னோட்டம் I யைக் கணிக்க.


ii. சேகரிப்பான காலி அழுத்த வேறுபாட்டைக் கணிக்க.

iii. காலியின்அழுத்தம் என்ன?

iv. தடை R இன் பெறுமானத்தை கணிக்குக.

## பகுதி B – அமைப்புக் கட்டுரை

(1) நிலையாகவுள்ள சூடான பலூன் ஒன்றிலிருந்து 1.5Kg திணிவுடைய பொருள் ஒன்று விடுவிக்கப்படுகிறது. வரைபானது பொருளினது வேகம் நேரத்துடன் மாறுவதை காட்டுகிறது.




i. a. பொருள் இயங்கிய நேரம் 16Sec வரை விடுவிக்கப்பட்ட பொருளினது ஆர்முடுகல் எவ்வாறு மாறுகின்றது என்பதை கணிப்புக்கள் இன்றி விபரிக்க?

.................................................................................................

.................................................................................................

b. விடுவிக்கப்பட்ட பொருளில் தொழிற்படும் இரண்டு விசைகளை கூறுக?

.................................................................................................

.................................................................................................

c. பகுதி (b) யில் கூறப்பட்ட விசைகள் காரணமாக எவ்வாறு ஆர்முடுகலானது பகுதி (a)யில் கூறப்பட்டவாறு மாறுகின்றது எனக் கூறுக.

.................................................................................................

.................................................................................................

d. பொருள் விடுவிக்கப்பட்டதிலிருந்து 5Sல் பொருளின் ஆர்முடுகலை வரைபை பயன்படுத்தி கணிக்க.

.................................................................................................

.................................................................................................

e. விடுவிக்கப்பட்ட பொருளானது முதல் 16Secகளில் வீழ்ந்த தூரத்தை அண்ணளவாக கணிக்க.

.................................................................................................

.................................................................................................

f. பகுதி (e) யை பயன்படுத்தி 16Sec நேரத்தில் பொருளில் ஏற்பட்ட அழுத்த சக்தி மாற்றத்தை கணிக்க.

.................................................................................................

.................................................................................................

g. பகுதி (e) யை பயன்படுத்தி 16Sec நேரத்தில் பொருளின் இயக்க சக்தியில் ஏற்பட்ட மாற்றத்தை கணிக்க.

.................................................................................................

.................................................................................................

h. பொருளில் ஏற்பட்ட அழுத்த சக்தி மாற்றமும் இயக்கசக்தி மாற்றமும் ஒன்றிற்கு ஒன்று சமனாகவில்லை ஏன்?

.................................................................................................

.................................................................................................

(தொடரும்)

# குழந்தைகளைத் தாண்டினால் பேய் ஓடிவிடும்



குழந்தைகள் நலமாக வாழவேண்டும் என்பதற்காக, வினோத பழக்கங்களைக் கடைபிடிக்கும் வழக்கம் நம் நாட்டில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் உள்ளது. ஸ்பெயின் நாட்டிலும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக வினோத விழா ஒன்றைக் கொண்டாடுகின்றனர்.

எல் கொலாச்சோ (El colacho) என்ற பெயரில், ஜூலை மாத இறுதியில் ஸ்பெயின் நாட்டின் கொஸ்டிலோ டா மியூரிகா மாகாணத்தில் இத்திருவிழா நடக்கும். ஒரு வாரம் தொடர்ந்து நடக்கும் இந்தத் திருவிழாவின் போது ஆண்கள் மத போதகர்களைப் போல உடையணிந்து கொள்வர். வீதிகளில் பச்சிளம் குழந்தைகள் வரிசையாக கிடத்தப்படும்.





ஆண்கள் ஆவேசமாக ஓடி வந்து அக்குழந்தைகளை ஒரே பாய்ச்சலில் தாண்டுவர். அப்போது, அக்குழந்தைகளின் பெற்றோர், ஆனந்தக் கூச்சலிடுவர். அதன்பின் குழந்தைகள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டு வீடுகளுக்கு எடுத்துச் சென்று விடுவர். குழந்தைகள் பிறக்கும் போது, அவற்றின் அழுகுரல் மற்றும் வாசனையை வைத்து, பேய்கள் குழந்தைகளைப் பற்றிக் கொள்ளும் என்று ஸ்பெயினில் ஒரு நம்பிக்கை உண்டு.

மத போதகர்கள் போல வேடமணிந்த ஆண்கள் குழந்தைகளைத் தாண்டும் போது பேய்கள் துரத்தியடிக்கப்படும் என்று அந்நாட்டு மக்கள் உறுதியாக நம்புகின்றனர். இத்திருவிழா, 1620 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

# சீனாவில் படுபயங்கரமாக பரவி வரும் ஃபயர் பேஷியல்

முகம் மற்றும் உடலில் திகுதிகுவென நெருப்பை எரியவைக்கும் படுபயங்கர பேஷியல் சிகிச்சை சீனாவில் பரவிவருகிறது. பெண்கள் மத்தியில் மிகவும் பிரபலமானது பேஷியல் சிகிச்சை.

சாதாரணமாக முதலில் முகத்தில் கிரீம் தடவி காயவிடுவார்கள். காய்ந்த பின்பு அகற்றினால்,முகம் பளபளப்பாகும். சுருக்கங்கள் நீங்கும். வெள்ளரி, மூலிகை, நீராவி என இதில் ஏகப்பட்ட வகைகள் உண்டு.

ஆனால் சீனாவில் ஃபயர் பேஷியல் என்ற அதிபயங்கர பேஷியல் சிகிச்சை முறை தற்போது பரவி வருகிறது.

சீன மொழியில் இதனை ஹூலியாவ் என்கிறார்கள். பெண்ணை படுக்க வைத்து ஸ்பெஷல் அமிர்தம் என அழைக்கப்படும் கிரீமை முகம் முழுக்க தடவுகிறார்கள். பின்பு, அல் கஹோலில் நனைத்த டவலால் முகத்தை மூடுகிறார்கள்.

பின்னர், கற்பூரம் போல ஏதோ ஒரு கட்டியை இரு கண்களுக்கும் நேர் மேலாக டவல் மீது வைத்து எரியவிடுகிறார்கள். திகுதிகுவென்று தீ எரிகிறது. இதன்மூலம், ஸ்பெஷல் அமிர்தம் சூடாவதால் முகத்தில் உள்ள சுருக்கங்கள், தேவையற்ற அழுக்குகள், கரும்புள்ளிகள் நீங்குகின்றன. புத்துணர்ச்சி கிடைக்கிறது. முகம் இளமையாகிறது என்கின்றனர் அழகு சிகிச்சை நிபுணர்கள்.

நெருப்பு எரிவதால் தோல் கருகிவிடும் என பயப்பட வேண்டாம். தோலுக்கு இதமான சூடு மட்டுமே கிடைக்கிறது. உடல் முழுக்க ஹூலியாவ் சிகிச்சை செய்துகொண்டால், இளமை திரும்பும். உடல் எடை குறையும். சளி, இருமல் பாதிப்புகள் நீங்கும். நெருப்பு சம்பந்தமான சிகிச்சை என்பதால் கவனமாக செய்ய வேண்டியது அவசியம் என்கின்றனர்.





# இசை பயிற்சி அல்ல உணர்ச்சி!

## நம்நாட்டு கலைஞர் ஷமீல்

எல்லா புகழும் இறைவனுக்கே...!

உலகின் ஆதாரமான இறைவனின் பெயரால் ஆரம்பிக்கிறேன்.

ஹாய் உதயசூரியன் நண்பர்களே...

நான் ஷமீல். இலங்கையில் இசைத்துறைக்கு நான் அறிமுகமாகி இந்த வருடத்துடன் ஒன்பது ஆண்டுகள் ஆகின்றன.

நான் ''கனவின் கருவில்...'' என்னும் பாடலின் மூலம் இசையமைப்பாளனாக, பாடலாசிரியராக, பாடகராக அறிமுகமானேன்.

இசை எனக்கு அறிமுகமானது பெற்றோர் மூலமாகவே. அதனால், எனக்கு இசை மீதான ஆர்வம் என்பது அதிசயத்தக்க ஒரு விடயமாக இருக்கவில்லை. ஆனால் புதிதாக பாடல்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது ஒரு புதிய முயற்சி.

திருகோணமலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் நான் இசைத்துறையை தேர்ந்தெடுப்பதற்கு முக்கிய காரணம் ஊடகங்கள்தான்.

முதன் முதலாக பேட்டியெடுத்து என்னை உற்சாகப்படுத்தியது காண்டீபன் அண்ணா தான். சக்தி வானொலி மற்றும் அபர்ணா அண்ணா, காண்டீபன் அண்ணா, கஜமுகன் அண்ணா, டயானா, கணாதீபன் அண்ணா, பிரஜீவ் எல்லோருக்கும் இந்த இடத்தில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் பிறகு எனக்கு முகவரி தந்தது சக்தி தொலைக்காட்சியின் இசை இளவரசர்கள் நிகழ்ச்சிதான். சியா அண்ணா, சமந்த ராஜ் ஆகியோர் எனக்கு களமமைத்துத் தந்தவர்களில் முக்கியமானவர்கள்.

பிறகு சூரியனில் எப்.எம். இல் கிடைத்த வேலை இசை வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இப்போது எத்தனையோ பேருக்கு வேலையின் மகத்துவம் புரிவதில்லை. எனக்குக் கிடைத்த இந்த வேலையை ஒரு கொடையாகவே கருதுகிறேன். முக்கியமாக சூரியன் பொறுப்பதிகாரி நவநீதன் அண்ணாதான் நான் இசைத் துறையில் பிரகாசிக்கக் முக்கிய காரணம். எனக்கு ஒரு வழிகாட்டியாக செயற்பட்டவரும் அவரே. இந்த காலகட்டத்தில் தான் நிறைய பாடல்களை உருவாக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

''எத கேட்டாலும் சூரியன் போல இருக்குமா...'' பாடலில் தொடங்கி இப்போது ஒலிக்கும் ''வான் முழுதும்...'' பாடல் வரை அநேகமான நிலைய குறியிசைகள் செய்துள்ளேன். அதில் 2009 ஆம் ஆண்டு ''எத்தனை நாளாய்...'' என்ற நிலைய குறியிசைக்கு சிறந்த நிலைய குறியிசைக்கான விருது கிடைத்தது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த நிலைய குறியிசைகளில் 90 வீத வரிகள் நானே எழுதியதுதான்.

அத்துடன் முக்கியமாக சூரியன் ஆலோசகர் நடராஜசிவம் அவர்களை நினைவுபடுத்தியாக வேண்டும். வானொலி சம்பந்தமான விடயங்களின் ஊற்று என்றும் அவரை சொல்லலாம். அதில் நானும் கொஞ்சம் பருகிக்கொண்டேன்.

அலுவலக கலைஞர்கள் தவிர்ந்து, எனது பாடல்களுக்காக இலங்கை, இந்தியா, அமெரிக்கா, மலேசியா போன்ற நாட்டுக் கலைஞர்கள் பலருடன் பணி புரிந்துள்ளேன். எனது வாழ்வில் ''கனவின் கருவில்...'' பாடலுக்கு அடுத்தபடியாக பெரிய திருப்பம் தந்தது மழைவிழியின்... பாடல்.

இதன்மூலம் கிடைத்த ஒரு மிகப்பரிய கவிஞர் நண்பன் சதீஷ்காந்த். எனது பாடல்களுக்கு நானே வரி எழுதுவதிலிருந்து சற்று ஒதுங்கக் காரணமாக அமைந்தவர். அவரது அறிமுகத்தின் பின் அவரது பாடல் வரிகள்தான் இப்போது எனது இசையை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் இசையமைப்பாளர் நிக்கி எனது இசையைத் தாண்டிய தொழிநுட்ப அறிவு வளரக் காரணமாக இருந்தவர்.

அமெரிக்க கலைஞர்களுக்காக இசையமைக்கும் போது தான் நிறைய ஒலி பொறியியலாளர்களின் நட்பு கிடைத்தது. எனது பாடல்களில், அன்றிலிருந்து இன்று வரை சண்டைபோடும் சிறந்த ஒளி நயம், அதில் என்றுமே நான் பின் வாங்கியதில்லை. இன்று வரை ஒவ்வொரு பாடல்களும், ஒவ்வொரு வகையாகத்தான் அமைகின்றன. அதன் சிறந்த இசைக் கலவைக்காக கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். இன்னும் எனக்கு திருப்தி ஏற்படாத விடயம் இசை மட்டும் தான்.

எனது வாழ்க்கையில் மனைவி, பிள்ளைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். மனைவியின் ஒத்துழைப்பு கட்டாயம் அவசியம். ஏனென்றால் இசைப்பயண ஆரம்பம் தொடக்கம் இன்று வரை எனக்கு 2 அல்லது 3 மணி நேரம்தான் தூங்கக் கிடைக்கும். அப்படி இருக்க குடும்ப வேலைகளை முழுதுமாக தன் பொறுப்பில் எடுத்து செய்து வருகிறார். என்னை எந்த கஷ்டமும் படுத்தாது எனது பாடலின் முதல் விமர்சகராகவும் எனது மனைவி நௌசியா இருக்கிறார். மகள் சஷா, மகன் ஹசன். இவர்கள்தான் எனது உலகம்.

இப்போது எனது இசைப் பயணம் கடல் கடந்து சென்றுகொண்டிருக்கிறது. பெயர் குறிப்பிட முடியாத தென்னிந்திய திரைப்படத்தில் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இசை குரு ரஹ்மானுடன் பல திரைப்படங்களில் பணிபுரிந்தவரினூடாக எனக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தது இறைவன் சித்தம். இந்தப் படம் முடிவுறும் தருவாயில் உள்ளது. அது பற்றியும் விரைவில் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

புதிதாக இசைத்துறையில் சாதிக்கும் நோக்குடன் வரும் இளைஞர்கள் தொழில் நுட்பத்தில் பின் நிற்க வேண்டாம். உங்கள் மெட்டுகள், இசை சிறப்பாக இருப்பினும், தொழில்நுட்பத்தில் தான் சறுக்கி விடுகிறோம். அதையும் சிறப்பாகக் கவனித்து, இசையை ஒன்றையொன்று குழப்பாத வகையில் அமைத்து, முடிந்தளவு குரல் பதிவில் அந்த பாடலுக்கான உணர்வுகள் வரும் வரையில் முயற்சி செய்து பாருங்கள். கட்டாயம் அதில் உங்களுக்கு வெற்றி இருக்கும்.

இசைப் பயிற்சி அல்ல... இசை உணர்ச்சி...!





எஸ்.ரோஷன்

# தமிழ் முஸ்லிம் உறவை சீர்குலைக்கும் அதிகாரிகள், அரசியல்வாதிகள்

வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற இந்தியன் வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக பரஸ்பர குற்றச்சாட்டுகள் பல்வேறு அமைப்புகளால் முன்வைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, இன முறுகலுக்கான சூழ்நிலைகளும் உருவாகி வருவதாக அவதானிகள் வெளிப்படுத்துகின்றனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இந்திய மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீட்டுத்திட்டம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு 50,000 வீட்டுத் திட்டங்கள் ஒதுக்கப்பட்டு அதன் முதற்கட்ட வேலைகள் நிறைவடைந்துள்ளன.

இவ்வாறு 8036 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இவ் வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள் இடம்பெறுவதாக அவ்வவ் மாவட்ட பொது அமைப்புக்களும் மக்கள் பிரதிநிதிகளும், மக்களும் பல்வேறு முறைப்பாடுகளை முன்வைத்து வருகின்றனர். இம் முறைபாடுகளின் உச்சமாக வவுனியா மாவட்டத்தில் இரு இன மக்களால் எதிர் எதிர் ஆர்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளதுடன் இரு இனங்களுக்கும் இடையில் முறுகல் நிலையும் ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீள் குடியேறியோர் நலன் பேணும் அமைப்பு என்னும் பெயரில் ஒரு அமைப்பை நிறுவி இவ் வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள் இருப்பதாக வெளிப்படுத்தினர். இது தொடர்பாக, அவர்கள் முதற்கட்டமாக அரசாங்க அமைச்சர் ஒருவரின் தலையீடு காரணமாக இந்திய வீட்டுத் திட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு முஸ்லிம் மக்களுக்கு அதிகளவில் வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டி பிரதேச செயலாளர் ஊடாக அரசாங்க அதிபருக்கு முறைபாடு தெரியபடுத்தப் பட்டது.



அதில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, யுத்தத்தில் பாதிப்படைந்தவர்களாக நாம் இருக்க இக்கிடுகொலவ, புத்தளம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்து குடியேறுகின்ற மக்களுக்கு அதிகளவு வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதாகவும் இன ரீதியான விகிதாசாரம் பேணப்படவில்லை எனவும் தெரிவித்திருந்தனர்.

மீள்குடியேறியோர் நலன் பேணும் அமைப்பின் கருத்துக்களுக்கு உரிய பதில் கிடைக்காமையால், அவ் அமைப்பு இந்திய வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவில் முறைகேடு இருப்பதாக சுட்டிக்காட்டி அரசாங்க அமைச்சர் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக வவுனியா தாதியர் கல்லூரியில் இருந்து மாவட்ட செயலகம் வரை ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டு வவுனியா அரசாங்க அதிபர் பந்து ஹரிசந்திரவிடம் மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பல்வேறு கோஷங்களை முன்வைத்த அதேவேளை பிரதேச அமைச்சர் மற்றும் சில முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு எதிராகவும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

இது ஒருபுறம் இருக்க வவுனியா, மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து இன நல்லுறவுக்கான ஒன்றியம் என்னும் பெயரில் புதிய அமைப்பு ஒன்றினை நிறுவி தமிழ் மக்களின் அவ் ஆர்பாட்டத்திற்கு எதிராகத் தாமும் ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இவ் ஆர்ப்பாட்டம் வவுனியா பிரதான பள்ளிவாசலில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மாவட்ட செயலகத்தை வந்தடைந்து அங்கு மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர் வவுனியா நகர் வழியாகச் சென்று பள்ளிவாசலில் நிறைவடைந்தது.

இதில் சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த சில முஸ்லிம் அரச அதிகாரிகளும் நேரடியாக ஈடுபட்டிருந்தனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக சுலோகங்களுடனும் வீட்டுத் திட்டத்தில் முஸ்லிம் மக்களே புறக் கணிக்கப்படுவதாக கோஷங்களை வெளிப்படுத்தி இப் போராட்டத்தை நடத்தினர். பொலிஸாரால் கூட அவர்களை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அப்போராட்டம் இடம்பெற்றதுடன் ஆர்ப்பாட்ட முடிவில் சுலோக அட்டைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

இது, யுத்தகாலத்திலும் கூட ஒன்றுபட்டு வவுனியா மாவட்டத்தில் செயற்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு பிரிவினையைத் தோற்றிவித்துள்ளதுடன், தொடர்ந்தும் முரண்பாடுகள் வலுப்பெற்றே வருகின்றன. பொறுப்பு வாய்ந்த சில அரச அதிகாரிகளினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் அசமந்தப் போக்கும் பொறுப்பற்ற செயற்பாடுகளுமே இந்த நிலை வலுப்பெறுவதற்குக் காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் வவுனியாவுக்கு வருகை தந்த இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் ஜே.காந்தா இவ்விரு தரப்புக்களுடனும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் சந்திப்பை ஏற்படுத்தினார். அங்கு மூன்று கட்டமாக இடம்பெற்ற இச்சந்திப்பில் வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் முறைகேடுகள் இடம்பெறுவதாகவும் அமைச்சர்களின் செல்வாக்கு காணப்படுவதாகவும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை மக்கள் முன்வைத்ததுடன், அரச அதிகாரிகளும் பொறுப்பற்று செயற்படுவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் வீட்டுத்திட்ட பயனாளிகள் விடயத்தை சுயாதீனமாக கண்காணிக்க ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.



இது தொடர்பாக கவனம் செலுத்திய இந்திய உயர் ஸ்தானிகர், வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் குழு அமைப்பது தொடர்பாக கவனம் செலுத்துவதாகவும், பயனாளிகள் தெரிவு செய்கின்றபோது அவர்களது பெயர் விபரங்களை கிராம அலுவலர் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் பொது இடங்களில் 15 நாட்களுக்கு காட்சிப்படுத்த வேண்டும் எனவும் இதில் முறைகேடுகள் இடம்பெற்றால் இந்திய உயர் ஸ்தானிகரின் யாழ் அலுவலகத்தில் முறையிடலாம் எனவும் தெரிவித்ததுடன். இவ் வீட்டுத்திட்டம் வீடற்ற இலங்கையருக்கு வழங்கப்படவில்லை. யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கே வழங்கப்படுவதாகவும் உறுதியளித்தார்.

எனவே, இந்திய உயர் ஸ்தானிகரது வருகை வவுனியாவின் தமிழ் முஸ்லிம் உறவை பாதுகாக்குமா? என்பதை காலமே தீர்மானிக்கும்.

கே.வாசு

# உலகில் நீளமானமுடியைக்கொண்ட பெண்



இந்த உலகத்தில் தன்னை நிலைநாட்டிக்கொள்ளவும் தங்கள் சாதனையை உலகம் முழுவதும் பரப்பச்செய்யவும் ஆண், பெண் பாராமல் முட்டி மோதிக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தன் கூந்தல் அழகினாலேயே உலகை சற்று திரும்பிப்பார்க்கவைத்த பெண் cen ying yuan இவர் guangxi சேர்ந்தவர் உலகில் அதிக நீளமான கூந்தலைக் கொண்ட முதல் பெண் என்ற பட்டத்தை சூடிக்கொண்டவர்.



இவரின் உயரம் 5 அடி ஆனால் இவரின் கூந்தலோ 6அடி 7 இன்சுகள். இவ்வளவு நீளமாக முடியை வளர்ப்பது என்பது சாதாரன விடயமல்ல இவர் கடந்த 11வருடங்களாக முடியே வெட்டாமல் வளர்த்து வந்திருக்கிறார். இருந்தும் ஒவ்வொரு நாளும் இவரின் தலையில் இருந்து உதிரும் முடிகளை சேகரித்து கணக்கெடுத்ததில் ஒரு வருடத்திற்கு 30 கிராம் எடையுள்ள முடிகளை இவர் இழந்திருக்கிறார். இந்த முடியால் என் நாட்டுக்கும் எனக்கும் மிகவும் பெருமையாகவுள்ளது. ஆம் என்னை கடந்து சென்றவர்கள்கூட ஒரு நிமிடம் திரும்பிப்பார்த்து என் முடியைப்பார்த்து வாய் பிளந்து நிற்பதைபார்க்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என இவர் கூறுகிறார்.




மேலும் தற்போது என்னுடைய வயது 44 ஆனால் இதுவரை ஒரு முடிகூட நரைக்கவில்லை. ஆனாலும் இயற்கையின் விதியை யாராலும் மாற்றமுடியாது. எதிர்காலத்தில் என்றாவது ஒருநாள் என்முடி நரைக்கும் பட்சத்தில் என்னுடைய எல்லா முடிகளையும் நரையாக மாற்றிக்கொள்வேன் என்றும் இவர் கூறுகிறார்.

இவர் தினமும் நான்கு தடவை தலைமுடியை சுத்தம் செய்வாராம். இந்த முடி பளபளப்பாக இருப்பதற்காக நாம் இதுவரை கேள்விப்பட்டிராத ஒரு முறையைத் தான் இவர் பின்பற்றி வருகிறார். அதாவது பியர் மூலம் தனது முடியை கழுவுகிறார். அதுதான் தன் கூந்தலின் உறுதிக்கும் பள பளபளப்புக்கும் காரணம் என்று தனது இரகசியத்தை சொல்லி பெருமைப் பட்டுக்கொள்கிறார்.

இன்னொருவரின் உதவி இல்லாமல் இவர் தனது முடியை சீவமுடியாது. 2 அடி உள்ள நாற்காலியின் மீது ஏறி நின்று தான் முடியை சீவிக்கொள்ளவும் அல்லது பின்னலிடவும் முடியுமாம்.

இத்தனை அடர்த்தியாகவும் நீளமாகவும் முடி வளர்வதற்கு எனது பரம்பரையும் ஒரு காரணம். இந்த முடி இன்னும் எவ்வளவு காலத்திற்கு வளருமோ அத்தனை காலமும் அதை பேணி பாதுகாப்பேன் என்கிறார் இந்தக் கூந்தல் அழகி.

ஜி.வீ.எஸ்



## சிவப்பு நிற முச்சக்கர வண்டியில் வருவோரைத் தாக்கும் குரங்கு

குரங்குகள் என்றாலே சேட்டைகளுக்குக் குறைவிருக்காது. ஆனால் இந்த குரங்கு சற்றுவித்தியாமானது. ஆம், சிவப்பு நிற முச்சக்கர வண்டியில் வருவோரை மட்டும் குறிவைத்துத் தாக்குகிறது என்றால் நம்பமுடிகிறதா?

இந்தச் சம்பவம் நடக்கும் இடம் பாணந்துறை மேற்கு மாலமுல்ல பகுதியிலேயே இடம்பெற்று வந்துள்ளது.

சுமார் நான்கு வருடங்களாகத்தான் இந்த குரங்கு இவ்வாறான தாக்குதலில் ஈடுபட்டு வந்துள்ளது. இதுவரை கர்ப்பிணி தாய்மார்கள், தேரர்கள் மற்றும் சிறுவர்கள் என கடந்த நான்கு வருடங்களில் 69 பேரை கடித்துவிட்டு மிகவும் சாமர்தியமாக காட்டுக்குள் தப்பிச் சென்றுவிடுகின்றது.

ஆனால் ஏன் இந்தக் குரங்கு சிவப்புநிற முச்சக்கரவண்டியில் வருவோரை மட்டும் தாக்குகிறது என்றுதான் தெரிவில்லை.

எனவே வீதியில் பயணம் செய்வோரை தாக்கி தொல்லை தருவதால் கடந்த வாரம் இதனை அதிகாரிகள் மடக்கிப் பிடித்து விட்டார்கள். இதை அடந்த காட்டுக்குள் விட்டு விடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வனபாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 21 மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவும் முகமாக ஜி.அழகக் கோன் ஞாபகார்த்தமாக அவரின் பிள்ளைகள் வை.எம்.சி.ஏ.அமைப்பின் ஊடாக நிதியுதவி வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற போது அதிதிகள் மாணவர்களுக்கு காசோலைகளை வழங்குவதையும் பெற்றுக்கொண்ட மாணவர்களையும் இங்கு காணலாம்.

## எதிர்பார்ப்பு

என் வாழ்வில் நடந்தது எல்லாம்
எதிர்பாராத சம்பவங்கள்
நான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது
மரணம் ஒன்றையே
அதுவாவது என் வாழ்க்கையி ல்
என் விருப்பம்போல் நடக்கட்டும்!

க.ஜகத், ஹொப்டன்

## வறுமை

நான் பிறப்பதற்கு முன்பு தான் -
கருவறை
எனும் இருளில் கிடந்தேன்
நான் இறந்த பின்பு - கல்லறை
எனும் இருளுக்குள் செல்லப்
போகிறேன்
இதற்கிடையில் ஏன் வறுமை-
எனும்
வரைபடம் என் விழிகளை
மறைத்து இருளாக்க வேண்டும்
இப்போதாவது விடியல்
தாராயோ
என் தாயகமே!

ச.விஜயபாஸ்கர், நோர்வூட்.

## கவிதை

உன்னைக் காணும் வரை
கவிதை எழுதினேன்
உன்னைக் கண்ட பின்பு தான்
அறிந்தேன்
எனக்கான கவிதை நீ என்று!

ம.கோகிலானி, தலவாக்கலை.

## எழுத்து

பேனாவும்
காகிதமும்
காதலித்ததால்
பிறந்த "குழந்தை"
யுத்தத்தால்
சிந்தப்படும்
இரத்தத்தைக் கண்டு
பேனா வடித்த "கண்ணீர்"

கே.கலைச்செல்வன், பலாங்கொடை.

## கவிக்கே கவிதையா?

என்னைக் கோர்த்து
வடித்தவளுக்கே -ஒரு
கோர்வையா?
உன் வரிசேர்க்க
தவறியிருந்தால் -நான்
அங்கவீனமாகியிருப்பேனே !
உன் தலைப்பில்
உவமை - உருவகம்
எதுகை, மோனை
எதுவுமே அற்று
உண்மைகளை -உன்
வழி நடையில்
பிழையின்றி
பிணைத்தாயே -இப்
பிரபஞ்சம் பார்த்திருந்தேன்!
நீ பெற்ற கவிதையாய்
தாயே....! உனக்கே
ஒரு கவிதையா?!!!

த.தர்ஷன், ஹொப்டன்.

## கடவுள்

கண்ணால் காணாதவனாய்
கற்பனைக்கு எட்டாதவனாய்
அறிவிக்காமலே அறிபவனாய்
அதிசய அன்புடையவனாய்
உள்ளத்தினுள்ளே உறைபவனாய்
உயிர்களுக்கெல்லாம் முதல்வனாய்
இருக்கின்றாயே.

கற்பனையில் நினைக்காத காத்திரமாக
இவ்வுலகைப் படைத்தாயே
பார்க்கும் போதெல்லாம்
பாரில் உன்னைக்
காண்கிறேன் ஐயா,
உன்தரிசனம் கிடைக்க ஏங்குகிறேன்
உன் அசரீரியே எனக்கு ஆயிரம்
ஒளியாண்டுகள்

தேருக்கு அச்சாணிபோன்று
பாருக்கு உன்திருவருளே துணை:

நினைக்கும் போதெல்லாம்
நின்னருளைக்
கொடுக்கின்றாய்
கேட்கும் போதெல்லாம் கேட்காமலே
கொடுக்கின்றாய்
நீயின்றி ஓர் அணுவும்
எங்கும் அசையாதப்பா

என் நாவின் ஒவ்வொரு அசைவும்
உன் நாமத்தையே உச்சரிக்கின்றன
உன்னைப்பார்த்த இருகண்கள்
உன்னை வணங்க
இருகரங்கள்
உன் புகழைப்பாட ஒருவாய்
உன்மொழியைப்பேச ஒரு நா
இவற்றை யெல்லாம்
கொடுத்து இரட்சித்த
உன்னை எங்ஙனம் நான்
போற்றுவேன்!



கருணாகரன் நவதர்ஷன்,
நிருக்கோவில்-01

## இதயமே!

நீ நேசிக்கும் இதயம்
உன்னை தவிக்க
விட்டுச் செல்லும் போது தான்
நீ தவிக்க விட்ட
இதயத்தின் வலி - உனக்கு
புரியும் அன்பே!

தி.சுபா, இறக்குவானை.

## புதுயுகம் படைத்திடு

செத்து மடிவது
ஒரு முறைதான் நண்பா!
சிந்தித்து செயல்படு
செயலில் புயலென
வித்தகம் பேசும்
வீரன் நீயல்ல
விழித்தே எழுந்திடு
பாரினை நீ வெல்ல!
வறுமையிலே தினம்
வாழ்ந்திட்ட போதும்
வலிமை குன்றி
நீ வாழாதே!
பொறுமையால் வாழ்ந்து
போதுமென நீ
பொங்கியெழுந்திடு
புதுயுகம் படைத்திடு!



டிஷாணி மகேஸ்வரன்,
புசல்லாவ.

## கனவு

ஒவ்வொரு நாளும் இரவுக்காக நான்
காத்துக் கொண்டிருக்கிறேன்
உறக்கம் கொண்டு என் கனவில்
உன்னை காணலாம் என்பதால்

டி.அஜீத்குமார், புசல்லாவ.

## என்னவளே!

யன்னலோரம் வழிமேல் விழி
வைத்து காத்திருக்கிறேன்
என்னவளே உன்
வரவை எதிர்பார்த்தேன்

ரா.கஜேன், ஹொப்டன்.

## என் நண்பன்

நண்பா நீ என் நிழல்
நண்பா நீ என் மனசாட்சி
என் சேமிப்புக்குக் கூட
உன் சகிப்பான புன்னகைதான்
என் செல்வத்திற்கே மதிப்பு
உன் புன்னகை நட்புத்தான்
வெறும் அச்சுக் காகிதத்தாளைக்
கண்டு மனம் மாறிவிட
நாம் ஒன்றும் குட்டிச் சுவரில்
இருந்து கொண்டு
கும்மாளமும் கூத்தும்
போடும் நண்பர்களல்ல
எப்போதும் உன் நட்புக்கு மத்தியில்
அச்சடித்த காகிதத்தாள்
அதிகாரம் காட்ட முடியாது
நம் நட்பான வெற்றுத்தாளில்
ஒரு கரும்புள்ளி விழ
வழிவிட மாட்டேன்
மகாத்மா காந்தியோ
ரி.பி.ராஜாவையோ
நான் நேரில் கண்டதில்லை
அவர்களைக் கூட உன்னில்
காண்கின்றேன்
நீ சொல் புத்தியை விட
சுய புத்தி கூடியவன்
உன் நட்பின்றி நான் வாழ்வது
நங்கூரம் இல்லாத
படகைப் போல்
என்றும் என்னை தத்தளிக்க விடாதே!
என் நண்பா.....



மு.கா.முகம்மது அஸ்வர்,
திருகோணமலை.

## வணக்கத்துக்குரிய காதல்

கடதாசியில்
வரையப்பட்ட கிறுக்கல்
ஓவியம் - என் காதல்
இதனால்தான் எளிதில்
அழிக்கப்படுகின்றது.



ப.ஜீவா, அக்கரப்பத்தனை.

க வி தை க ள்

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:-----------------------
முகவரி:-----------------------
தொலைபேசி இல-------------------

# நினைத்ததை முடிப்பவன்! 39

பாலா.சங்குப்பிள்ளை

வல்லவன் - பல்லவன் இருவரும் அந்த அடர்ந்த காட்டுக்குள் சிறிய மின்பொறியுடன் நடக்கலானார்கள். அப்போது மணி இரவு பத்து இருக்கும். பல்லவன் - சஞ்சலத்துடன் வல்லவனைப் பார்த்தான்.

"ரொம்ப நாளைக்கப்புறம் உன்னைத் தேடி வந்தா நீ வழமைபோல அபாயகரமான வேலைக்குத்தான் என்னை அழைச்சிக்கிட்டுப்போறே... இந்த இருட்டுல மிருகங்கள் உலாவுற காட்டுல தனியா ரெண்டு பேரும் பளிங்கு மலைக்கு போய்த்தான் ஆகணுமா....?"

"நிலாவுக்காக அவளோட லட்சியத்துக்காக நாம போய்த்தான் ஆகணும். அவன்கள் பச்சைப் பங்களாவுல இருந்துக்கிட்டு இருட்டை தேடிக்கிட்டிருக்காங்க. ஆனா அது எங்கேயிருக்குன்னு சரியான தகவலை நிலாதானே நமக்கு சொன்னாள். அதை எடுக்கவேண்டிய நேரம் வந்திடுச்சி...."

"ஆனா... இது ரொம்பவும் ஆபத்தான பயணமாச்சே... கரணம் தப்பினா மரணம்..."

"உண்மைதான்... வேறவழி... லட்சியத்தை அடையணும்னா எல்லா எதிர்ப்புகளையும் சமாளிக்கத்தான் வேணும்...."

அவர்கள் மிகவும் மெதுவாக பேசிக்கொண்டே நடந்தார்கள். அன்று பௌர்ணமியாக இருந்தமையினால் நிலா வெளிச்சம் உதவியாக இருந்தது. அந்த நீண்ட ஒற்றையடிப் பாதையில் ஒருவர் பின் ஒருவர் நடந்தார்கள். அந்த காட்டில் புலி, சிங்கம் கிடையாது. காட்டுப்பன்றி, பாம்புகள் இருப்பதனால் சற்றுக் கவனமாகவே நடந்தார்கள். சுமார் ஒருமணி நேர நடையின் பின் அவர்கள் பளிங்கு மலையை அண்மித்தார்கள். ஏற்கனவே, வல்லவன் அந்த இடத்திற்கு வந்திருந்தமையினால் மிக இலகுவாக அவனால் அடையாளம் காணமுடிந்தது. மலையின் உச்சியிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. அவர்கள் அருகில் சென்றார்கள். வல்லவன் - பல்லவனைப் பார்த்தான்.

"இப்போ நாம மேலிருந்து கொட்டுற தண்ணியை ஊடுருவி உள்ளே போகணும்..."

"என்னது தண்ணியை ஊடுருவியா... இப்பவே குளிருது. இன்னும் தண்ணியில நனைஞ்சா உயிரே போயிடுமே...."

"பேசிக்கிட்டிருக்க நேரமில்லை. வேற வழியுமில்லை. வா... தாமதிக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்துத்தான்...."

அதற்குப் பின் இருவரும் பேசவில்லை. மின்னல் வேகத்தில் கொட்டும் தண்ணீரை ஊடறுத்து உள்ளே சென்றார்கள். உள்ளே கற்பாறைகள் இருந்தன. ஒரு இடத்தில் மட்டும் பெரிய ஓட்டையிருந்தது. வல்லவன் சற்று நேரம் நின்றான். பின் அந்த ஓட்டையருகே சென்றான். முயற்சி செய்தால் உள்ளே நுழைய முடியும். ஆனால், இருட்டாக இருந்தது. வல்லவன் - பல்லவனுக்கு குறிப்பால் உத்தரவிட்டவாறு மிகவும் சிரமப்பட்டு அந்த ஓட்டைக்குள் நுழைந்தான். பல்லவன் அவனைப் பின் தொடர்ந்தான். ஓட்டை நீண்டு சென்றது. பின் ஒரு சமதரை தென்பட்டது. வல்லவன் கீழே குதித்தான். இப்படியொரு இடத்தில் நிலா எப்படி கண்டுபிடித்திருப்பாள். ஒரே ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருந்தது.

வல்லவன் மின்பொறியினை அந்த இடம் முழுவதும் பாய்ச்சினான். ஆங்காங்கே தண்ணீர் ஒழுகியது. சில இடங்களில் செடி வளர்ந்திருந்தது. நிலா சொன்ன அடையாளங்களை ஞாபகப்படுத்தியவாறு அவன் மெதுவாக ஆராய்ந்தான்.

"வல்லவா ஒருவேளை நிலா பொய்யான தகவல்களை சொல்லியிருப்பாளா?"

"நிச்சயமாக இல்லை. அவளோட தகவல்கள் எல்லாமே சரிதான். பொய்யாக இருந்தால் இப்படியொரு இடம் இருக்குமென்று நமக்கு எப்படித் தெரியும்...?"

"அதுவும் உண்மைதான். கொஞ்சம் சீக்கிரமா பார்த்தால் நல்லது... நாளைக்கு பரிமளாவை பொண்ணு பார்க்க வாராங்க..."

"அவசரப்பட்டா.... அப்புறம் பட்ட கஷ்டமெல்லாம் பாழாய்ப்போயிடும்...."

சட்டென வல்லவன் நின்றான். சரியாக பத்தடி தூரத்தில் ஒரு கல்லின் மேல் X என்று குறிப்பிடப்பட்டிந்தது. அவன் அதனருகே சென்றான். இரண்டடி கல். தனியாக வெளித்தள்ளியிருந்தது. அவன் அதை அசைத்தான். அது அசைந்தது. பல்லவனின் உதவியுடன் அந்தக் கல்லை சிறிது சிறிதாக அசைத்து வெளியே எடுத்தான். அங்கே அந்த கறுப்பு தோல்பை இருந்தது. அதை இழுத்தான். அதிக பாரமாக இருந்தது. இரண்டு பேரும் சேர்ந்து இழுத்து எடுத்தார்கள். பல்லவன் மின்பொறி வெளிச்சத்தை பாய்ச்ச வல்லவன் அந்த தோல்பையின் திறப்பைத் திறந்தான். உள்ளே.... கட்டிக்கட்டியாக தங்கக்கட்டிகள் வெளிச்சத்தில் மின்னின.







பல்லவனும், வல்லவனும் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனார்கள். அதன் பெறுமதி பல கோடிகள் இருக்கும். அதை வைத்து ஒரு ஊரையே வாங்கிவிடலாம். வல்லவன் அதை மறுபடியும் பத்திரமாக மூடிவிட்டு தூக்கித் தோளில் வைத்துக் கொண்டான். மிகக் கவனமாக அவர்கள் வெளியே வந்தார்கள். சோவென தண்ணீர் கொட்டியது. எங்கேயோ நரியொன்று ஊளையிட்டது. நிலா வெளிச்சம் அந்த இடத்தை பகலாக்கியது.

அவர்கள் மெதுவாக நடந்தார்கள். சட்டென பல்லவன் நின்றான். அவன் கண்கள் கலங்கின.

"என்ன நின்னுட்டே இனித்தான் நாம கவனமா இருக்கணும்.."

"நிலா பாவம், அவளுக்கு நடந்ததைப் போல நம்ம எதிரிக்கும் கூட நடக்கக்கூடாது...."

"உண்மைதான்.... நல்லவங்களைக்விட கெட்டவங்கதான் இங்கே அதிகமா இருக்காங்க...."

அவர்கள் இப்போது அந்த பள்ளத்தாக்கை அடைந்தார்கள். கீழே கிடுகிடு பள்ளமாக இருந்தது. கரணம் தப்பினால் மரணம் தான். அவர்கள் கீழே இறங்க முற்பட்டார்கள். அவர்கள் முதுகுக்குப் பின்புறமிருந்து அந்த கரகரப்பான சத்தம் வந்தது.

"அப்படியே நில்லுங்க... அசைஞ்சா பிணமாயிடுவீங்க...."

(தொடரும்....)

## நூறு தந்திரங்கள்

நரி பூனையிடம் தற்பெருமை பேசிக்கொண்டது. எனக்கு பகைவர்களிடமிருந்து தப்பிக்க நூறு தந்திரங்கள் தெரியும். உனக்கு?

எனக்கு ஒரே ஒரு தந்திரம் தான் தெரியும் என்றது பூனை.

அப்போது பெரிசாக சப்தம் கேட்டது. ஓநாய்களும், வேடர்களும் துரத்தி வரும் இரைச்சல் கேட்டது. பூனை லபக்கென்று மரத்தில் பாய்ந்து உச்சாணியில் ஏறிக்கொண்டது.

நரிக்கு தன் நூறு தந்திரங்களில் எந்தத் தந்திரத்தைப் பயன்படுத்துவது என்ற யோசனையில் காலதாமதமாகி மாட்டிக்கொண்டு உயிர் துறந்தது.

நீதி : சந்தேகத்துக்குரிய நூறு வழிகளைவிட பத்திரமான ஒரு வழியே மேல்.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

14.03.13 முதல் 20.03.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | போட்டி | உயர்வு | வெற்றி | நலம் | புகழ் | மகிழ்ச்சி | பாராட்டு |
| ரிஷபம் | வெற்றி | மேன்மை | நிம்மதி | ஏமாற்றம் | சினம் | இன்பம் | கவலை |
| மிதுனம் | நஷ்டம் | ஆதரவு | புகழ் | பாராட்டு | கவலை | பயம் | செலவு |
| கடகம் | ஆதரவு | முயற்சி | பயம் | நன்மை | பரிசு | ஆசை | கவனம் |
| சிம்மம் | புகழ் | நன்மை | அமைதி | வரவு | நிம்மதி | பக்தி | நன்மை |
| கன்னி | சாதனை | போட்டி | சினம் | உயர்வு | தனம் | சிக்கல் | பெருமை |
| துலாம் | உற்சாகம் | ஆக்கம் | மகிழ்ச்சி | யோகம் | வெற்றி | சுகம் | பக்தி |
| விருச்சிகம் | ஆதாயம் | வெற்றி | சலனம் | முயற்சி | ஏமாற்றம் | ஊக்கம் | தெளிவு |
| தனுசு | ஜெயம் | ஆர்வம் | ஆக்கம் | வெற்றி | ஜெயம் | இலாபம் | வெற்றி |
| மகரம் | சாந்தம் | இலாபம் | எதிர்ப்பு | ஆக்கம் | சுகம் | ஆதரவு | வரவு |
| கும்பம் | மேன்மை | கவனம் | ஜெயம் | அசதி | நலம் | போட்டி | பொறுமை |
| மீனம் | போட்டி | பகை | பக்தி | உதவி | பிரீதி | நிம்மதி | மறதி |

# தமிழ் மொழியில் பிறப்பு சான்றிதழ் வழங்கத் தடை

எமது நாடானது ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பை கொண்டதாக கூறப்படுகின்றது. இருப்பினும், யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஜனநாயகம் இன்று கிடைக்கின்றதா? என்பது கேள்விக் குறியே.

பொதுவாக இன்று ஒரு இனம்சார்பாக அல்லது மொழி ரீதியாக ஒடுக்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. அரச காரியாலயங்களில் தமிழ்மொழி அமுல்படுத்த சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அரசு கூறினாலும், அது அமுல்படுத்தாத சந்தர்ப்பங்களே அதிகம்.

கடந்த 01-02-2013 அன்று கண்டி போதனா வைத்தியசாலையில் பிறந்த தமிழ் தம்பதியினரின் பெண் குழந்தை ஒன்றுக்கு தமிழ் மொழியில் பிறப்புச்சான்றிதழ் தேவை என குழந்தையின் பெற்றோர்கள் கேட்ட போது அங்குள்ள பதிவாளர் தமிழ்மொழியில் பிறப்புச் சான்றிதழ் வழங்க அரசு தடைசெய்துள்ளாக கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நபர் தனது தாய் மொழியில் சகல தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியும் என அரசினால் கூறப்பட்டுள்ள போதும் தனக்கு தமிழ் மொழியில் பிறப்பு சான்றிதழ் வழங்கப்படவில்லையென அரச மொழி தொடர்பான அமைச்சின் காரியாலயத்துடன் தொடர்பு கொண்ட போதும் இதற்கான சரியான பதில் கிடைக்கவில்லை. இது தொடர்பாக கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்த போதும் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என பொலிஸார் கூறியுள்ளனர்.

ஒரு மனிதனின் அடிப்படை உரிமையான தாய் மொழி தொடர்பான உரிமையை வழங்காத அரசு தமிழ் மொழியில் மேடைகளில் உரையாற்றுவது ஒரு செப்படி வித்தையா? என்ற கேள்வி அனைவரிடத்திலும் எழுந்துள்ளது.

எம்.பாஸ்கர், நானுஓயா,

## அட்டன் - நுவரெலியா பிரதான பாதையை முழுமையாக செப்பனிடுமாறு கோரிக்கை

அட்டன் - நுவரெலியா பாதையை நவீனப்படுத்தும் நடவடிக்கைகள் நிதி பற்றாக்குறை காரணமாக அட்டன் - ரதல்ல வரையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அட்டன் - நுவரெலியா பிரதான பாதையின் அட்டன் - கொட்டகலை வரையிலான பாதை தற்போது பெரும்பாலும் காபட் இடப்பட்டுள்ளது. அத்துடன் கொட்டகலை தொடக்கம் தலவாக்கலை, லிந்துலை, ரதல்ல குறுக்கு வழி சந்தி வரையிலும், நானுஓயா, ரதல்ல குறுக்கு வழி சந்தியிலிருந்து நானுஓயா, நுவரெலியா வரையிலான பிரதான பாதையின் இருமருங்கும் அகலப்படுத்தப்பட்டுள்ளதோடு மதில்கள், பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எனினும் ரதல்ல குறுக்குவழிப் பாதையை அகலப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் அட்டன் - நுவரெலியா பிரதான பாதையை நவீனப்படுத்தும் திட்டத்தில் அட்டன் - ரதல்ல சந்தி வரையிலான பாதை மாத்திரம் தற்போதைக்கு நவீனப்படுத்தப்படுமெனவும் ரதல்ல சந்தியிலிருந்து ரதல்ல குறுக்கு வழி ஊடாக நானுஓயா, நுவரெலியா வரையிலான 9 கிலோ மீற்றர் தூரப்பாதை தற்போதைக்கு நவீனப்படுத்துவது நிதிப்பற்றாக்குறை காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் உரிய நிதியொதுக்கீடுகளை மேற்கொண்டு ரதல்ல முதல் நானுஓயா வரையிலான பாதையையும் உரிய காலத்துக்குள் நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அட்டன் நிருபர்


## தையல் பயிற்சி – சாரி பிளவுஸ்

ஒரு மாதத்தில் முழுமையாக சாரி பிளவுஸ் டெய்லரிங் முறைப்படி வெட்டி தைத்துக் காட்டப்படும். அனைத்து சாரி பிளவுஸ் வகைகளும் இந்தியன் முறைப்படி கற்றுத்தரப்படும்.

**வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்**

பண்டாரவளை மார்ச் 18, 19, 22
இடம் - அனு டெய்லர், நேரம் - காலை 10.00 மணிக்கு

பதுளை மார்ச் 21, 28
இடம் - பிரதீப்பா, நேரம் - காலை 10.00 மணிக்கு


வெலிமடை, மார்ச் 20, 27
இடம் - ஒக்ஸ்போர்ட், காலை - 10 மணிக்கு

ஹட்டன், மார்ச் 17, 24
இடம் - சக்தி கல்வி நிலையம், காலை - 11.00 மணிக்கு

இம்மாதம் முதல் தபால் மூலம் தையல் பயிற்சி ஆரம்பமாகவுள்ளது. இப்பயிற்சியை தொடரவிரும்பும் அனைவருக்கும் இலகுவான டெய்லரிங் முறையில் கற்றுக்கொடுக்கப்படும். முழுமையாக தையல்பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

தென்னிந்தியாவில் பயிற்சி பெற்ற திருமதி ராஜேஸ்வரி குமார் அவர்களின் வழிகாட்டலில் கீழ்....


தொடர்புகளுக்கு - 0779643159/ 0711697918




முடி வெட்ட வந்த வழுக்கைத் தலைக்காரர், சலூன்காரரிடம் ஏம்பா, என் தலையிலே தான் முடி ரொம்ப கம்மியா இருக்கு இல்லே. முடி வெட்டறதுக்குப் பாதி பணம் வாங்கிக்கக் கூடாதா?

**சலூன் கடைக்காரர்** : உங்களுக்கு முடி வெட்டறதுக் காக நான் பணம் வாங்கலே சார். முடியைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் பணம் வாங்குறேன்.





என்னோட வீட்டில் எலி ஒன்னு புகுந்து அட்டகாசம் செய்யுது



அதை அடக்க உடனடி யாக ஒரு கும்கி எலி தேவைப்படுகிறது.

மீனாக பிறந்து சாவது என்று முடிவெடுத்துவிட்டால், பொழுது போக்கிற்கு மீன் பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே, பிழைப்பிற்கு மீன் பிடிப்பவனின் வலையில் சிக்கிடு, உன் மரணமும் ஒருவனை வாழ வைக்கட்டும்...!!!


# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

பெத்த பொண்ணுக்கும், பரீட்சைப் பேப்பருக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு. அது என்ன தெரியுமா??

இரண்டையுமே கட்டிக் கொடுக்கிற வரைக்கும் ஒரே டென்ஷன், தலைவலி தான்......

பெத்த பையனுக்கும், பரீட்சை பேப்பருக்கும் உள்ள ஒற்றுமை என்ன தெரியுமா??

இரண்டையுமே திருத்தவே



## படித்ததில் பிடித்தது...

''சின்ன வயதில் உனக்கு வந்த போலியோ...
இன்னும் உன்னை விட்டு அது போலியோ...
சொட்டு மருந்து தொண்டைக்குள்ள போலியோ...
போன மருந்தும் ஒரு வேளை போலியோ''...!




அம்மா: வாசல்ல என்னடா சத்தம்?
மகன்: பழைய பொருள் ஏதாவது இருக்கிறதா என்று ஒரு ஆள் கேட்கிறார் அம்மா.
அம்மா: உங்கள் அப்பா வீட்டில் இல்லை என்று சொல்.



## இலவசமாக உணவு இல்லை!

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் பிறந்த நாளையொட்டி அந்த தேசத்திலிருந்த அறிஞர்களெல்லாம் அவரைப் புகழ்ந்து பாடல்களைப் பாடிக் குவித்தனர்.

அவர்களிடம் ராஜா ''அறிஞர் பெருமக்களே! உங்கள் அறிவுத் திறமையைக் கண்டு வியந்து போகிறேன். ஆனாலும் இந்த அறிவுத் திறமை என்னைப் புகழ்வதில் மட்டும் இருந்து வீணாகி விடக் கூடாது. எதிர்கால சந்ததியினருக்கு உங்கள் அறிவு மிகவும் பயன்பட வேண்டும். ஒரு சாமான்ய மனிதனுக்குக் கூட புரியும்படி உங்கள் அறிவின் மூலம் ஏதேனும் சொல்ல வேண்டும் என்றார்.

அறிஞர்கள் கூடி தங்களுக்குள் விவாதித்து, பின்னர் ராஜாவிடம், ''ஏற்கனவே முன்னாள் இருந்த அறிஞர்கள் கூறியதை விட புதிதாக சொல்ல ஒன்றும் இல்லை'' என்று கருத்துத் தெரிவித்தனர்.

மனம் மிக மகிழ்ந்த ராஜா, ''அப்படியா! அந்த அறிஞர்கள் கூறியதை எல்லாம் எளிய மொழியில் அப்படியே தொகுத்துக் காண்பியுங்கள்'' என்றார்.

அறிஞர்கள் மீண்டும் கூடினர். ஒருவாறாக ஆராய்ந்து அனைத்துக் கருத்துக்களையும் தொகுத்தனர். ராஜாவை அணுகிய அறிஞர்கள் குழு பெருமிதத்துடன் , ''அரச பெருமானே! அனைத்தையும் தொகுத்து விட்டோம். இதோ பாருங்கள்'' என்று கூறி தொகுப்பை நூறு நூல்களாக ஆக்கிக் கொடுத்தனர்.

ராஜா மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இருந்த போதிலும் அவர் அறிஞர்களை நோக்கி, ''உங்கள் திறமையைக் கண்டு வியக்கிறேன். என்றாலும் சாமான்யமான ஒருவனை நோக்கி நூறு நூல்களைப் படி என்றால் அவனால் அது எப்படி முடியும்? ஆகவே இந்த நூறு நூல்களைச் சுருக்கிக் கொண்டு வாருங்கள்'' என்றார்.

அறிஞர்கள் மிகவும் கஷ்டப்பட்டு நூறு நூல்களின் சாரத்தை ஒரே நூலாக ஆக்கி ராஜாவிடம் சமர்ப்பித்தனர். மகிழ்ந்து போன ராஜா மீண்டும் அறிஞர்களைப் பாராட்டினார். ''ஆனால் அறிஞர் பெருமக்களே! இந்த ஒரு நூலையும் கூடப் படிக்க முடியாத படி ஏழை மக்கள் எத்தனையோ பேர் இருப்பார்கள் அல்லவா! இதை இன்னும் சுருக்கிக் கொண்டு வாருங்கள்'' என்றார்.

அறிஞர்கள் ஓயாது விவாதித்து இறுதியாக ஒரு பக்கத் தில் அனைத்தையும் சுருக்கிக் கொண்டு வந்து ராஜாவிடம் சமர்ப்பித்தனர்.

அதைப் படித்துப் பார்த்த ராஜா,''ஆஹா, மிக மிக அற்புதம். என்றாலும் ஒரு சிறு குறை எனக்கு இருக்கிறது. இந்த ஒரு பக்கமும் கூடச் சற்று அதிகம் என்றே எனக்குத் தோன்றுகிறது. இதை ஒரே வரியில் சுருக்க வேண்டுமே. உங்களால் முடியாதது ஒன்று உண்டா, என்ன?''

அறிஞர்கள் குழு தீவிரமாக விவாதித்தது. இறுதியில் அறிஞர்கள் தங்கள் முடிவை ராஜாவிடம் ஒரு சிறிய ஓலை நறுக்கில் எழுதிக்கொடுத்தனர்.

அதைப் படித்துப் பார்த்த ராஜா துள்ளிக் குதித்தார். ''இதை.. இதைத் தான் நான் எதிர்பார்த்தேன். எல்லாவற்றையும் கரைத்துக் குடித்த நீங்கள் சாரத்தை வடித்துத் தந்து விட்டீர்களே! இதை சாமான்யனும் புரிந்து கொள்வான்'' என்று மகிழ்ந்து கூறி அந்த வாசகத்தை அறிஞர்களின் வாசகமாகத் தன் தேசமெங்கும் பறையறிவித்தான்.


அந்த வாசகம் என்ன தெரியுமா?
''இலவசமாக உணவு கிடைக்காது''
(There is no free lunch)
என்பது தான் அந்த வாசகம்!




100 கிலோ அரிசி மூட்டை தூக்குபவனுக்கு அதை வாங்க சக்தி இல்லை. 100 கிலோ அரிசி மூட்டை வாங்குபவனுக்கு அதைத் தூக்க சக்தி இல்லை.



# குழந்தைகளை பலிகொள்ளும் பாம்பின் சாபம்



ஒரே குடும்பத்தில் அடுத்தடுத்து 6 குழந்தைகளின் மரணங்கள்!

அந்தக் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு 12 வயதிற்கு மேல் ஆயுள் நீடிப்பதேயில்லை.

இந்தக் குடும்பத்திற்கு அப்படியென்ன சாபமோ என ஊர் மக்கள் கூட அரற்றிக் கொள்வார்கள்.

இந்தத் தொடர் மரணங்களுக்கு என்ன காரணம்? விடைதேடி சாமியார் ஒருவரிடம் சென்ற அந்தக் குடும்பத்திற்கு அதிர்ச்சித் தகவல் கிடைத்திருக்கிறது!

அந்தக் குடும்பத்தில் ஆரோக்கியமாக, கொழுகொழுவென அழகுப் பதுமைகளாக வலம் வரும் குழந்தைகள், சிறு காய்ச்சல் அல்லது வயிற்றோட்டத்தில் கூட திடீரென தன் மூச்சை நிறுத்திக் கொள்வதன் காரணம் ஒரு சாபம்!

மருத்துவத்தைத் தாண்டி விந்தையாக நடக்கும் இந்தச் சம்பவம் நடப்பது அட்டன் பிரதேசத்திலுள்ள ஒரு தோட்டத்தில் வசிக்கும் ஒரு அப்பாவிக் குடும்பத்திற்குத்தான்.

கடந்த 20 ஆண்டுகளுக்குள் அடுத்தடுத்து 6 குழந்தைகளை வாரிக் கொடுத்துவிட்டு நிற்கிறார்கள் அக் குடும்பத்தினர்.

(பெயர், இடம் மாற்றப்பட்டுள்ளது) நுவரெலியா பிரதேசத் தோட்டமொன்றிலிருந்து திருமணமாகிப் போனவள் தேவி! கணவனின் குடும்பம் தேவியின் குடும்பத்திற்கு மிகப் பரிச்சயமானது. கணவனின் தந்தையும், தேவியின் தந்தையும் சிறுவயதில் ஒன்றாக ஒரே தோட்டத்தில் வளர்ந்தவர்கள்.

தேவிக்கு முதலில் ஒரு பெண், அடுத்து ஒரு ஆண் என இரண்டு குழந்தைகள் பிறந்தன. இதனிடையே வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த தேவியின் தங்கை சுமதிக்கும் தேவியின் கணவனின் தம்பி ராஜலிங்கத்திற்குமிடையே காதல் மலர்ந்தது. இரு வீட்டாரும் காதலுக்கு பச்சைக் கொடி காட்ட திருமணம் இனிதே நிறைவேறியது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேவியும், சுமதியும் ஒரே நேரத்தில் கர்ப்பம் தரிக்க, தேவியின் முதல் இரு குழந்தைகளும் நுவரெலியா பிரதேசத்திலுள்ள பாட்டி வீட்டுக்கு சிறிது காலம் அனுப்பப்பட்டனர். வயிற்றில் குழந்தையை சுமந்தபடி மற்ற இரு குழந்தைகளையும் பராமரிக்க முடியாததால் இந்த ஏற்பாடு.

பாட்டி வீட்டில் இரு குழந்தைகளும் மிக நன்றாகவே பராமரிக்கப்பட்டனர். மூத்தவளுக்கு வயது 4, இளையவனுக்கு வயது ஒன்றரை. குழந்தைகளின் மழலை மொழி கேட்டு அந்த முதியவர்கள் புளங்காகிதம் அடைந்தார்கள்.

ஆனால், இந்த மகிழ்ச்சி நீடிக்கப் போவதில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. தேவியின் பிரசவத்திற்குப் பின் மீண்டும் தேவியின் வீட்டுக்கு குழந்தைகள் அனுப்பப்பட்டனர்.

சுமார் 2 மாதங்கள் கடந்திருக்கும் தேவியின் பெற்றோருக்கு அந்த அதிர்ச்சித் தகவல் வந்து சேர்ந்தது.

தேவியின் ஒன்றரை வயது ஆண் குழந்தை திடீரென இறந்து விட்டது என்று.

அந்தக் குடும்பம் குழந்தை பிரிந்த வேதனையிலிருந்து மீள்வதற்குள் அடுத்து இன்னொரு பேரிடி, சுமதியின் குழந்தையும் திடீரென நோய் வாய்ப்பட்டு இறந்தது.

இதன்பிறகு இருவருக்கும் பிறந்த 6 குழந்தைகள் இப்படித்தான் திடீர் திடீரென மரணத்தைத் தழுவிக் கொண்டன. இரு குடும்பத்திலும் இப்போது எஞ்சியிருப்பது ஒரேயொரு பெண் குழந்தை மாத்திரமே!

இரண்டு தொடக்கம் 12 வயது முடிவதற்குள் எல்லாக் குழந்தைகளுமே இறந்திருக்கின்றன. பச்சிளம் குழந்தைகளை மண்ணுக்கு வாரிக் கொடுத்து விட்டு பெற்றோர் பதறித் துடிப்பதே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதனிடையே தேவியின் தந்தையும் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.

இந்நிலையில்தான் தேவியின் கணவரது கடைசித் தம்பிக்கும் திருமணம் நடந்திருக்கிறது. அந்தப் பெண் பெற்ற குழந்தையும் பிறந்து இரண்டு நாட்களிலேயே மரணத்தைத் தழுவிக் கொண்டது.

இக்குடும்பத்தில் நிகழும் தொடர் மரணங்கள் பற்றிக் கேள்விப்பட்ட பெண்வீட்டார் முதலில் அதிர்ச்சியடைந்தனர். பின் இதற்கு என்ன காரணம் என அறியும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அவர்கள் ஒரு சாமியாரை அணுகினர். அவர் காளியம்மன் பக்தர். கத்திமேல் நின்று அருள்வாக்கு சொல்வார், சோழிகளைப் போட்டும் நடந்தது, நடக்கப்போவதைச் சொல்வார் என்று பலரும் சொல்ல தேவியின் குடும்பத்தினர் நம்பிக்கையோடு அவரைப் பார்க்கச் சென்றனர்.

அங்கே சில மந்திர உச்சாடனங்களின் பின் அவர் சொன்ன தகவல் அவர்களை நிலைகுலைய வைத்தது.

இந்தக் குடும்பத்தில் பிறக்கிற எந்தக் குழந்தையும் உயிரோடு இருக்காது. இது ஒரு நல்ல பாம்பின் சாபம் என்றார்.

★★★

சுமார் 50 வருடங்களுக்கு முன் நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவம் இது! தேவியின் தந்தையும் அவள் கணவனின் தந்தையும் சிறுவயது நண்பர்கள். இளைஞர்களாக இருந்த இருவரும் மூங்கில் வெட்டுவதற்காக காட்டுக்குச் சென்றிருந்தார்கள். அங்கே மூங்கில் வெட்டிக் கொண்டிருந்த போது அருகிலுள்ள மூங்கில் தூரில் ''உஷ்... உஷ்......'' என்று ஒரு சத்தம்.

இருவரும் புதர்களை விலக்கிக்கொண்டு சென்று பார்த்த போது, நீண்ட ஒரு பாம்பு படுத்துக் கிடந்தது. இருவரும் துணிச்சலோடு தூரத்திலிருந்து கோடரியை பாம்பின் மீது வீசினார்கள். உஷ்.... என சீறியது பாம்பு இருவரும் தொடர்ச்சியாக கல், கட்டை என கையில் கிடைத்த பொருட்களையெல்லாம் தூக்கி அடித்தார்கள், ஆனாலும் பாம்பு அங்கிருந்து செல்லவில்லை.

இருவரும் தொடர்ந்து தாக்க நீண்ட நேரத்திற்குப் பின் பாம்பு புதருக்குள் சென்று மறைந்தது. இருவரும் அந்த இடத்திற்கு அருகில் சென்று பார்த்தார்கள். பளபளவென பாம்பு முட்டைகள். இதுவும் நாளை பாம்பாகும் என நினைத்து இருவரும் கற்கள் தடிகளால் முட்டைகளை உடைத்து சேதப்படுத்தினர்.

அந்தப் பாம்பு இறக்கும் தருவாயில் தந்த சாபம்தான் இப்படி குழந்தைகளைப் பழிவாங்குவதாக சாமியார் சொல்கிறார்.

இதைக் கேட்பவர்கள் கட்டுக் கதை என்கிறார்கள். தேவியின் குடும்பமோ சாமியாரின் சொற்படி பாம்பிற்கு பரிகார பூஜை செய்து விட்டு நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.

தகவல் தொகுப்பு - அபி

திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய் என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு கிலி பிடித்துவிடும். நள்ளிரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் சும்மா ஒரு கயிற்றுத்துண்டைக் கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
தினக்குரல் இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.
















எப்படி இருந்த ஐஸ் இப்படி ஆயிட்டாங்களே...!








அந்தக் கால
சூப்பர்
ஜோடிகள், இந்தக்
காலத்தில்...!







# கலாட்டா



## ஆல்பம்

எப்படி இருந்தவங்க இப்படி ஆயிட்டாங்களே என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. ஆம்! காலம் எப்படிப் போகிறது என்பதை பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. நடிகை ரேவதியின் ஆல்பம் இங்கே உங்களுக்காக!

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68,எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 14.03.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.